உ

சிவமயம்

வீரபாண்டிய கட்டப்பொம்மன்

சா. சண்முகவேலு

வீரபாண்டிய
கட்டபொம்மன்

*

சா. சண்முகவேலு

*

ரதி பதிப்பகம்

தெற்கு ஆவணி, : மதுரை.

என்னுல் முடிந்தது!

கட்டபொம்மன் சரித்திரத்தை அஸ்திவாரத்தடம் புரளாது கோர்ப்பது எத்தனை சிரமமென்பது, அதில் ஈடுபட்டோர்க்குத்தான் தெரிதலாகும். அவ்வகையிலே யான் எந்த அளவு தேறியிருக்கிறேனென்பது—தூத்துக்குடி நகரத்தில் மட்டும் இந்நாடகம் ஆறு முறைகள் அமோக ஆரவாரத்துடன் நடைபெற்றிருக்கிறதென்பதிலிருந்து தெரிய ஏதுவாகும். இந்நாடக ஏடை நீங்கள் படிக்கத் துவங்கிவிட்டால் போதும்; கடைசி வாக்கியம் முடிய, நீங்கள் எவ்வுணர்ச்சியிலீடு பட்டு தத்தளித்தீர்களென்பதை உங்களுக்கே சொல்ல வராது! அந்த அளவிற்கு சுதந்திரச் சிறகடித்து ஓட்டமாய் ஓடும்!

சா. சண்முகவேலு

நாடகாசிரியர்.

வீரபாண்டிய : :
: : கட்டபொம்மன்

— ● —

மறை ஒலி

[நிகழ்ச்சியில் பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டையைக் காட்டி, மறைவாகத் திரைக்குப்பின் இருந்து பேசுதல்]

ஒலி: ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் உலகிலே அவதார புருஷர்கள் தோன்றி மறைகிறார்கள்! ஆம்!! அவர்களின் பரம்பரையிலே அவதரித்து, முடி தரித்து, தமிழ் நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்டு, பலனற்று, வெள்ளையர்களால் தூக்கிலிடப்பட்டு, துடி துடித்து உயிர் நீத்த வீரப் பெருமன்னன் தான் "வீர பாண்டிய கட்டப்பொம்மன்"

இவர், சுமார் 168-வருடங்களுக்கு முன்னால், பாஞ்சையை மிக வாஞ்சையோடு அரசாண்டு வரும் போது இருந்த கோட்டைதான் இந்தக் கோட்டை. அன்று இருந்த நிலையில், இன்று இந்த இடம், கோட்டை

யின் அஸ்திவாரத்தைக்கூட காட்டாமல் மறைத்துக் கொண்டது, தேசத் துரோகிகளின் வஞ்சகத்திற்குப் பயந்து, அன்று ஆடல் பாடல்களையும், வேடிக்கை விநோதங்களையும் வீணுகானம் செய்துகொண்டிருந்த இந்த இடம்—இன்று ஓடை மரங்களையும், ஓநாய் ஊளைக் குரலையும் தான் உள்ளடக்கிக் கொண்டிருக் கிறது என்றால், அது நம் நாட்டைப் பொறுத்த துர திருஷ்டம் தான்.

நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்த இந்நாளிலே, இந்நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்டு, பலனற்று, மாண்டுபோன, மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மன் ஞாபகமாக நினைவு நாள் ,கொண்டாடுவார்களா தியாகி கள்? வெள்ளையரின் குண்டுகளால் இடிந்து, சரிந்து மண்ணோடு மண்ணாக மறைந்து போன, பாஞ்சாலங் குறிச்சியை ஒரு பூஞ்சோலையாக மாற்றி, அதைச்சுற்றி கோட்டை ஒன்றைக்கட்டி, அதன் நடுவே "வீரபாண்டிய கட்டபொம்மன்" சிலை ஒன்றை நட்டு, "எட்டுத் திக்கும் புகழ்பெற்ற வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவு நாள் இதுதான்" என்று வெட்டிமுரசு கொட் டும் நாள் வருமா? மாண்டுபோன இம்மன்னனின் ஆத்மா சாந்தியடையும் வகைக்காகவாவது தியாகிகள் இதைச் செய்வார்களா? செய்வார்களா இதை?

[பேச்சு முடிந்ததும், கோட்டை நிழலை நிறுத்தி, திருச்செந்தூர் கோபுர நிழலைக் காட்டி, மணி ஓசை கிளப்பி, பிறகு மணி மண்டப நிழலைக் காட்டி, மணி யோசை ஒலித்துக்கொண்டேயிருக்க, நிழல் மறைதல். மணியோசை லேசாக கேட்டுக்கொண்டேயிருக்கிறது]

காட்சி 1

இடம்: ஊர்ப்பொது வீதி

உறுப்பினர்: கணவன், மனைவி, ஒரு பையன்

நிலைமை: மூவரும் வீதியைப்பார்த்தபடி மகிழ்ச்சியுடன் வருகின்றனர்.

கணவன்: (மனைவியைப் பார்த்து) நம்ம நாடு நல்ல நாடு!

மனைவி: பஞ்சமே வராத பாரத நாடு, மச்சான்!

பையன்: தாத்தா! தாத்தா! என்ன தாத்தா இது விடாமே மணிச்சத்தம் கேட்குதே?

கணவன்: இதா! இதுதான் திருச்செந்தூரிலே முருகப்பெருமானுக்கு நடக்கிற காலை பூசையை, நம்ம கட்டபொம்மு மகாராசாவுக்கு தெரியப்படுத்த அடிக்கிற மணி! தெரிஞ்சுதா?

பையன்: போ தாத்தா! நீ பொய் சொல்றே!

மனைவி: ஆமாங்க, திருச்செந்தூரு எங்கேயிருக்கு, பாஞ்சாலங்குறிச்சி எங்கேயிருக்கு, ரெண்டுக்கும் எம்மாந்தூரமிருக்கு? அங்கே அடிக்கிற மணி இங்கே கேக்குதுன்னு பிள்ளையை ஏய்க்கிறீங்களே!

கணவன்: அட போக்கிரீங்களா! நம்ம ஆத்தா ஆணையா நிசமாகத்தான் சொல்றேன். (என்று இருவருடைய தலையிலும் கை வைத்து அடித்தல்)

மனைவி: ஆமா, அது எப்படி மச்சான் கேக்கும்?

கணவன்: கேக்கும்! கேக்கும்!! அதுக்குத்தாண்டி திருச்செந்தூரிலே இருந்து, நம்ம ராசா அரண்மனை வரைக்கும் கொஞ்ச கொஞ்ச தூரத்துக்கு ஒவ்வொரு மணியாகக் கெட்டி

யிருக்கிறாரு! முதல்லே முருகன் சந்நிதியிலே பூசை ஆரம்பிச்சதும், திருச்செந்தூரிலே முதல் மணி அடிக்கும். அந்த சத்தம் கேட்டு அடுத்த மணியடிக்கும். இப்படியே ஒவ்வொரு மணியா அடிச்சி, அடிச்சி அரண்மனை வரை கேக்கும். இந்த சத்தத்தை ராசா கேட்டு, ராசாவும் அரண்மனையிலே பூசை செய்வாரு! இப்பக்கூட பூசை செஞ்சிக்கிட்டுத்தான் இருப்பாரு.

(திருப்புக் காட்சி)

இடம்: கட்டபொம்மன் பூஜை அறை.

உறுப்பினர்: கட்டபொம்மன், சக்கம்மாள்.

நிலைமை: முருகப் பெருமான் விக்கிரகத்திற்கு முன் பாட்டுப்பாடி இருவரும் வணங்கிக்கொண்டிருக்கின்றனர். பாட்டு முடிந்ததும் மணியோசை கேட்டல்.

சக்கம்மாள்: சுவாமி! மணியோசை கேட்கின்றது. திருச்செந்தூரிலே முருகனுக்குப் பூஜை நடக்கிறது போலும்!

கட்டபொம்மன்: ஆம் தேவி! முருகனைப் பிரார்த்தித்துக் கொள்.

(இருவரும் கைகூப்பி வணங்குதல்)

கட்ட: ஏ! செங்கதிர்ச் செல்வனே! சேவற்கொடியோனே! உன்னருளால் இந்நாட்டு மக்கள் எந்நாளும் நல்வாழ்வு வாழ அருள்புரிய வேண்டும் பிரபு!

(சக்கம்மாள் தீபாராதனை காட்டி அரசரிடம் கொடுத்தல். அவர் அதைத் தொட்டு வணங்குதல்)

காட்சி 2

இடம்: *அரசியல் அரங்கம்.*

உறுப்பினர்: *கட்டபொம்மன், ஊமைத் துரை, மந்திரி தானுபதி, சபையோர், புலவர்கள், வெண்சாமரை வீசும் பெண் கள், நடனமாது, ஆலன் துரை.*

நிலைமை: *சிம்மாசனத்தில் அரசர் கட்ட பொம்மன் அமர்ந்திருக்க நடன மாதுக் கள் நடன மாடுகின்றனர். நடனம் முடிந்ததும் சேவகன் ஒருவன் உள்ளே வந்து மகாராஜாவை வணங்கி நிற்கிறான்.*

சேவகன்: *மகாராஜா! வெள்ளையன் ஒருவன் வந்திருக்கிறான். அவனுக்கு கிழக்கிந்தியக் கம்பெனியாம்; சமூகத்தைப் பார்க்கணுங்களாம்.*

கட்ட: *யாரது? வெள்ளையனு! எங்கு வந்தான்? சரி, அழைத்து வா உள்ளே.*

(சேவகன் வணங்கி விட்டுப் போகிறான்)

கட்ட: *தானுபதியாரே! எட்டப்பர் இப்போது எப்படி இருக் கிறார்?*

தானுபதி: *அவர் கொட்டம் கொஞ்சம் அடங்கி விட்டது பிரபு!*

(ஆலன் துரை சபையை நோக்கி வந்து ஆங்கில முறையில் வணங்குகிறான்)

கட்ட: *வாரும்! நீர் யார்? எங்கு வந்தீர்?*

ஆலன்: அரசே! வாணிபம் செய்வதில் நானிலத்தில் புகழ் பெற்றதும், காலாட்படை, குதிரைப்படை, துப்பாக்கிப்படை, பீரங்கிப்படை முதலியன கொண்டு—எதிரிகள் தொலைய வீரமுழக்கம் செய்து வெற்றி முரசு கொட்டும் தீரர்கள் பலர் நிறைந்ததுமான கிழக்கிந்தியக் கம்பெனி கிளைச்சங்கம் திருநெல்வேலியிலிருந்து வந்த தூதன் யான்! எதிரிகளுக்குக் காலனும் என் பெயர் ஆலன்.

கட்ட: வெறும் வார்த்தை! தற்புகழ்ச்சி! வந்த காரியம் என்ன?

ஆலன்: அரசே! இத்தேசம் கம்பெனியாருடையது. ஏனையப் பாளையப்பட்டுக்காரர்கள் எல்லாம் குறையேதுமின்றி திறை செலுத்தி வருகின்றனர். ஆனால் தங்களது கப்பம் மட்டும் ஆண்டு ஆறு ஆகியும் இன்னும் வந்தபாடில்லை. தாங்கள் கம்பெனிக்கு கட்டவேண்டிய கப்பத்தை ஆண்டுக்கு ஆயிரம் பொன்னாக, ஆறு ஆண்டுகளுக்கும் ஆறாயிரம் பொன் கொடுத்து அடிபணிந்திருக்க வேண்டும் என்பது கம்பெனியாரின் கட்டளை.

கட்ட: நிறுத்து, உன் நிதானமற்ற வார்த்தைகளை! பொறுத்துப் பொறுத்துப் போனால் குணம் தெரியாது எதிர்த்து எதிர்த்துச் சீறுகின்றாய்! பாஞ்சாலங்குறிச்சியான் பயங்கொள்ளியல்ல; எதையும் பட்டவர்த்தனமாகப் பேசி முடிவு செய்துகொள்ளும் பட்டத்தரசன்! நன்றாயிருக்கிறது...வரிகேட்க வந்த வகையை நினைக்குந்தோறும் சிரிப்புத்தான் வருகிறது. (சிரிப்பு) நாற்பத்தேழு தலைமுறையாக நாங்கள் இந்நாட்டை ஆண்டு வருகிறோம். யாரும் யாருக்கும் இதுவரை வரி செலுத்தினதில்லை. இப்போது எங்கிருந்தோ இங்கு வந்தவனுக்கு வரி!

ஆலன்: இப்போது இந்த நாடு எங்களுக்குச் சொந்தம்!

கட்ட: எந்த நாடு உங்களுக்குச் சொந்தம்? நீங்கள் பிறந்த நாடே உங்களுக்குச் சொந்தமில்லாமல், பிழைக்க வழியில்லாமல் அந்நிய நாட்டை அண்டிவந்து வியாபாரம் செய்ய வந்த வணிகனுக்கு வையகம் ஆளும் உரிமை! திறமை இருந்தால் என்னிடம் வரி வாங்கும் உரிமையைப் பார்த்துக் கொள்கிறேன். நீர் போம்.

ஆலன்: வீண் வார்த்தை பேசி வம்பு விளைவித்துக்கொள்ள வேண்டாம். கும்பினிப்படையை எதிர்ப்பது முடியாத காரியம். ஏன், இந்த ஆலன் ஒருவனே போதும், உங்கள் அனைவரையும் அழிக்க!

ஊமை: என்ன சொன்னாய்? நீ ஒருவனே போதுமா! முதலில் உன்னை முடித்துக்கட்டி விடுவேன். எச்சரிக்கை!

ஆலன்: ஆலன் காலன் என்பது நினைவிருக்கட்டும்!

ஊமை: ஆலன் காலனாகலாம்! ஆனால் அக்காலனையும் காலால் எட்டி உதைத்த வேலன் தந்தை இவ்வேந்தன் என்பதை மறந்துவிட வேண்டாம்!

ஆலன்: வீண் அட்டகாசம் வேண்டாம். வரிப்பணம் கொடுக்க முடியுமா, முடியாதா?

கட்ட: என்ன! வரிப்பணமா கேட்டாய்? வரிப்பணம் என்று கேட்ட உன் வாயை என் வாளுக்கு இரையாக வாங்கியிருப்பேன். ஆனால் தூதன் என்ற காரணத்தால் உன்னை சும்மா விட்டிருக்கிறேன். உயிர்மீது ஆசையிருந்தால் ஓடிவிடு இவ்விடத்தை விட்டு. தூது வந்தவனது உயிரை வாங்கிவிட்டான் என்னும் வன்பழிக்கு அஞ்சி இதுவரை பொறுத்திருந்தேன். உன் இனத்தோடு நீ சேர வேண்டுமென்ற எண்ணமிருக்

தால், மரியாதையாகத் தப்பி ஓடி விடு! (ஆலன்போகத் தயங்குதல்)

கட்ட; என் தயங்குகிறாய்! உன்னை ஒருவரும் ஒன்றும் செய்ய மாட்டார்கள். தைரியமாகப் போ! (ஆலன்பயந்து மெதுவாகப் போதல்)

கட்ட: முன்னே போகச்சொல்லி பின்னே வந்து பேடித் தனமாக வெட்டி வீழ்த்தும் உங்களைப்போன்ற கோழையல்ல தமிழன! தைரியமாகப் போகலாம். போ! வரிப்பணம் எதுவும் கொடுக்க முடியாது என்று கண்டிப்பாகக் கூறி விடு.

காட்சி 3

இடம்: கம்பெனியார் சபை. (திருச்சி)

உறுப்பினர்: கலெக்டர் எட்வர்ட், வெபு துரை, ஜாக்ஸன் துரை, ஆலன் துரை.

நிலைமை: எட்வர்ட் துரையின் தலைமையில் சபை கூடியிருக்கிறது. ஆலன் துரை ஆங்கில முறையில் வணங்கி நிற்கிறான்.

எட்வர்ட்: வாரும் ஆலன்! போன காரியம் என்னவாயிற்று?

ஆலன்: கட்ட பொம்மனுக்கு கர்வம் தலைக்கேறிவிட்டது. வரி கேட்கப் போன என்னையும் வாளுக்கு இரையாக வாங்கிவிடு வேன் என்று பயமுறுத்திவிட்டான். இனி நாம் சும்மா இருப்பதில் பயனில்லை.

எட்: ஜாக்ஸன், என்ன செய்யலாம்?

ஜாக்: பாண்டியன்! அவனைச் சும்மாவிடக்கூடாது. வரிப்பணம் கேட்கப் போனவனையும் வாய்ப் பேச்சால் அடித்து விரட்டி விட்டான் வீணன். சுத்தப் பொய்யனாக இருக்கிறான். இவனை இப்பொழுதே அடக்காவிட்டால், கும்பினியார் நிலை குலைந்து போகவேண்டியதுதான். தன் நாட்டின் அருகே யுள்ள எட்டப்பன் என்பவனுக்கும் இவன் எவ்வளவோ தீங் கிழைத்திருப்பதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது.

வெபு: நானும் இதுவரை பார்த்ததில் கட்டபொம்மன் நல்ல வீரன் என்று தான் தெரிகிறது. அதனால் அவன் வரிப்பணம் கொடுக்காததும் குற்றமில்லை. அது வீரனின் இயல்புதான். அதிலும் இங்கு நாம் அரசாட்சி செலுத்தவேண்டுமென்றால் இவ்வீரனுடைய நட்பு நமக்கு அவசியம் வேண்டும். துணிந்து செய்தால் தொல்லைதான் வரும். அல்லலை அழைப்பது அழ கல்ல பிரபு! இந்த விஷயத்தில் எதையும் யோசித்தே செய்யவேண்டும் என்பதே என் விருப்பம்.

ஆலன்: (திடீரென எழுந்து) ஜாக்ஸன் சொன்னது சரியான யுக்திதான். அதுவும் நல்லதே. நாம் நேரிடையாக எதிர்த்து நிற்கக்கூடாது.

எட்: நீங்கள் சொல்லும் கருத்துப்படி இங்கிருந்து நெல்லைக்கு கலெக்டராக ஒருவரை அனுப்பி, அன்பாய்ப் பேசி, உறவு உண்டாக்கி, உரிமையைப் பெறலாம் என்று எண்ணுகிறேன். சரிதானே?

வெபு: ஆமாம். கட்டபொம்மனை எதிர்த்து சதி செய்வதற்குத் தகுந்த ஜாக்ஸன் துரை நம்மிடம் இருக்கும் போது, அதைப் பற்றி நமக்கென்ன கவலை?

எட்: சபாஷ்! ஜாக்ஸனே அதற்குத் தகுதி வாய்ந்தவர். ஜாக்ஸன்! நீர்தான் இனி திருநெல்வேலியின் கலெக்டர். உமக்குத் துணையாக பெரிய பட்டாளம் ஒன்று தருகிறேன். நீர் சென்று பாண்டியனைக்கண்டு, முறையோடு பேசி, திறை வசூலிக்க ஏற்பாடு செய்யும்.

ஜாக்: கட்டளைக்கு கீழ்ப்படிகிறேன் (வணங்கி நிற்றல்)

காட்சி 4

இடம்: அரண்மனை.

உறுப்பினர்: கட்டபொம்மு, ஊமைத் துரை, தானாபதி, சேவகன்.

நிலைமை: எல்லோரும் ஆசனத்தில் அமர்ந் திருக்கின்றனர். சேவகன் கட்டபொம் மனை வணங்கி, கடிதம் கொடுக்கிறான். கட்டபொம்மன் அதை வாங்கி படித் துப் பார்த்தல்.

கட்ட: மந்திரி! புதிதாக நெல்லைக்கு அதிபதியாக ஜாக்ஸன் என்பவரைக் கம்பெனியார் திருச்சியிலிருந்து அனுப்பியிருக் கிறார்கள். அவரைப் போய்ப் பார்க்க வேண்டுமாம்! அதிகாரத் தோரணை ஒன்றுமில்லை; அன்பனைப் போன்றுதான் கடிதம் வரைந்துள்ளார். போய்ப் பார்க்கலாம் என்று எண்ணுகிறேன். உமது அபிப்பிராயம்?

தானாபதி: ஓஹோ! சண்டைக்கு வந்த 'சண்டப்பிரசண்டன்' இப்போது சலாமிடுகிறான் போலும்! நல்லது; மகாராஜா போய்ப் பார்ப்பதும் நல்லதுதான். ஏதாவது ஓர் முடிவு செய்து கொள்ளலாமல்லவா!

கட்ட: (சேவகனைப் பார்த்து) இன்னும் ஒரு வாரத்தில் வந்து பார்ப்பதாகப் போய்ச் சொல்!

ஊமை: அண்ணு! இது என்ன மதியீனம்? தாங்கள் இப்போது துணிந்து நிற்பது சரியென்று எனக்குத் தோன்றவில்லை.

கட்ட: தம்பி! நீ சொல்வதன் நோக்கம்?

ஊமை: அண்ணு! நாடு விட்டு நாடு வந்து, நாடிப் பிழைக்கும் இந்த நாடோடிப் பயலை நாம் போய்ப்பார்ப்பதா? சே...சே...! நமக்கு இது அவமானம். இத்தனை காலமும் தங்களை வந்து சேவித்து செம்மையுற்றவர் பலரிருக்க, இந்த வண்மை யற்றவனை நாம் போய் வணங்குவதா? வேண்டவே வேண்டாம்! இதனுல் நமக்கு எவ்வளவு பெரிய தீமை வந்த போதிலும் பாதகமில்லை. அண்ணு! பிரியமிருந்தால் அவன் இங்கு வந்து பார்க்கட்டும்; இல்லையென்ருல் நெல்லையிலேயே கிடக்கட்டும். நாமேன் செல்ல வேண்டும்?

தானுபதி: இளவரசே! தாங்கள் கூறுவது சரிதான். ஆனுலும் புதிதாய் வந்த இவர்கள் நமது நிலையைத் தெரிந்து கொள்ள முடியுமா? அதனுல் நம் பெருமை ஒன்றும் குன்றி விடாது அரசே! எனவே இம்முறை போய் வருவோம்.

ஊமை: அண்ணு! வழக்கத்திற்கு மாருக இன்று நாம் புதுப் பழக்கத்தை உண்டுபண்ண வேண்டாம்.

கட்ட: தம்பி! நீ சொல்வதை நான் மறுக்கத் தயாராக இல்லை. ஆனுலும் வருகிறேன் என்று கொடுத்த வாக்கு மாறுமே என்றுதான் யோசிக்கிறேன். தம்பி! கொடுத்த வாக்கை நாம் எப்போதாவது மீறியதுண்டா? அதற்காகவாவது இம்முறை போய் வருவோம்.

ஊமை: அப்படியானால் சரியண்ணா! ஆனால் நாம் வெகு எச்சரிக்கை யாகவே போக வேண்டும்.

கட்ட: மிகவும் மகிழ்ச்சி. மந்திரி! நெல்லையில் சென்று வெள்ளை யனைக் காண பல்லக்கு தயாராகட்டும்.

தானு: ஆகட்டும் அரசே!

காட்சி 5

இடம்: இராமநாதபுரம், இராமலிங்க விலாசம்.

உறுப்பினர்: ஜாக்ஸன், கும்பினிப்படை, லியட், சேவகர்கள், கட்டபொம்மன், தானபதி, ஊமைத்துரை.

[கட்டபொம்மனும் மற்றோரும் நெல்லை சென்று அங்கு ஜாக்ஸனைக் காணாமல் செய்தி யறிந்து இராமனாதபுரம் வருகிறார்கள்]

நிலைமை: ஜாக்ஸன் ஆசனத்தில் அமர்ந்திருக் கிறார். லியட் பக்கத்தில் இருக்கிறார். கும்பினி படைவீரர் ஓரத்தில் மறைந் திருத்தல். கட்டபொம்மன், ஊமைத் துரை, தானதிபதி பிள்ளை ஜாக்ஸனை நோக்கி வரும்போது, சேவகன் தடுத்தல்.

சேவகன்: (கட்டபொம்மனை நோக்கி) தாங்கள் மட்டும் தான் துரையைக் கண்டு பேசலாம்.

[ஊமைத்துரை தன்னைத் தடுக்கும் சேவகர்களை தள்ளி விட்டு உள்ளே போதல்]

ஜாக்: வாருங்கள்! இப்படி அமருங்கள்! பாஞ்சாலங்குறிச்சியின் அரசர் நீர்தானே?

கட்ட: ஆம்! நான் தான்.

ஜாக்: கட்டபொம்மன் என்பது......

கட்ட: ஆம்! அது என்னுடைய பெயர் தான்.

ஜாக்: ஓஹோ! நீர்தானு பாஞ்சாலங்குறிச்சியின் மன்னன். உம் மீது நிறைய புகார்கள் இருக்கின்றன. நான் உமக்கு முன்னுல் எழுதிய கடிங்கள் எல்லாம் கிடைத்தனவா?

கட்ட: ஆம், கிடைத்தன.

ஜாக்: ஆனுல் அடிக்கடி எங்களுக்கு நீர் சரியான பதில் எழுத வில்லேயே, என்?

கட்ட: பதில் எழுத வேண்டியதற்கு மட்டும் எழுதியிருக்கிறேன்.

ஜாக்: ஆத்தூர், ஆறுமங்கலம் எனும் அயன் கிராமங்கள் இரண் டையும் நீர் அடமாகக் கவர்ந்துகொண்டீரல்லவா! அதற்குக் காரணம்?

கட்ட: காரணம்! அதற்கான காரணத்தைப் பூரணமாக முன்னரே நான் அறிவித்திருக்கிறேன். அதிலும் என் எல்லேக்குள் இருக்கும் நாட்டை நான் காவல் புரிவதில் தவறு என்ன இருக்கிறது? உரிமையை உணர்ந்துதான் அதை உவந்து பாதுகாத்து வருகிறேன்.

ஜாக்: நீர் உமக்கு உரிமையான பாஞ்சாலங்குறிச்சியை பாது காக்கலாம்; வரி வசூலிக்கலாம்; கொள்ளேயடிக்கலாம்; நெல்லே அள்ளலாம். ஆனுல், ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் புகுந்து கொடுமைகள் புரிந்து, ஆயுதங்கள் செரிந்து வரி வசூலித்திருக்கிறீர். இது மன்னிக்க முடியாத குற்றம்!

கட்ட: மன்னிக்க முடியாத குற்றம்! (ஏளனமாக) எது மன்னிக்க முடியாத குற்றம்? கட்டபொம்மனுக்குச் சொந்தமான அருங்குளம், சுப்பலாபுரத்தை எட்டப்பனுக்குத் தானம் செய்தது மன்னிக்க முடியாத குற்றம் இல்லை; திருநெல்வேலியில் பேட்டி தருவதாகச் சொல்லி குற்றாலம், சிவகிரி, சேற்றூர், ஸ்ரீவில்லிபத்தூர், பேறையூர், பவானி, பள்ளிமடை, கமுதி முதலிய இடமெல்லாம் இழுத்து, அலைத்து, அலைக்கழித்து, அலட்சியம் செய்தது மன்னிக்க முடியாத குற்றமில்லை; ஆனால் நீர் சென்ற விடமெல்லாம் நான் சென்று, நீர் சொன்னபடியெல்லாம் நான் உம்மை வந்து பார்க்க வந்ததுதான் மன்னிக்க முடியாத குற்றமோ? நன்றாக இருக்கிறது உன் நாணயமற்ற வார்த்தை! குற்றம் என்று குறித்த உன் நாவை அப்பொழுதே குடலதிரப் பிய்த்து எறிந்திருப்பேன். ஆனால் நண்பர் டேவிஷன் துரைக்காக உன்னை விட்டு வைக்கிறேன். அயல் நாட்டுக் காகம் பறவாது கட்டப்பொம்மன் கோட்டையின்மேல் என்பது நினைவிருக்கட்டும்.

ஜாக்: எங்கிருந்து கொண்டு, யாரிடம் என்ன பேசுகிறோம் என்பது உமக்கு நினைவிருக்கட்டும்.

கட்ட: (சிரிப்பு) பயந்து, வீண் வார்த்தை பேசி பூச்சாண்டி காட்டவேண்டாம்; அழைத்த காரணமென்ன?

ஜாக்: நல்லது! நீர் எங்களுக்குக் கட்டவேண்டிய கிஸ்தியைக் கேட்டால் தர மறுக்கிறீர்; பாக்கியைக் கேட்க வந்தவரிடம், போக்குரைகள் ஆடிப் பொல்லாங்கு செய்திருக்கிறீர்; இது நல்லதல்ல. இனி வரிகளை ஒல்லையில் செலுத்தி வரவேண்டும். இல்லையேல் உமக்குப் பல தொல்லைகள் தொடரும். உள்ளதைச் சொல்லிவிட்டேன்; நல்லதை நாடிக்கொள்ளும்.

கட்ட: துரையே! பாண்டியனிடமா பயமுறுத்தல்? பாண்டிய னிடத்தில் சொல்லும் ஒன்றுதான், கல்லும் ஒன்றுதான். அன்று சொன்ன பதில்தான் இன்றும். தானம் கொடு என்று கேட்டால் தருகிறேன். ஆனால் மானமிழந்து வரிப்பணமாக செப்புக்காசும் கொடுக்க முடியாது.

ஜாக்: தன்னிலை மறந்து பேசும் தமிழனே! பண்ணறிய ஏனை யப் பாளையப்பட்டுக்காரர்கள் எல்லாம் பறை பறையாய் வரி யைக் கட்டி வானுயர வாழ்ந்து வருகின்றனர். நீர் எம்மாத் திரம்!

கட்ட: உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்கவும், கோள் சொல்லி குபேரனாகவும், அறியாமையில் மூழ்கி சுதந்திர ஆர்வமற்று அன்னியனுக்கு அடிவணங்கி வாழவும், எட்டப் பனைப் போல் சில கெட்ட பாளையப்பட்டுக்காரர்கள் விரும்ப லாம். ஆனால் அவர்களைப்போல முகத்தில் கரியைப் பூசிக் கொள்ளும் முழுமூடனல்ல நான்; சுத்த வீரன் என்பது நினைவிருக்கட்டும்.

ஜாக்: ஆத்திரத்தில் அறிவிழக்க வேண்டாம். யோசித்து முடிவு சொல்லும்.

கட்ட: முடிவாகச் சொல்கிறேன்! வரி செலுத்தும் வழக்கம் எம் பரம்பரைக்கு அன்றுமில்லை, இன்றுமில்லை, இனி என்றுமே இல்லை.

ஜாக்: அடக்கும் உம் அறிவிலித்தனத்தை! நீர் மனத்திமிரோடு மதமதத்துப் பேசுகின்றீர். சங்க ஆணையின்பேரில் உம்மை நான் கைது செய்கிறேன். இனி இவ்விடத்தை விட்டு வெளியே போகக்கூடாது. யார் அங்கே? தளபதி லியட்டை வரச்சொல்.

(லியட் கட்டபொம்மனை கைதிசெய்ய வரும் போது கட்டபொம்மன் தன் உடை வாளை உருவி)

கட்ட: *என்னைக் கைதுசெய்யத் துணிவுகொண்டவன் யார்?*

[என்று சொல்லவும், லியட் தன் வாளை உருவி கட்டபொம்மனுடன் சண்டையிடுதல். இது சமயம் வெளியிலேயிருந்த கட்டபொம்மு சிப்பாய்களுக்கும் கும்பினி படைக்கும் போர் மூண்டு பலர் இறக்கின்றனர். போரில் லியட் கட்டபொம்மனுல் குத்தப்பட்டு இறந்து விடுகிறுன், ஜாக்ஸன் ஒளிந்து கொள்கிருர். கட்டபொம்மன் மாளிகையின் மேடைக்கு வந்து அங்கிருந்து 'முத்துராமு' என்ற புரவியின் மீது குதித்து தப்பிச்செல்கின்ருர். ஆனுல் தானுபதிப்பிள்ளை வஞ்சகமாக கைது செய்யப்படுகிருர். சண்டை முடிந்ததும் தானுபதி முன், ஒளிந்து கொண்டிருந்த ஜாக்ஸன் வந்து நின்று)

ஜாக்: *எல்லாம் இவனுல் வந்த விளைவுதான்! தானுபதிப் பிள்ளையாம் தானுபதிப் பிள்ளை! கடைசியில் நம் தளகர்த்தர் அல்லவா இறந்துவிட்டார். கும்பினியார்க்கு இனி என்ன பதில் சொல்வது? (சிறிதுநேரம் யோசித்துவிட்டு) சரி, இவனைக் கொண்டுபோய் சிறையிலடையுங்கள். நாளை திருச்சிக்கு விசாரணைக்குக் கொண்டுபோவோம்.*

தானு: *ஏ, வெள்ளையனே! கெடு நினைவோடு கொடு வஞ்சம் புரிந்து படுபழியை வளர்த்துவிட்டு, இப்போது என் மீதா அடாப்பழியை சுமத்துகின்ருய்? நீ செய்தவினையே உன்னைச்*

சூழ்ந்து கொண்டது; எம்மரசர் வெகுண்டெழுந்தபொழுது அஞ்சி ஓடி ஒளிந்துவிட்டு, இப்போது ஏன் பஞ்சுபோல் பறக்கின்ருய்? நெஞ்சில் கொஞ்சமேனும் உரமிருந்தால் ஏன் வஞ்சனை புரிகிருய்?

ஜாக்: ஏ தானுபதி, நிறுத்து! உனக்கு என்ன தண்டனை கிடைக்கும் தெரியுமா?

தானு: தெரியுமே! மரண தண்டனையை விடப் பெரிய தண்டனை எதுவும் கொடுக்க முடியாதென்று எனக்கு நன்ருகத் தெரியும். சண்டை செய்யத் திறமில்லாத உனக்கு வாய்ப் பேச்சு வேரு? ஒரு கை வீச்சுக்கு ஒன்பது தலை உருளும் எம் வேந்தர் வாள் வீச்சில் அகப்பட்டு வேதனை அடையாமல் இருந்தது உன் அதிர்ஷ்டம் தான். ஓடி ஒளிந்த உனக்கு வெட்கமில்லை? தூ......

ஜாக்: மூடு வாயை! (கன்னத்தில் அறைகிருன்)

தானு: ஏ, வெள்ளையனே! நன்ருயிருக்கிறது உன் கெட்டிக்காரத்தனம். உனக்கு வீரமிருந்தால் கட்டை அவிழ்த்துவிட்டு வா பார்க்கலாம். கட்டிப் பிடித்துக்கொண்டு எட்டி அடிக்கும் உனக்கு வெட்கமில்லை. தூ......இனி ஒரு முறை உன் கை என்மேல் படுமாயின் உன் வம்சமே பூண்டற்றுப் போகும்படி செய்து வீடுவேன்.

ஜாக்: கொண்டு போங்கள் இவனை.

(சிப்பாய்கள் தானுபதியை இழுத்துச் செல்லுதல்)

காட்சி 6

இடம்: திருச்சி நீதிமன்றம்.

உறுப்பினர்: ஜாக்ஸன், தானுபதி, எட்வர்ட், மற்ற துரைகள்.

நிலைமை: எட்வர்ட் துரை தலைமையில் சபை கூடியிருக்கிறது. தானுபதி குற்றவாளிக் கூண்டில் இருக்கிருர்.

எட்: (ஜாக்ஸனைப் பார்த்து) உமது வழக்கைச் சொல்லலாம்.

ஜாக்: அப்படியே! பாஞ்சாலங்குறிச்சி பாளையப்பட்டுக்காரனை கட்டபொம்மு, என்னைப்பேட்டி காண வரும் பாவனையில் நாலாயிரம் வீரர்களுடன் இராமநாதபுரம் இராமலிங்க விலாசத்தில் 9—9—1798 மாலை 5 மணிக்கு வந்து சந்தித்து, என்னுடன் வேண்டாத வார்த்தைகளெல்லாம் பேசி, நம்மையெல்லாம் ஏசி, போருக்குத் தயாராகிவிட்டான். வாள் எடுத்த கட்டபொம்மனை தடுக்கச்சென்ற செயலாளர் கிளார்க்கையும் வெட்டி வீழ்த்திவிட்டு கட்டபொம்மன் ஓடிவிட்டான். ஆனல் எல்லாவற்றிற்கும் காரணம் இதோ நிற்கும் இந்தத் தானுபதி தான்! எனவே இவருக்குத் தக்க தண்டனை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எட்: சரி, நீர் போகலாம். தானுபதிப் பிள்ளை! இவற்றிற்கு இப்போது என்ன பதில் சொல்கிறீர்? கலெக்டர் சொன்னவை எல்லாம் உண்மைதானு? குற்றத்தை ஒப்புக்கொள்கிறீரா? அல்லது அதை ஏதாவது சாக்குச்சொல்லி மழுப்பப் போகின்றீரா?

தாணு: துரை அவர்களே! இந்த நியாயசபையில் ஜாக்ஸன் துரை அவர்கள் இல்லாததையெல்லாம் கூறி என்னைக் குற்றவாளியாக்குகிறார். நடந்த உண்மை இதுதான். கேளுங்கள்! எம்மரசுக்கு ஜாக்ஸன் துரையிடமிருந்து தன்னை நெல்லையில் வந்து காணவேண்டுமென்று 16—8—1798ல் கடிதம் வந்தது. மன்னரும் மனமொப்பி அங்கு போய்ப் பார்த்தார். ஆனால் அவர் அங்கிருந்து குற்றாலம் போயிருப்பதாகவும், அங்கு போய்ப் பார்க்க வேண்டுமென்றும் கேள்விப்பட்ட எமதரசர் அதற்கும் சம்மதித்து குற்றாலத்திற்குச் சென்றார். அங்கும் துரை இல்லை. அது சமயம் அவருடன் சென்ற எங்களுக்குச் சிறிது சந்தேகம் ஏற்பட்டது என்றாலும் சங்கத்தின் நீதியை நினைத்து, யாதொரு தீங்கும் நேராதென்று எண்ணி சிவகிரியில் இருப்பதாகக் கேள்விப்பட்டதும் அவர்களைக் காண அரசர் அங்கும் சென்றார். அங்கும் அவர் இல்லை. இப்படியே ஸ்ரீவில்லிப்புத்தூர், குற்றாலம், சிவகிரி, சேத்தூர், பவானி, பள்ளிமடை, கமுதி இன்னும் சில ஊர்களுக்கெல்லாம் அலைந்து முடிவில் இராமநாதபுரம் இராமலிங்க விலாசத்தில் துரைகள் இருப்பதாகத் தெரிந்து, எமதரசர் பரிவாரங்களுடன் அங்கும் சென்றார். ஆனால் அங்கு வாயில் காப்போன் எங்களைத் தடுத்து எமதரசரைத்தவிர மற்றொருவரும் உள்ளே போகக்கூடாது என்று கூறினான். சதி நடக்குமென்று முன்னரே தெரிந்த எங்களுக்கு எமதரசரை மட்டும் தனியேவிட மனமில்லாமல் அவனைத் தள்ளிவிட்டு நானும், தம்பி ஊமைத்துரை, வெள்ளையத்தேவன் ஆகியோரும் பின் தொடர்ந்து சென்றோம். வந்த அரசரை வரைமுறையின்றி வாய்பேசவே அவர் மனம் குமுறி எழுந்து வந்தார். வந்தவரைப்பற்றி இழுத்தார் துரை. அரசர் உடைவாளை உருவினார்—தடை செய்தோரை மீறிக் கீழே இறங்கிச் சென்று விட்டார். நான் செய்வதறி

யாது அங்கேயே நின்றுவிட்டேன். இவர் ஓடி ஒளிந்து கொண்டார். நீதிமன்றமென்று நம்பி இங்கு உண்மையை உரைக்கிறேன். துரைகள் நியாயமணியாயத்திற்கு தக்க தீர்ப்பு கூறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எட்: உம்முடைய அரசருக்கு அவ்வளவு தைரியம் இருக்கிறதா, என்ன?

தாளு: அவரை நீங்கள் நேரிலே பார்த்தால் அப்போது தெரியும் அந்த உண்மை.

எட்: அவரை இங்கு அழைத்தால் வருவாரா?

தாளு: சமூகத்திலிருந்து கடிதம் போனால் உடனே வருவார், தடையேதும் இராது.

எட்: இடையே இன்னல் பல அடைந்தமையால் சந்தேகித்து ஒரு சமயம் வராமலும் இருக்கலாமல்லா?

தாளு: ஆம்! அதற்கும் வழி இருக்கிறது.

எட்: என்ன வழி இருக்கிறது!

தாளு: நானே நேரில்சென்று அழைத்து வரலாம்.

எட்: சரி, அப்படியானால் இரண்டு நாள் தங்கியிருந்து பிறகு சென்று அழைத்து வாரும்.

காட்சி 7

இடம்: ஒரு வீடு.

உறுப்பினர்: சிவத்தையா, மனைவி.

நிலைமை: இருவரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

மனைவி: என்ன மச்சான், பணம் கிடைக்காதா?

சித்தையா: ஆ...! பணமா ? கொள்ளையடிக்கப் போகவேண்டியது தான்.

மனைவி: எனக்கென்ன! ஒங்க மகன் கலியாணத்தை நீங்க எப்படியும் நடத்துங்க.

சிவ: நான் பணங்கேக்காத இடமில்லே. என்னை என்ன செய்யச் சொல்றே ?

மனைவி: நீங்க என்ன செய்வீங்களோ, எங்க போவீங்களோ ? ஊர்ப்பந்தி வைக்காம கலியாணம் நடத்த உங்களுக்கு வெட்க மாயில்லே ! ஒரு ஐம்பது வராகன் பொறட்ட முடியல்லே... பெரிய ஆம்பிள்ளையாட்டமா ?

சிவ: உன் பேச்சைக் கேட்டா எனக்கும் தானுபதி கதிதான் கிடைக்கும் !

மனைவி: ஒங்க கெதிக்கு அவரு கெதி என்ன ரொம்ப கொறைஞ்சி போச்சோ ?

சிவ: குறையலடி, குடிமுழுகிப்போச்சி !!

மனைவி: அப்படி என்ன மச்சான் விஷயம் ?

சிவ: சரிதான் ! சரிதான் ! உனக்குத் தெரியாதா விஷயம் ? கேளு. தானுபதிப்பிள்ளையை முன்னுலே ராமனுதபுரத்திலே புடிச்சு, திருச்சியிலே கொண்டுபோயி விசாரணை பண்ணி விடுதலை பண்ணினது தெரியுமில்ல ?

மனைவி: தெரியும் ! அதுக்குப் பிறகு நம்ம ராசாகூட, தானுபதி பிள்ளைகூட வெள்ளைக்காரங்களைப் பார்க்கப் போனதாகச் சொன்னுங்களே !

சிவ: ஆமா ! ஆமா !! அதுதான். தானுபதியை அனுப்பி மகா ராசாவை திருச்சினுப்பள்ளிக்கு கூட்டியாரச் சொன்ன

வெள்ளைக்காரங்க, ராசா வந்ததும் அவர் உடம்பப்பாத்து பெருமூச்சு விட்டு அசந்துபோனுங்க! அப்புறம் வெள்ளைக் காரங்க வளத்துகிட்டு வந்த எழு பெரிய குதிரைகளைக் கொண்டாந்து அதிலே ஏறிச் சவாரி செய்யணுமுன்னு ராசா கிட்டே சொன்னுங்க.

மனைவி: ஆ! அப்புறம்?

சிவ: ராசாவுக்குத்தான் குதிரைச் சவாரின்னு போதுமே! அடங்காப் பிடாரியான அந்த எழு குதிரையையும் அடக்குடா அடக்குன்னு அடக்கினுரு. அவ்வளவுதான்! வெள்ளைக் காரங்க ஆச்சரியப்பட்டு பரிசாக் கொடுத்த பொன்னுலே செய்த வாள் ஒன்னைக் கையிலே வாங்கினுரு—குதிரையைக் கையிலே பிடிச்சாரு—நேரே இங்கே வந்து இறங்கிட்டாரு.

மனைவி: ஆகா!

சிவ: அதுக்கப்புறந்தான் தானுபதிக்குக் கொஞ்சம் மண்டை கனக்க ஆரம்பிச்சது.

மனைவி: என் மச்சான் மண்டையிடியா?

சிவ: இல்லடி! அதிகாரம் பண்ண ஆரம்பிச்சுட்டாருன்னு அர்த்தம்!

மனைவி: அப்படி என்ன செஞ்சிட்டாரு?

சிவ: செய்யுறது என்னடி! குடியவே கெடுத்துட்டாரு. அதாவது அந்நேரம் பாத்து தானுபதி மகனுக்கு கலியாணம் வந்தது. ராசாகிட்டே போயி நெல்லும் பொன்னும் கேட்டாரு— ராசாவும் கொடுத்தாரு. கொடுத்ததை வைச்சி நடத்தாமே, காணுதுன்னு பெண்டாட்டி சொன்னதைக் கேட்டு திருநெல் வேலிக்குப் போயி வெள்ளைக்காரங்க நெல்லை கொள்ளையடிச் சிட்டு கொலை செஞ்சுப்பிட்டு வந்துட்டான் அந்த மனுஷன்!

மனைவி: அட பாவி!

சிவ: புடிச்சதே சனியன் பொட்டியிலே! எடுத்ததுக்கெல்லாம் இடஞ்சல்தான் இந்த மனுஷனுலே!

மனைவி: ஆமா மச்சான்! வெள்ளைக்காரங்க சும்மா விட்டாங்களா?

சிவ: அதானடி இப்ப சங்கடத்திலே நிக்கிது. எந்த நேரம்னு இல்லே, சண்டை வர்ரது.

மனைவி: அப்படியா? அதிருக்கட்டும், நம்ம ராசா இதைப்பத்தி தானுபதி பிள்ளைகிட்ட கேக்கலியா?

சிவ: அவருக்கெங்கடி தெரியுமிது?

மனைவி: ஏன் மச்சான் தெரியாது?

சிவ: நம்ம ராசா கொஞ்ச நாளைக்கு நிம்மதியா இருக்கலாம்னு ராணியோட வசந்த மண்டபத்திற்குப் போயி, கொஞ்சிக் கிட்டுல்லயிருக்காரு.

மனைவி: அப்படியா சங்கதி!

சிவ: ராக்காயி, நான் சொல்றதைக் கேளு! கலியாணத்தை முடிக்கவேண்டியது என் பொறுப்பு; காரியத்தைக் கவனிக்க வேண்டியது உன் பொறுப்பு. தெரிஞ்சுதா? நான் போயி கருப்பனை பாத்திட்டு வர்றேன்; நீ சமையல் செய்.

காட்சி 8

இடம்: நந்தவனம்.

உறுப்பினர்: கட்டபொம்மு, சக்கம்மாள்.

நிலைமை: சக்கம்மாள் தனிமையாக பாடிக் கொண்டிருக்கிறாள். அப்போது கட்டபொம்மனும் அங்கு வந்து சேர்கிறார்

கட்ட: சக்கம்மா! உன் ஆட்டமும், பாட்டும் அபாரம்!

சக்: ஹூம்......கேலி செய்கிறீர்களாக்கும்!

கட்ட: உண்மையைச் சொன்னால் கேலியாகவா தோன்றுகிறது உனக்கு?

சக்: போதும் உங்கள் புகழ்ச்சி!

கட்ட: சக்கம்மா! உன்னைப் பார்க்கும் பொழுதெல்லாம் என் உள்ளத்திலே மகிழ்ச்சி ஏற்படும்போது, எப்படி உன்னைப்பற்றி புகழ்ச்சியோடு பேசாமல் இருக்கமுடியும்?

சக்: ஹூம்......அப்புறம்!

கட்ட: அப்புறமா? சக்கம்மா, எத்தனையோ சேனாவீரர்களை எதிர்த்துப் போரிட்டபோதுகூட ஏற்படாத தளர்ச்சி, உன் வேல் விழிகளைக் கண்டதும் ஏனோ ஓர் கவர்ச்சி மயமாகி......

சக்: அடேயப்பா! நானென்ன அவ்வளவு அழகாகவா இருக்கிறேன்?

கட்ட: நீ அழகாய் இருக்கிறாயோ அல்லது எப்படி இருக்கிறாயோ, என் சிந்தையைச் சதிராடச் செய்யும் வண்ண ஓவியமாக இருக்கிறாய் என்று தான் எனக்கு சொல்லத் தெரியும்.

சக்: போதும் உங்கள் பரிகாசம், நான் வருகிறேன்.

கட்ட: சக்கம்மா! ஏன் கோபப்படுகின்றாய்? இப்படி என் பக்கம் வா!

சக்: என்னவாம்?

கட்ட: என்னவா! சொல்கிறேன் வா. பார்த்தாயா, அதற்குள் கோபம் வந்துவிட்டது. பெண்களே இப்படித்தான். இதோ பார்! நீயே சொல். நீ அழகாயில்லாவிட்டால் நான் ஏன் உன்னைச் சுற்றிச்சுற்றி வட்டமிடுகிறேன்?

சக்: வண்டுகளும் தான் வட்டமிடுகின்றன!

கட்ட: எதை வட்டமிடுகின்றன?

சக்: மலரை!

கட்ட: பூத்த புது மலர்களையா அல்லது வெறும் மலர்களையா?

சக்: தேனுள்ள பூவைத்தான் வண்டு நாடும்.

கட்ட: அப்படியானால் நானுன்னை நாடுவது தேனுக்காகத்தானே இருக்கவேண்டும்.

சக்: அடேயப்பா! உங்களை வெல்ல என்னால் முடியுமா? பெரிய பெரிய வெள்ளைப்படைகள் படும் பாட்டுக்கு நான் எம்மாத்திரம்!

கட்ட: நீ மாத்திரம் என்ன சாமான்யமானவளா? எதிரிகளைத் தூக்கி எறியும் என் கரங்கள் உன்னை வாரி அணைக்கத்தானே வட்டமிடுகின்றன. இதிலிருந்து தெரியவில்லையா நீ எப்படியிருக்கிறாய் என்று?

சக்: இந்த ஆண்களே இப்படித்தான்! ஏதாவது வேண்டாததைச் சொல்லி எங்களை அழவைப்பது, பிறகு பிரமாதமாக இல்லாததையெல்லாம் பேசிச் சிரிக்கவைப்பது.

கட்ட: சக்கம்மா! இன்று தான் நீ இந்த உண்மையைக் கண்டுகொண்டாய். சதா சிரித்துக்கொண்டேயிருந்தால் அந்த இன்பத்தின் எல்லை எது என்பதை அறியமுடியாதல்லவா! அதற்காகத்தான் சிரிப்பதும் அழுவதும்.

சக்: அதிருக்கட்டும் சுவாமி! நீங்கள் "அழுவதும்" என்று சொன்னவுடன் எனக்கொன்று ஞாபகத்திற்கு வந்தது.

கட்ட: என்னது?

சக்: நிர்வாகப் பொறுப்பையெல்லாம் தானுபதிப்பிள்ளை வசம் ஒப்புவித்துவிட்டுத் தாங்கள் வசந்தம் வந்து விட்டீர்களே; அவர் அதற்குத் தகுதிவாய்ந்தவர் தானு?

கட்ட: தகுதியை அறியாமலா தேவி, தானுபதியை விட்டு வந்தேன்!

சக்: இல்லை......இல்லை, நான் ஒரு விதமாகக் கேள்விப்பட்டேன். அதனுல்தான் கேட்கிறேன்.

கட்ட: எதை நீ கேள்விப்பட்டாய்?

சக்: ஏதோ ஒரு விதமாகக் கூறுகிறுர்கள். திடீரென்று ஏதாவது சொல்லிவைத்தால் அதன் விளைவாக என்னவாகும்? எதற்கும் நாம் நேரில் சென்று வருவோமே?

கட்ட: சக்கம்மா! இருந்தாலும் நீ நல்ல புத்திசாலி. எதையோ சொல்லி எதையோ மறைத்துவிட்டாய், பார்த்தாயா! சரி வா! போகலாம்.

காட்சி 9

இடம்: கட்டபொம்மன் அரண்மனை.

உறுப்பினர்: கட்டபொம்மன், தானுபதி, பக்கட் துரை.

நிலைமை: கட்டபொம்மன் அங்குமிங்கும் அலைந்துகொண்டு கோபமாக தானுபதியைப் பார்த்தல்.

கட்ட: உம்முடைய வீட்டில் உம் மகனுக்கு ஊர் அறியத் திருமணம் செய்து வைப்பதற்காக வேண்டி, இரண்டாயிரம் பொன்னும் நூற்றைம்பது கோட்டை நெல்லும், என் மனமார்ந்த வாழ்த்தும் கொடுத்தனுப்பினேன். பற்றுதெனக் கேட்டால் உமக்கு வற்றாது வாரிக் கொடுக்கும் மன்னன் நானிருக்க, சற்றேனும் மதியாது, நீர், அயலார்க்குரிய நெல்லை அநியாயமாய் அள்ளி வந்தீர்; கொலைகள் பல நிகழச் செய்தீர்; குறைகள் பல ஆக்கி வைத்தீர்; அசைவில் ஆண்மையுடன் இசை வளர்த்து வந்த இவ்வரசருக்கு ஓர் வசை வளர்த்து விட்டீர் பிள்ளையே! உம்மால் பெரிய தொல்லைதான்.

தாணு: அரசே! மன்னிக்கவேண்டும். நான்......

கட்ட: என்ன நான்...உம்மை நான் அறிவுடைய மரபில் பிறந்து அறிய பல நூல் படித்தவர் என்று எண்ணியிருந்தேன். ஆனால் படித்தும் ஓர் பயனற்ற பட்டாதாரியாகத்தான் இருக்கின்றீரே தவிர, பயன் படைக்கும் திட்டம் ஏதுவும் உம்மிடம் இல்லை. உம்மை ஒரு அறிஞர் என்று எண்ணியிருந்தேன். ஆனால் அது என்னை வறிஞன் ஆக்கத்தான் வழி செய்கிறதே தவிர வேறல்ல. நாட்டுக்குப் பல திட்டம் வகுக்கும் நல்லறிவாளர் என உம்மை மதித்திருந்தேன். ஆனால் உம் போக்கை மட்டும் பூர்த்தி செய்து கொள்ளும் புதுமையுடையவராகத் தான் இருக்கின்றீரே தவிர, பெருமையில்லை.

தாணு: மகாராஜா! மன்னிக்கவேண்டும். நடந்ததைக் கொஞ்சம் கேட்க வேண்டும். நெல்லைக் கொள்ளையிட வேண்டுமென்பதற்காக நான் அங்கு செல்லவில்லை. நெல்லை விலை பேசி கொள்முதல் செய்தேன். பிறகு அளந்து கொண்டிருக்கும் போது அங்கிருந்த காவலாளிகள் நம்முடைய கம்பளங்களை வம்புக்கிழுத்து வாய்மதம் பேசினர். நிலை தெரியாமல்

இகழ்ந்து பேசியதால் கலகம் மூண்டது; பழி விழுந்தது. ஏற்கனவே நாம் வரி கொடாமல் இருப்பதனால் நம்மை எந்த விதத்தில், எந்த நேரத்தில் தாக்கலாமென்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்த கும்பெனியார்கள், சமயம் வாய்த்ததும் சதி செய்து சண்டைக்கிழுத்தார்கள். இதில் குறை கூற நம்மிடத்தில் குற்றமில்லை மகாராஜா.

[சேவகன் ஒருவன் உள்ளே வந்து அரசரை வணங்கி]

சேவ: மகாராஜா! கும்பினிப் படையிலிருந்து பக்கட் துரை வந்திருக்கிறார். சமூகத்தைப் பார்க்கணுங்களாம்.

கட்ட: பக்கட் துரையா? வரச்சொல்.

[பக்கட் வருதல்]

கட்ட: வாருங்கள்! இப்படி உட்காருங்கள். என்ன விசேஷமாக வந்தீர்கள்?

பக்கட்: என்ன விசேஷமா? விநோதமான கேள்விதான். அது எங்கே உங்களுக்குத் தெரியப்போகிறது. அரசியலைப்பற்றி அக்கறை இருந்தால் தானே!

கட்ட: அரசியலைப்பற்றி அப்படி என்ன விஷயம்?

பக்கட்: அதைப்பற்றி நீர் ஆராய்ந்திருப்பீரேயானால், அதை அப்போதே தெரிந்திருக்கலாமே!

கட்ட: என் அரசியலில் குறுக்கிட உமக்கு அதிகாரம் கிடையாது. அதைப்பற்றி பேச உமக்கு யாதொரு சம்பந்தமும் இல்லை.

பக்கட்: ஏன் இல்லை? உமது ஆட்சியில் தவறு நேர்ந்திருந்தால்...?

கட்ட: தவறுதல் யாருக்கும் சகஜம். அதைப்பற்றி இங்கு பிரச்சினை இல்லை.

பக்கட்: நீதி குலைந்திருந்தால்?

கட்ட: நீதி குலைவதா! அது எங்கள் பாண்டிய வம்சத்தின் பரம்பரைக்கே இல்லை.

பக்கட்: பாண்டிய வம்சமாம், பாண்டிய வம்சம்! எவ்வளவு பௌத்திரமான பாண்டிய வம்சம்.

கட்ட: என்ன சொன்னாய்? பாண்டிய வம்சத்தின் பாம்பரையைப் பற்றியா குறை கூறுகின்றாய்! பரதேசிப்பயலே, பாண்டியன் யார் தெரியுமா உனக்கு? அவன் பரம்பரை தெரியுமா உனக்கு? உனக்கு அவனைப்பற்றி பேச என்ன நேர்மை இருக்கிறது? தான் இழைத்த தவறுக்காக தன் உயிரைத் தானே மாய்த்து மன்னுயிரைக் காத்த மாவேந்தன் பாண்டியன் பரம்பரையைப்பற்றி குறை கூற, உனக்கென்ன வரைமுறை இருக்கிறது? கன்றின் தாய் கேட்ட நீதிக்காக தன் சேயென்றும் பாராது, மண்ணில் தேர் ஓட்டி மைந்தனை மாழச் செய்த மனுநீதிச் சோழனின் தமிழ்க் குலத்தைக் குறைகூறும் உன்னிடத்தில் என்ன தனி நீதி இருக்கிறது? மதியற்ற மன்னர்களை மயக்கி, அவர்களின் மகுடத்தைப் பிடுங்கி பதவி காட்டி ஊரை ஏமாற்ற அணிவகுத்து நிற்பவர்கள் அல்லவா ஆங்கிலேயர்கள்?

பக்கட்: ஆம், தெரியாது தான்! சொன்னால் தானே தெரியும்— சொல்லுகிறேன். ஆங்கிலேயருக்குச் சொந்தமான நாட்டிலுள்ள அருங்குளம், சுப்பலாபுரத்தை எட்டப்பனுக்கு தானமாக வழங்கியதை தவறென சொல்லத் தெரிந்தது; பெருமையுடன் பேட்டி காணவந்த ஜாக்ஸனை புறக்கணித்து அவமதிக்கத் தெரிந்தது; அருமையுடன் வாவழைத்து அன்பளித்த கும்பினியை அதம் புரிந்த கொடுநிலைதான் தெரியாதோ? நன்று நன்று, உம் நீதியின் நிர்வாகம்!

கட்ட: போதும், உமது பிரசங்கம்.

பக்கட்: நான் சொல்வது உமக்குப் பிரசங்கமாகத் தோன்றலாம். ஆனல் அது உம் அரசாங்கத்திற்கு ஊதப்படும் அபாயச்சங்கு என்பது மறந்துவிட வேண்டாம்.

அர: அந்த அபாயச்சங்குக்கு தக்க உபாயத்தை தேடிக்கொள்ளும் வகை எனக்குத் தெரியும்.

தாஞ: தேடிவந்த களேப்பால் தாங்கள் வாடியிருப்பீர்கள்! இப்படி உட்காருங்கள்.

பக்கட்: நான் இங்கு வந்தது சுகமாக உட்காரவல்ல! கம்பெனியாரின் நேரடியான கேள்விகளுக்கு பதில் கூறவேண்டும்.

கட்ட: அப்படி என்ன கேள்வி கேட்கப் போகின்றீர்?

பக்கட்: கம்பெனியார் அனுப்பியுள்ள பல கடிதங்களுக்குத் தாங்கள் ஒரு பதிலும் எழுதவில்லே. இது கம்பெனியை அலட்சியம் செய்வதாகும். இப்போது உங்களுக்கு மந்திரியாக இருக்கும் தாஞபதிப்பிள்ளே கும்பினியாரை அடித்து மிதித்து, அவமதித்து கொலேயும் கொள்ளேயும் செய்து நெல்லேயும் அள்ளி வந்திருக்கிருர். இது மன்னிக்க முடியாத குற்றம். ஏற்கெனவே தாங்கள் கொடுக்கவேண்டிய வரிப்பணம் நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே போகிறது. அதையும் கொடுத்தபாடில்லே. தாங்கள் ஒரு நேர்மையான மன்னர் என்பதை அறிந்து தங்களே நேரில் கண்டு பேசி முடிவு செய்து கொண்டு வரும்படி கம்பெனியார் என்னே அனுப்பி வைத்தார்கள். இவைகளுக்கு தாங்கள் கூறும் பதில்?

கட்ட: துரையவர்களே! தங்கள் கடிதம் வந்ததும் நான் தாஞபதிபிள்ளேயை வரவழைத்து விசாரித்துப் பார்த்தேன்.

கம்பெனியார் நினைப்பது தவறு. நெல்லை கொள்ளையிடவேண்டு மென்பதற்காக பிள்ளை அங்கு செல்லவில்லை. இடையில் ஏற் பட்ட கலகத்தின் காரணம் பின்னர்தான் தெரிய வந்தது. நீங்கள் தடையேதுமில்லாமல் சென்று வாருங்கள். இனி இவ் விதம் நடக்காமல் நான் பார்த்துக் கொள்கிறேன்.

பக்கட்: பார்த்துக் கொண்டிருந்ததின் பலனைத்தான் அனுபவிக்கி றோமே! ஆறு ஆண்டுகளாக பொறுத்துப் போனதற்கு தாங்கள் கொடுத்த தகுந்த பரிசு போதும். இனியும் பொறுக்க முடியாது. அம்பாரத்தில் இருந்த ஆயிரங்கோட்டை நெல்லையும் வம்பாக வாரியது ஒரு குற்றம்; கலகம் விளைவித்து கொலை புரிந்தது மற்றொரு குற்றம்; இது விஷயங்களுக்கு கடிதமெழுதியும் தாங்கள் பதில் எழுதாமல் கம்பெனியை அவமதித்தது மன்னிக்க முடியாத மாபெரும் குற்றம். இத் தனை குற்றங்களுக்கும் காரணமாக இருந்த தானுபதி பிள்ளையை கம்பெனியார் வசம் ஒப்புவித்து விட்டு நெல்லுக்கு விலையாக ரூ 3300ம், செய்த குற்றத்திற்கு தண்டனையாக ரூ 1000 அபராதமும் செலுத்தி கட்டவேண்டிய வரி பாக்கி 6000ம் பொன்னும் கட்டி கம்பெனியாரின் அடி பணிந்து நிற்கவேண்டும். இது கிழக்கிந்திய கம்பெனியாரின் ஆணை!

கட்ட: ஆணை! (சிரிப்பு) நீர் யானையை ஆணையிட்டு அடக்கலாம்; சேனையை சட்டம் வகுத்து ஒடுக்கலாம்; எட்டப்பனை அடி பணியச் செய்யலாம்; தொண்டைமானைத் தொண்டு செய்ய சொல்லலாம். ஆனால் இவ்வேந்தனைக் கொண்டுமட்டும் உமக்கு வேண்டுவதைச்செய்துகொள்ள ஒருக்காலும் முடியாது. உமது ஆணையையும் சேனையையும் ஆடிக்காற்றில் பறக்கடிக் கும் ஆண்மை எனக்குண்டு. நியாயத்திற்கு நியாயம் உண்டு. வேண்டுமானால் கொள்ளைபோன நெல்லுக்காக ரூ 3300ம்,

அபராதமாக ரூ 1000ம் தருகிறேன். போதாதென்றால் தானாபதியின் எடைக்கு எடை பொன்னும் தருகிறேன். பெற்றுக்கொண்டு போம்.

பக்கட்: அரசே! நெல்லின் விலையை மட்டும் நான் இங்கு வாங்க வரவில்லை. கொள்ளையில் நேர்ந்த கொலைக்கு பழிக்குப் பழி வாங்க வந்தேன். அதற்கு பிள்ளையின் தலை தான் பிணையாக உள்ளது. அதனால் அவரை என் கைவசம் ஒப்பிவிக்க வேண்டும். கொள்ளையும் கொலையும் செய்த அந்த கொடும் துரோகியை—கும்பினியின் குடிகெடுக்க முடி தரித்த உம் முதல் மந்திரியை முதல் பலியாக ஏற்க கம்பெனி காத்துக் கொண்டிருக்கிறது.

தானா: எதற்காக பிரபு காத்துக்கொண்டிருக்கிறது? எனக் காகவா காத்துக்கொண்டிருக்கிறது? (ஏளனமாக) கொள்ளை யிட்டேன்; கொலை செய்தேன்; கும்பினி ஆணையை அவ மதித்தேன் என்பதற்காகத் தண்டனையா? அல்லது உம்மிடம் கைக்கூலி வாங்கிக்கொண்டு ஊதாரித்தனமாக நடந்து கொள் ளும் உறையூர் ஜமீன்தார் போல் நானும் நடவாமல் இருந்த தற்காகத் தண்டனையா?

இல்லையென்றால் வளர்த்துவிட்ட இக்காட்டை—என் தாய்நாட்டைக் கைப்பற்ற வந்திருக்கும் சண்டாளனாகிய உனக்கும் உன் வர்க்கத்திற்கும் உடனிருந்து தன் தாயைக் காட்டிக்கொடுத்து ஊதாரித்தனமாக நடந்துகொள்ள ஊக்க மளிக்கும் ஆக்கம் படைத்த அயோக்கிய சிகாமணியாகிய எட்டப்பனைப்போல் நானும் எழுந்து நில்லாததற்காகத் தண்டனையா? இதில் எதற்காக பிரபு தண்டனை? தாய் மானம் போகும்போது தன் மானம் பெரிதென வாழும் தருதலைகள் நாங்களல்ல!

பக்கட்: நீ இல்லாவிட்டால் உன் தம்பி இருந்துவிட்டுப் போகிறான்!

கட்ட: தருதலைத் தம்பியைப்பற்றித் தனையனுக்கென்ன கவலை? பிறப்புரிமை சுதந்திரத்திற்காக நான் இங்கு துடித்துக் கொண்டிருக்கும்போது உனக்கு உதவிபுரிந்தானே, அவனா என் தம்பி? தமிழ் நாட்டிலே பிறந்துவிட்டானே என்பதற்காக வேண்டுமானால் எட்டப்பனை என் தம்பி என்று அழைக்கலாம். ஆனால், பிறந்த நாட்டை மறந்து, வந்த நாட்டானை விரைந்து—சிறந்தவனெனச் சீர்தூக்கிப் பேசி, அன்னியனுக்கு அடைப்பக்காரனாக ஆகி, அவன் ஆளுகையை மேவி, கைக்கூலி வாங்கிக்கொண்டு கடையோரம் கன்னிப் பெண்ணோடு காலம் கழிக்கும் கயவனல்ல என் தம்பி. வளர்த்துவானேன், உங்களின் தத்துப் புத்திரனாகிய அவனைப்பற்றிப் பேச எனக்கு அவகாசமில்லை. பிள்ளையை உன்னோடு அனுப்பவும் முடியாது; வரிப்பணம் எதும் கொடுக்கவும் முடியாது. வேண்டுமானால் நெல்லுக்குள்ள தொகையை மட்டும் வாங்கிக்கொண்டு போம்.

பக்கட்: அநியாயமாய் நெல்லை அள்ளித் தொல்லை புரிந்த இக்கொடியோனுக்கு நீங்கள் இடம் கொடுக்கக்கூடாது. இவனுக்கு இடம் கொடுப்பதனால், உங்கள் சொந்த நாட்டிற்கே கேடு விளையும். என் வார்த்தையை நம்புங்கள். உங்கள் நலனைக் கருதியே இதைச் சொல்ல வந்தேன்.

கட்ட: என் நலனில் நீர் சிரத்தை காட்ட வேண்டிய காரணம்?

பக்கட்: பிறர் நலத்தைப் பேணி வளர்ப்பது கம்பெனியாரின் கடமையாதலால்...

கட்ட: நீங்கள் நினைக்கும் பிறர் நலம் எங்களது சுய உரிமையைப் பறிப்பதாக இருந்தால்?

பக்கட்: தேச உரிமை எல்லாம் கம்பெனியாருக்கே இருக்கும் போது சுய உரிமை என்ற உரிமை உங்களுக்கு ஏது?

கட்ட: அந்த உரிமை வந்த வழி?

பக்கட்: கடன்பட்டதால் ஏற்பட்ட கதி!

கட்ட: கடன் பட்டவர் ... ?

பக்கட்: நவாப்!

கட்ட: உங்கள் உரிமைக்குள்ளாக வேண்டியவர்?

பக்கட்: நவாப்பும் அவரது ஆட்சியும்!

கட்ட: அப்படியானல் இங்கு வந்து உரிமை கொண்டாடுவதன் காரணம்?

பக்கட்: இத்தேசம் அவன் ஆளுகைக்குட்பட்டிருந்ததால்......

கட்ட: நிறுத்தும்; எத்தேசம் அவன் ஆளுகைக்குட்பட்டிருந்தது? திசைகாவல் புரிந்து, மகசூலைப்பிரித்து, வசூலில் பாதி அனுபவித்து வந்தவன் நான். நியாயப்படி ஏனையப் பாளையப் பட்டுக்காரர்களிடமிருந்து நீர் வாங்கும் வரியில், எனக்கும் பகுதிப் பங்கு உண்டு என்பதை மறந்து விடாதே! நவாப்பையே நயவஞ்சகம் செய்துவிட்டோம்—இனி இவர்கள் எம்மாத்திரம் என்ற இறுமாப்பா?

பக்கட்: நிறுத்தும்; வம்பு பேசவேண்டாம். தானுபதியை என்வசம் ஒப்புவிக்க முடியுமா, முடியாதா?

கட்ட: முடியாது!

பக்கட்: முடியாது! சிறைப்பிடித்துச் செல்வேன்!

கட்ட: உன்னை அரை நொடியில் கொல்வேன். நீ இப்பொழுது ஒரு கூண்டுப்புலி. இனி ஒரு முறை நீ சிறைப்பிடிப்பேன் என்று சொன்னல், உன்னையும் உன் வர்க்கத்தையும் சின்ன

பின்னம் செய்துவிடுவேன். மரியாதையாகத் தப்பி ஓடிவிடு. திறமையிருந்தால் பிள்ளையை சிறைப்பிடிக்கும் வலிமையை நான் பார்த்துக்கொள்கிறேன்.

பக்கட்: நல்லது! உனக்கு முடிவு காலம் நெருங்கிவிட்டது.

தாணு: சரிதான் போடா, முடிவு காலம் யாருக்கு?

காட்சி 10

இடம்: கிழக்கிந்திய கம்பெனி திருச்சி கிளை.

உறுப்பினர்: பானர்மென், பக்கட், ஆலன், லார்டு எட்வர்ட், சேவகர்கள், இராமலிங்க முதலியார்.

நிலைமை: நடனமாது நடனமாட ஏனையோர் அவரவர் ஆசனத்தில் அமர்ந்திருக்க நடனம் நடந்துகொண்டிருக்கும் பொழுது சேவகன் தபால் ஒன்று கொண்டுவந்து எட்வர்டிடம் கொடுக்கிறான். எட்வர்ட் வாங்கிப் படித்துக் கொண்டிருக்கிறார். நடனம் நடந்து கொண்டிருக்கும் போது, கடிதம் படித்து முடிந்ததும், கோபத்துடன் சபையை நோக்கி எட்வர்ட் கூறுகிறார்.

எட்: நிறுத்துங்கள். கட்டபொம்மனுக்கு மண்டைக்கர்வம் தலைக்கேறிவிட்டது. கம்பெனிக்கு இடையூறாக இனி எதையும் செய்யமாட்டேன் என்று சொல்லிவிட்டு, இப்போது பல அட்டூழியங்களைச் செய்திருக்கிறான். அவனை எளிதில் விடக்கூடாது. இராமலிங்க முதலியார், இதைப் படியுங்கள்.

[கடிதத்தை இராமலிங்க முதலியார் கையில் கொடுக்கிறார். அவர் அதை வாங்கிப் படிக்கிறார்]

ஊத்துமலை ஜமீன்

7—8—1799.

கனம் பொருந்திய கம்பெனியாருக்கு அநேக நமஸ்காரம். தங்கள் கட்டளையைத் தலைமேற்கொண்டு, கம்பெனிக்கு இதுவரை நாங்கள் யாதொரு தடையுமில்லாமல் கிஸ்தி செலுத்தி வருகிறோம். பாஞ்சாலங் குறிச்சி ஜமீன்தாராகிய கட்டபொம்மு நாயக்கர் மட்டும், இதுவரை கம்பெனி உத்தரவுக்குக் கட்டுப்படாமல் இருப்பதோடு, அடிக்கடி தானாபதிப் பிள்ளையைக் கொண்டு எங்களுக்குப் பல இடையூறுகளும் செய்து வருகிறார். உங்களுக்குத் தொண்டு செய்து கொண்டிருக்கும் சிவகிரி, ஊற்றுமலை, எட்டயாபுரம் ஆகிய ஜமீன்களைக் கட்டபொம்மன் பெரும் படையுடன் வந்து தாக்கப்போவதாக வேறு ஊரெல்லாம் வதந்தியாக இருக்கிறது. இதைக்கேட்ட எங்களுக்கு ஒரே பயமாக இருக்கிறது. அவரைத்தட்டி ஒடுக்காவிடில் எங்களுக்கு குடியிருப்பில்லை; அல்லும் பகலும் அவரது தொல்லையில் அழுந்திக்கொண்டிருக்கும் எங்களை விரைவில் வந்து காக்கவேண்டும் என்று தங்கள் பாத பத்மங்களில் விழுந்து மன்றாடிக் கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்

தங்கள் ஆணைக்குட்பட்ட,

சிவகிரி ஜமீன்: வீரபாகுபாண்டிய வன்னியனார்,
ஊற்றுமலை ஜமீன்: மருதப்ப தேவர்.
எட்டயாபுரம்: எட்டப்ப நாயக்கர்.

[பக்கட் துரை சபையை நோக்கி வந்து எட்வர்ட் துரைக்கு வணக்கம் செலுத்தல்]

எட்: பக்கட்! கட்டபொம்மனுடைய கொட்டம் அளவிற்கு மிஞ்சிப் போய்விட்டதே!

பக்கட்: ஆமாம்! அதைப்பற்றித்தான் நானும் சொல்ல வந்தேன். இப்பொழுதே அவனை அடக்காவிடில் பின்னல் நாம் அவதிப் படவேண்டியதுதான். தானுபதியை சிறைப்பிடிக்க அனுமதி கேட்கப்போன என்னையும், கம்பெனியையும் அவமதித்து அலட்சியம் செய்து விட்டான். நெல்லை கொள்ளை செய்வ தோடு அல்லாமல், வீரம் பேசி கம்பெனியை ஏசுகிருன். அவனை உடனே ஒடுக்கவில்லையானுல் இனி நாம் பல தொல்லைகளை அனுபவிக்க வேண்டியதுதான். பின்பு அவனை ஒடுக்குவது முடியாத காரியம்!

எட்: எது முடியாத காரியம்? பிரித்தாளும் சூழ்ச்சியில் நமக்கு இணையாக யாரிருக்கிருர்கள்? போதாததற்கு சிவகிரியான், ஊற்றுமலையான், எட்டயாபுரத்தான் ஆகிய மூன்று ஜமீன் தார்களுடைய பரிபூரண ஒத்துழைப்பும் இருக்கிறது. அவன் வர்க்கமே அவனைக் காட்டிக்கொடுக்க திட்டமிடும்போது, நம் வர்க்கம் ஏன் கோட்டைகட்டி வாழ முடியாது? முக்கியமாக எட்டப்ப நாயக்கருக்கு நாம் பெரும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிருேம். கட்டபொம்மனை ஒழித்துக்கட்டும் வகைக் காக, தன்னுலான உதவியைத் தான் எப்பொழுதும் செய்யக் காத்துக்கொண்டிருப்பதாக சொல்லியிருக்கிருர். எனவே, அவனை முதலில் முடித்துக் கட்டுவதற்கு வேண்டிய திட்ட மொன்றை வகுக்க வேண்டும். அதற்கு வேண்டிய யோசனை ஏதாவது உங்களால் சொல்ல முடியுமா?

[பானர்மென் எழுந்திருந்து]

பானர்: என்னுல் சொல்ல முடியும்!

எட்: நீட்டியது, நல்ல திட்டம் தானே!

பானர்: திட்டம் நல்லதுதான்—ஆனுல் அதை சட்ட பூர்வமாக அமுல் செய்ய வேண்டும்!

எட்: செய்து விட்டால் போகிறது!

பானர்: செய்து விடலாம். ஆனுல் அதன் மார்க்கம் சரியல்ல வென்று......

எட்: மார்க்கம் எதுவாயிருந்தால் என்ன? நமது நோக்கம் நிறை வேறினுல் போதும்.

பானர்: ஆமாம், போதும். ஆனுல் பாருங்கள், அதில் ஒரு சங்கட மிருக்கிறது.

எட்: அப்படி என்ன சங்கடம்?

பானர்: பிரமாதமாக அப்படி ஒன்றுமில்லை. இருந்தாலும் பார்ப் பவர்கள் பயங்கொள்ளி, பாபி, ஆண்மையற்றவன், நேர்மை யற்றவன் அப்படி இப்படி என்று ஏதாவது குறை சொல்வார் களே என்றுதான் எண்ணுகிறேன்.

எட்: யார் என்ன சொன்னுல் நமக்கென்ன, நண்பரே? நமக்கு ஆகவேண்டியது முதலாவது கட்டபொம்மனின் கொட் டம் ஒடுங்கவேண்டும்; எட்டுத்திசையும் நம் கொடி பறக்க எண்டிசை மன்னரும் நம்மை வந்து வணங்கவேண்டும். இதற் காக எதை வேண்டுமானுலும், எப்படி வேண்டுமானுலும், எப்பொழுது வேண்டுமானுலும் செய்யத் தயங்காது நான் காத்துக் கொண்டிருக்கிறேன். தயங்காது நீர் உமது திட் டத்தை தெரியப்படுத்தும்.

பானர்: அப்படியானால் நாம் இப்பொழுதே வெற்றி அடைந்ததாக முடிவு செய்து கொள்ளலாம். சுருக்கமான முறை—திருத்த மான போக்கு—வெற்றி அடைந்தே தீருவோம். நாம் தாமத மின்றி உடனே திருநெல்வேலிக்கு தளபதி ஒருவரை அனுப்பி கட்டபொம்மனுக்கு தாக்கல் இல்லாமலே, பெரும் படையுடன் சென்று இரவோடு இரவே படையெடுத்துத் தாக்கிக் கோட்டையைப் பிடிக்கவேண்டும். துணிந்து செய்ய வேண்டும். இதுவே எனது அபிப்பிராயமும், ஆசையும் !

பக்கட்: ஆம். அவர் சொல்வது அத்தனையும் சரியே. இல்லை யென்றால் அவனை எளிதில் வெல்வது முடியாத காரியம். சூழ்ச்சி செய்தாலன்றி அவ்வீரனை வீழ்ச்சியடையச் செய்ய ஒருக்காலும் முடியாது. அதற்குத் தகுந்த ஒரு தீரனை இங் கிருந்து அனுப்பி வைப்பதே நலம்.

எட்: அப்படியானால் அதற்குத் தகுதியானவர் ஜெனரல் பானர் மென்தான். பானர்மென், நீரே அங்கு சென்று எட்டப் பனைக்கண்டு பேசி அந்த நாட்டின் நிலைமையை நன்கறிந்து, பிள்ளையையும் பிடித்து, கட்டபொம்மனையும் கட்டி கைதியாக என் காலடியில் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். இந்தப் பொறுப்பை நீர் இதை எவ்வளவு திறமையாகச் செய்து முடிக்கவேண்டுமென்று நான் சொல்லி உமக்குத் தெரிய வேண்டியதில்லை. உமக்கு கம்பெனியின் சார்பாக அதற் குரிய சகல உரிமைகளையும் கொடுத்திருக்கிறேன். இதற்காக நண்பர் பக்கட்டையும் வைத்து நம் புகழ் திக்கெட்டும் பரவ நீர் வெற்றியுடன் திரும்பி வாரும்.

(எட்வர்ட் பானர்மெனை கை குலுக்கி வீரவாள் ஒன்று கொடுக்கிறார், அப்படியே எல்லோ ரும் கை குலுக்குகிறார்கள்.)

காட்சி 11

இடம்: *அரண்மனை.*

உறுப்பினர்: *கட்டபொம்மன், தானுபதி, ஊமைத்துரை, சேவகன்.*

நிலைமை: *தானுபதியும் சேவகனும் கட்ட பொம்மனை பார்க்க வருகிறார்கள்.*

தானு: *மகாராஜா! என்னை அழைத்து வரச் சொன்னீர்களாமே!*

கட்ட: ஆம். *இதோ பாரும், இந்தக்கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறதென்று.*

[அரசர் கடிதத்தைக் கொடுக்க தானுபதி பிள்ளை அதை வாங்கிப்படிக்கிறார்]

பாளையங்கோட்டை,
20—8—1799

பாஞ்சாலங்குறிச்சி ஜமீன் கட்டபொம்முவுக்கு, கிழக்கிந்தியக் கம்பெனியின் தளபதி ஜெனரல் பானர் மேன் தெரிவித்துக் கொள்வது. கிழக்கிந்தியக் கம்பெனி சங்கத் தலைமை காரியாலயத்தார் சென்னையிலிருந்து என்னைப் பாளையங்கோட்டைக்குத் தளபதியாக சகல உரிமைகளோடும் அனுப்பியிருக்கிறார்கள். எனவே நமக்குள் இருக்கும் சச்சரவுகளை நீக்கிக் கொள்ளும் பொருட்டு நாம் கலந்து ஆலோசிக்க வேண்டியதிருப்பதால், தாங்கள் தவருமல் பாளையங் கோட்டையில் வந்து என்னை பேட்டி கண்டு கொள்ளலாம்.

இங்ஙனம்,

பானர்மென்,

கிழக்கிந்தியக் கம்பெனி தளபதி,

பாளையங்கோட்டை.

தாஞு: அரசே! இதில் ஏதோ சூது இருக்கின்றது. பகை யாளியின் குடியை உறவாடிக் கெடு என்பது போல், இவன் நம்மை உறவு கொண்டாடி ஒழித்துக்கட்ட திட்டமிட்டிருக் கிருன். தாங்கள் அங்கு சென்ருல் தங்களை அவன் கண்டிப் பாக சிறைப் பிடிப்பான்,

கட்ட: இதற்கு யோசனை?

ஊமை: நாமும் கடிதம் எழுதி அனுப்பிவிட்டால்?

தாஞு: வேண்டாம். சிறந்த தூதன் ஒருவனை அனுப்பி விஷ யத்தை நேரில் தெரிந்து வருவதுதான் நல்லது.

ஊமை: ஆம்; அதுவும் சரியான யோசனை தான்.

கட்ட: அப்படியாஞல் அதற்குத் தகுதியாக யாரை அனுப்பி வைக்கலாம்?

ஊமை: அண்ணு! நானே நேரில் சென்று வருகிறேன். என்னைக் கண்டதும் அந்த வெள்ளைத் துரைகள் நடுநடுங்கிப் போகமாட்டார்களா?

தாஞு: மாட்டார்கள்; புலிக்கு வைத்த குறிக்கு புலிக்குட்டி வந்ததே என்று தள்ளிவிடவும் மாட்டார்கள்.

கட்ட: பிள்ளையே! உமது அபிப்பிராயம் தான் என்ன?

தாஞு: அரசே! வாய்ப்பேச்சிலும் வாள் வீச்சிலும் வலிமை நிறைந்த வன்னியஞரையே அனுப்பி வைக்கலாம். அவரே அதற்குச் சிறந்தவர்.

கட்ட: ஆம்! அவரே அதற்குத் தகுந்தவர். (சேவகனைக் கூப் பிட்டு) வன்னியரை உடனே அழைத்து வா.

சேவ: அப்படியே அரசே!

(சேவகன் போகிருன்)

ஊமை: அண்ணு! திருச்செந்தூரில் முருகப்பெருமானது விசேஷ நாள் நெருங்கிவிட்டது. நாம் போய் வரவேண்டாமா?

கட்ட: தம்பி! இப்போது நிலைமை சரியில்லை. நீ மட்டும் போய் முருகனை தரிசித்து வா. நான் இங்கேயே இருக்கிறேன்.

ஊமை: ஆகட்டும் அண்ணு! நான் வருகிறேன் (போதல். வன்னியனுர் கைகூப்பியபடி வந்து கட்டபொம்மனை வணங்குகிறுர்.)

வன்: மகாராஜா! நமஸ்காரம்.

கட்ட: வன்னியனுரே! நீர் பாளையங்கோட்டை சென்று, எனக்கு வர சௌகரியம் இல்லை என்றும், உம்மிடமே எல்லா விஷயங்களையும் பேசி முடிவு செய்து கொள்ளலாம் என்றும் நான் சொன்னதாக பானர்மெனிடம் சொல்லவும்.

வன்: நல்லது அரசே! தமிழ்நாட்டின் தற்பாதுகாப்புக்காகத் தாய் நாட்டுத் தூதனுக போகும் முதல் பாக்கியம் எனக்கு கிடைத்ததற்காக நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

கட்ட: வன்னியனுரே! நீர் அங்கு செல்வதில் மிக எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். உம்மைச் சிறைபிடிக்க அவர்கள் ஏதாவது சூழ்ச்சி செய்தாலும் செய்வார்கள். அபாயமில்லாமல் தப்பி உபாயத்தோடு திரும்பி வாரும். பிறகு நான் பார்த்துக் கொள்கிறேன்.

வன்: நல்லது அரசே! நான் வருகிறேன். (போதல்)

கட்ட: தானுபதி! மற்ரெரு ஒற்றனையும் பின்னுல் அனுப்பி அங்கு நடக்கும் விபரத்தை அறிந்து வரச் சொல்லும்.

தானு: உத்தரவு.

காட்சி 12

இடம்: கும்பினியாரின் அரண்மனே.

உறுப்பினர்: ஜெனரல் பானர்மென், துரைகள், எட்டப்ப நாயக்கர், பக்கட், சேவகன், வன்னியனுர்.

நிலைமை: எல்லோரும் உட்கார்ந்து கொண்டு பானம் அருந்துகிருர்கள். சேவகர் இருவரும் முன்ருல் நிற்கிருர்கள்.

சேவ 1: (மற்ருெரு சேவகனைப் பார்த்து) அடே, அங்கே பார்த்தியா?

சேவ 2: என்னத்த பார்க்க, திண்ணுகிட்டு இருக்காங்களே அவுங்க வாயையும், வவுத்தையும் பார்க்கச் சொல்றியா?

சேவ 1: அட தீவட்டி, அங்கே கோமுட்டி மாதிரி ஒருத்தன் இருக்கானே, அவனைப் பார்த்தியாண்ணே?

சேவ 2: அதான், வாயும் வவுறும் புடக்கத்திண்ணுகிட்டு இருக்காரே, அவருக்கென்ன?

சேவ 1: அவரு யாரு தெரியுமாடா உனக்கு?

சேவ 2: எவனே இருந்துட்டுப் போருன். அதைப்பத்தி நமக்கென்னடா? ஒரு துளி பானத்துக்கு வழியில்லே......

சேவ 1: அதைத்தாண்டா நானும் சொல்ல வர்ரேன். ஒன்னே மாதிரியும் என்னைமாதிரியும் உண்மையா உழைக்கிறவனுக்கு இதுகாலமில்லே, தம்பி! அந்த தண்டச்சோத்து தடிராமன் மாதிரி அவன் நாட்டுக்காரனுக்கே எதிரியா இருந்துக்கிட்டு, இங்கே திட்டம் போடுரானே இந்த எட்டப்பன், இவமாதிரி ஆளுங்களுக்குத்தான் இது காலம்.

சேவ 2: சரிதான் போடா, பெரிய உண்மையை கண்டு பிடிச்சிட்டான்! அவன் நாடுன்னு என்ன எழுதியா வச்சிருக்கு, சமய சந்தர்ப்பத்துக்கு ஏத்த மாதிரி எல்லா வேஷமும் போட்டுக்கிட்டு அப்படியே காலத்தைத்தள்ள வேண்டியது தாண்டா சரி! நீ வேணும்னாலும் பாரு, இப்ப இந்த எட்டப்பருக்கு எவ்வளவு மதிப்பு இருக்கு பார்த்தியா!

பானர்: (எழுந்திருந்து) இந்த விருந்தில் கலந்து கொண்ட எல்லோருக்கும் கம்பெனியின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக நமது புது நண்பர், நமது நலமே தனது நலம் எனப்பேணும் எட்டயாபுரம் ஜமீன் எட்டப்ப நாயக்கருக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் மட்டும் என்ன, நமது கம்பெனியே கடமைப் பட்டிருக்கிறது! அவர் இதுவரையும் நமக்குச் செய்துள்ள உதவி, முக்கியமாக, கட்டபொம்மனைச் சிறை பிடித்துக்கொடுக்கத் தீட்டித் தந்த திட்டங்களும், அதற்காகத் தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்யத் தயாராகக் காத்திருக்கும் அவரது தயாள குணமும் கம்பெனியார் மீது அவருக்கு இருக்கும் அன்பும் ஒருக்காலும், ஒருவராலும் மறக்க முடியாத சரித்திரப் பிரசித்தமாய் விட்டது. தன் சொந்த இனத்தவருக்கு வஞ்சகம் புரிந்து, தன் தாய்நாட்டை நெஞ்சஞ்சாமல் நமக்குக்குக் காட்டிக்கொடுக்கிறான் என்று தவறாக சிலர் நண்பர் எட்டப்பரைக் கருதலாம். ஆனால் வருங்காலம் இந்த ஒரு கட்டபொம்மன் போல் எத்தனை பொம்மன்கள் அவதரித்தாலும் ஆட்சிசெய்வது கடினம் என்ற உண்மை நிலை உணர்ந்து தான், நமது ஆட்சியை நிலை நிறுத்தப் பாடுபடுகிறார். அதிலும் நமது ஆட்சியை அவரே விரும்புகிறார் என்றால்,

அது நமது ஆட்சியின் நீதியையும் நேர்மையையும் தான் எடுத்துக்காட்டுகிறது. தமிழ் நாட்டில் எட்டப்பர் ஒருவர் இருக்கிருரே என்பதற்காகத்தான் கட்டபொம்மனுடைய கோட்டையும் இருக்கிறது. அவருக்கு நாம் என்றும் கடமைப் பட்டிருக்கிரேம். எனவே இதுவரை அவர் செய்து வந்த சேவையோடு இனியும் மிக ஊக்கமாகப் பாடுபட்டு, கட்ட பொம்மனை முடித்துக்கட்டும் இறுதி நாள் எது என்ற உண்மை யையும் எடுத்துக் கூறுவார்கள் என்று நம்புகிறேன். அத்துடன் சிவகிரியாரும், புதுக்கோட்டையாரும் இதற்குப் பரிபூர்ண ஒத்துழைப்பு செய்வார்கள் என்று நம்புகிறேன். அவருக்கு கம்பெனியாரின் அன்புக்காணிக்கையாக இந்தப் பொன்மாலையைச் சூட்டுகிறேன்.

[பானர்மென் எட்டப்ப நாயக்கருக்கு மாலை சூட்டிக் கை குலுக்குகிருன்]

எட்: கனம் பொருந்திய துரை அவர்களுக்கும் மற்றும் கூடியுள்ள அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். துரை அவர்கள் என்னைப்பற்றியும், என் அருங்குணங்களைப்பற்றியும் உங்களிடம் அதிகமாகச் சொல்லி விட்டார்கள். இருந்தாலும் என்னை சிலர் தேசத்துரோகி; காட்டிக்கொடுக்கும் கயவன்; பயங்கொள்ளி என்றெல்லாம் அழகிய புனைப்பெயரிட்டு அழைக்கிருர்கள். அதுவும் என் செவிகளுக்கு இன்பமாகத்தான் இருக்கிறது. என்னைப் பொறுத்தமட்டில் என்னைப்போன்ற ஜமீன்தார்களுக்கு நான் சொல்லிக்கொள்வது என்னவென்ருல், நம்மை நாம் காத்துக் கொள்ளவேண்டுமானல், தாய் நாடு வாழவேண்டுமானல், நமக்குத் தகுதி வாய்த ஒரு தலைவன் வேண்டும். அந்தக் தலைவன் சகல வல்லமையும் பொருந்தியவனுகவும் இருக்க

வேண்டும். அப்படிப்பட்டவர்கள் ஆங்கிலேயர்களைத் தவிர வேறு யாருமல்லர். நம்மைக்காக்கும் தந்தை ஆங்கிலேயர்கள்தான். 5000 மைல்களுக்கப்பாலிருந்து நம்மை ஆளும் சக்தி படைத்த இந்த வெள்ளையர் ஆதிக்கத்துக்கு நாம் அடிபணிந்து, அவர்கள் இட்ட கட்டளைகளை சிரமேற்கொண்டு அஞ்சி, நடுங்கி நடந்து கொள்ளவேண்டியது நமது ஒவ்வொருவருடைய முக்கியமான கடமையாகும். எனவே என் உயிர் உள்ளளவும் நானும் என் பரம்பரையும் கம்பெனியாருக்கே உழைத்து ஊழியம் செய்வோமென்று உறுதியாகக் கூறுகிறேன். (எல்லோரும் கைதட்டுதல்)

[சேவகன் ஒருவன் வந்து பானர்மெனை வணங்கி]

சேவ: சார்! பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து தூதன் ஒருவன் வந்திருக்கிறான்.

எட்: (நடுக்கத்துடன்) என்ன, பாஞ்சாலங்குறிச்சியிலிருந்தா?

பானர்: ஏன், பயமாயிருக்கிறதா உமக்கு?

எட்: (நாவு தடுமாற) ஹ...ஹ......இல்லை இல்லை. பக்கத்தில் நீங்கள் இருக்கும் பொழுது எனக்கென்ன பயம்? அவன் வரட்டும்...நான் பார்த்துக்கொள்கிறேன்.

பானர்: அழைத்துவா! (சேவகன் போகிறான்) கட்டபொம்மனை அழைத்ததற்கு தூதனையா அனுப்பி இருக்கிறான்! மடையன்! நம்முடைய சூழ்ச்சிகளைப் புரிந்துகொண்டுவிட்டான் போலிருக்கிறதே. பெரிய புத்திசாலிதான். தூதனா வருகிறான், இதுவும் நல்லதுதான். இன்றைக்கு இவனைச் சிறைப்பிடித்தால் நாளைக்கு அவன் படையெடுப்பான். பின்பு அவன் முடிதுறப்பதென்ன நடக்காத காரியமா? பாஞ்சாலங்குறிச்சியானை பரதேசியாக்கச் சரியான சந்தர்ப்பம்.

[வன்னியனார் சபையை நோக்கி வருதல்]

வன்: நமஸ்காரம் துரையே!

பானர்: யார் நீ? எங்கு வந்தாய்?

வன்: துரையே! தலை முறை தலை முறையாக, தன்னிகரற்று—படைப்பலம் பெற்று வாஞ்சையை வளர்த்து, கோட்டையை வளர்த்து—கொடுஞ்சமர் புரிந்து, திக்கெட்டும் பரவ ஜெயக்கொடி நாட்டி, அன்னியராட்சியின் ஆதிக்கம் அலற ஆற்காட்டு நவாப் சாதிகான் தளர, திசைகாவல் புரிந்து மகசூலைப் பிரித்து, சின்ன நவாப் என்ற சிறப்புப்பெயர் பெற்று, மன்னாதி மன்னரெல்லாம் பணிய மணி முடி தரித்து மக்களின் மங்கள வாழ்வுக்காகப் பாஞ்சையை வாஞ்சையுடன் அரசாண்டுவரும் மன்னாதி மன்னர், வணங்காமுடி மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மு மகாராஜாவே எமதரசர், அவர் அனுப்பிய தூதன் யான். என் பெயர் வன்னியனார்.

பானர்: ஓஹோ...இவ்வளவு கனத்தவரா உங்கள் மகாராஜா? வருவதாக ஒரு வார்த்தை சொல்லி அனுப்பியிருக்கக்கூடாதா? (சிரிப்பு) என்ன விஷயமாக வந்தீர்களோ?

வன்: நீங்கள் வரச்சொல்லி எழுதியிருந்த கடிதத்தின் காரணமாக...

பானர்: நான் வரச் சொன்னது......

வன்: ஆம், மகாராஜாவைத்தான். அவர்களுக்கு வர சௌகரியமில்லாததால் என்னை அனுப்பி வைத்தார்கள்.

பானர்: அப்படியானால், மகாராஜா பேச வேண்டியதைப் பூராவும் நீரே பேசுவீர் என்று சொல்லும்.

வன்: ஆம், கூடுமான வரையில்.

பானர்: அப்படியானல் மகாராஜாவின் பிரதிநிதியென்றே சொல்லும்.

வன்: ஆம், அப்படியே வைத்துக் கொள்ளுங்களேன்!

பானர்: வைத்துக் கொள்வதென்ன? வன்னியனாரே, உமக்கு வாழ நான் வகை செய்கிறேன்—நிறைய பணம் தருகிறேன். ஏன்? கும்பினியின் ஆதிக்கத்தில் உம்மை பாஞ்சையின் அரசனாகவே ஆக்கி விடுகிறேன்—என் வார்த்தையைக் கேட்டால்!

வன்: துரையே! பொன்னைக்காட்டி உன் போன்று மண் சேர்த்து வைத்திருக்கும் மானமிழந்தவனல்ல நான். மண்ணோடு மண்ணாவதானாலும் சரி, உன்னோடு இணங்க ஒருக்காலும் முடியாது.

பானர்: என்ன, என்னையா எதிர்த்துப் பேசுகிறாய்? வன்னியனாரே, நடுக்கடலிலே தீப்பற்றிக்கொண்ட கப்பலிலிருந்து தப்பித்துக்கொள்ள உமக்கு ஆசை இருக்கிறதா?

வன்: உன்னைக் கெடுக்கிறது உன் புத்தி! ஆயிரம் ஆயிரம் மக்களோடு அங்கே என் மன்னர் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் போது, கேவலம் என் உயிர் மட்டும் என்ன கரும்பா, தேனா? அல்லது...

பானர்: எதுவாயிருந்தால் என்ன? இரண்டும் நல்ல ருசி உள்ளவை தானே! ஒரு சமயம், ருசி உள்ள பழத்தை எங்கே வெட்டிப் புசித்து விடுவார்களோ என்று பயப்படுகிறீரா வன்னியனாரே? உமக்கு அந்தவிதமான ஆபத்து ஒன்றும் ஏற்படாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். என்னை நம்பும்.

வன்: உன்னை நான் நம்புவதா! ஆங்கிலேயன் யார் தெரியுமா?

எட்: தெரியுமே! உன்னைச் சூரையாட வந்த வீரன் என்று.

வன்: ஆம், நீ ஒரு கோழையாக இருக்கும்போது!! வீரர்களிடம் நேரிடையே போரிட முடியாது, எதிரிகளின் பின்னே வந்து

பேடித்தனமாக வெட்டி வீழ்த்தும் கோழை, சூழ்ச்சிக்காரன், நயவஞ்சகன், இருக்கக் கொடுத்த இடத்தையும் படுக்கை இடமாக்கிய பாதகன் அல்லவா ஆங்கிலேயன்...

எட்: சரிதான் நிறுத்து. எல்லாம் தெரிந்தவன் போல...

வண்: ஆம், அது எங்கே உனக்குத் தெரியப்போகிறது! படித்தும் படித்தபடி நடக்கத்தெரியாதவனே, அது எங்கே உனக்குத் தெரியப் போகிறது? தம்பி ஆள்வது பொறுக்காமல், பகைவனிடம் கெஞ்சிக்கூத்தாடி, கும்பிட்டு, அவன் கொடியைக் கையில் எடுத்து ஊர் சுற்றித்திரியும் ஏவலாளியே—அது எங்கே உனக்குத் தெரியப்போகிறது? அவன் இட்ட எச்சில் உணவை உண்டு காலத்தைக் கழிக்கும் கயவனல்லவா நீ! தமிழகத்தை மறந்த நீயும் ஒரு தமிழனு? மானம், சூடு, சொரணை உன்னிடம் இருந்தால் — ஸ்தானம் விட்டு ஸ்தானம் வந்து, தானம் கேட்கும் பாவனையில், மானமிழந்த மனிதனுக நீ வாழ்வாயா? சுதந்திர கோஷமிடும் சுதந்திர புருஷர்களையும், தாய் நாட்டு பக்தர்களையும், தேசத் தொண்டர்களையும், எதிர்த்து அடிக்கவரும் அன்னியன் வீட்டு அடிமையே! சுயாட்சி செய்துவரும் எங்களைத் தொலைக்க, நியாய அநியாயம் தெரியாது, எடுத்ததற்கெல்லாம் குறை கூறிக்கொண்டிருக்கும் நீதான் சாதித்துவிட்ட சேவை என்ன? முன்னோர்கள் தேடி வைத்த சொத்தை நிலை நாட்டத் தெரியாமல், அயல்நாட்டுக் கீதம்பாடி, ஆங்கிலேயனைப் பார், வெள்ளையனைப் பார்! பார்! பார்!! என்றுதான் கூவிக்கொண்டிருக்கின்றாயே தவிர, செய்யும் காரியங்களுக்கெல்லாம் இடையூறுதான் செய்து கொண்டிருக்கின்றாயே தவிர, மேல் நாட்டின் மேன்மையைப் பற்றித் தெரிந்த நீதான் நம் நாட்டுக்கு செய்து வந்த சேவை

யென்ன? நாட்டின் நலனுக்காக நம் மன்னன் அங்கே அவதிப் பட்டுக் கொண்டிருக்கும்போது — நீ எதிரியின் பாட்டிலே, பாசறையிலே விருந்துண்டு விளையாடிக்கொண்டிருக்கிறாயே, இதுதான் நீ நாட்டுக்குச் செய்யும் நல்ல பணியோ? உன் போன்ற காட்டிக்கொடுக்கும் கயவர்கள் இந்நாட்டில் உள்ளளவும் ஒருக்காலும் மனித குலம் உய்ய முடியாது. முத லில் நீ ஒழியவேண்டும். அப்போதுதான் நாடு நலம் பெறும்.

எட்: சீ!.....என்னைப்பற்றிப் பேச உனக்கு என்ன உரிமை இருக்கிறது?

வன்: பண்பு கெட்டவனே! நீ தமிழனாகப் பிறந்துவிட்ட உறவு இருக்கிறது. தமிழ்த்தாய் வயிற்றிலே நீ ஏன் தவறிப் பிறந்தாய்? தமிழ் நாட்டின் தலைவாசலிலே தலைமகன் வீரபாண்டியன் காவல்; மேல் நாட்டின் மேஜருக்கு, நீ இங்கே குற்றேவல்! தாயின் மணிக்கொடிக்கன்றி வேறொன்றுக்கும் தலை வணங்காத தமிழரசு அங்கே; பேயின் இனக்கொடியைக் கரமேந்தி ஊர் சுற்றித் திரியும் நீ இங்கே! ஐயாயிரம் மைல் களுக்கு அப்பால் இருந்து இவன் அனுப்பியா நீ உண்ண வேண்டும்? உன் நாட்டில் விளைவதென்ன மண்ணா?

எட்: சீ, துரோகி! போதும் உன் பிரசங்கம்!

வன்: யாரைப்பார்த்து துரோகி என்கிறாய்? அன்னியனுக்கு நாட்டை அடக்கம் செய்ய ஆலோசனை புரிய வந்த நீ துரோ கியா — நாட்டின் சுதந்திரத்திற்காக தூது வந்த நான் துரோகியா? "துரோகி" என்று கூறிய இவ்வார்த்தை மட்டும் எம் மன்னர் காதில் பட்டிருந்தால், இதற்குள் உன் தலை கீழே புரண்டிருக்கும்.

பானர்: (வேகமாக வந்து வன்னியனார் கன்னத்தில் படீர் என்று அடித்து) கேப்டன் டல்லாஸ்! இந்தப் புலிக்குட்டியைக் கொண்டுபோய் கூண்டில் அடையுங்கள்.

[சேவகர்கள் வந்து பிடித்துக்கொள்ளுதல்]

வன்: துரையே, இதுதான் உமது நீதியா? தூதனைப் பிடித்து சிறையிலடைப்பது தான் அரச தர்மமா?

பானர்: இழுத்துச் செல்லுங்கள் இவனை.

வன்: உனக்கு முடிவு காலம் நெருங்கி விட்டது. எம் மன்னவரை எதிர்த்து நின்றவர் இதுவரை எங்குமே இல்லை. நீ மண்ணோடு மண்ணாவது மட்டும் திண்ணம்.

[இழுத்துச் செல்கிறார்கள்]

பானர்: என்ன எட்டப்பரே! வந்தவனை உபசரித்த முறை சரிதானா?

எட்: ஆஹா, சரியான உபசாரம், சரியான உபசாரம்!!

பானர்: அதிருக்கட்டும், இப்போது கட்டபொம்மன் நிலைமை என்ன என்பது உமக்குத் தெரியுமா?

எட்: ஆகா, படையெடுக்கத்தானே?

பானர்: ஆம், படையெடுக்கத்தான் — அப்பாதகனைத் தொலைக்கத்தான்.

எட்: சரியான முடிவு. தடையேதுமின்றி தாராளமாகச் செல்லலாம்.

பானர்: படையேதும் தன் பக்கம் வைத்திருப்பானோ அவன்?

எட்: அதேது துரையே அவனிடம் இப்போது?

பானர்: தற்போதைய நிலை தான் என்ன எட்டப்பரே?

எட்: சற்றேனும் மலையாமல் செல்லலாம். உறவினரும், தம்பி ஊமைத்துரையும் திருச்செந்தூருக்கு முருகன் விழாவிற்குப் போயிருக்கிறார்கள். மந்திரி தானுபதிப் பிள்ளையோ ஓய்வுக்காக ஆத்தூர் போயிருக்கிறார். கோட்டையிலே இப்போது ஒரு குஞ்சுகூட இருக்காது. உடனே சென்றால் அவனைத் தடையின்றி கட்டிவிடலாம். இது தான் தக்க சமயம். தாங்கள் தாமதம் செய்யக்கூடாது. உதவிக்கு நானும், என் படையும் வருகிறோம்.

பானர்: எட்டப்பரே! உமது உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்.

எட்: செய்யலாம் துரையே, செய்யலாம்!

பானர்: என்ன அது?

எட்: உங்கள் பாதத்தின் கீழ் என்னை அந்த பாஞ்சாலங்குறிச் சிக்கு சிற்றரசனுக......நான் உங்கள் அடிமை...உங்களுக்காகவே உழைக்க உறுதிகொண்ட உங்கள்.........

பானர்: எட்டப்பரே! இதை நீர் சொல்லியா நான் செய்ய வேண்டும். உலகில் என் ஆட்சி உள்ளளவும் பாஞ்சை உமக்குத்தான். எட்டப்பரே! நீர் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். உமக்கு வேண்டிய வசதிகளை நான் பார்த்துக் கொள்கிறேன். இன்று முதல் உமக்கு கம்பெனியாரின் பகதூர் பட்டம் கொடுத்திருக்கிறேன். இனி உம்மை பகதூர் எட்டப்ப நாயக்கர் என்று அழைக்கிறேன்.

எட்: தங்கள் கட்டளை என் பாக்கியம்!

பானர்: பகதூர் எட்டப்ப நாயக்கரே! நீர் உடனே சென்று படை திரட்டி வாரும். பாஞ்சாலங்குறிச்சியாரைப் படுகுழியில் புதைத்துவிடுவோம். கேப்டன் பக்கட்!

(பக்கட் எழுந்து நிற்கிறார்)

பானர்: பாஞ்சாலங் குறிச்சியை நோக்கி நமது படைகள் புறப் படட்டும். அவனுக்கு எந்த விதமான அறிவிப்புமின்றி இன்று இரவு ஒன்பது மணிக்கு போர்! போர்!! போர்!!! (சிரிப்பு) கேப்டன் பக்கட்! அதோடு தானுபதியைப் பிடிப்பதற்காக, ஆத்தூருக்கு இருநூறு வீரர்களை அனுப்பி அவனைக்கைதியாக்கி என் காலடியில் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். தெரிந்ததா?

பக்கட்: அப்படியே செய்கிறேன்.

பானர்: நாளை மாலை சூரியன் அஸ்தமனமாவது போல் அவன் சாம்ராஜ்யமும் அஸ்தமனமாகும். அவன் கோட்டை தவிடு பொடியாகி, ஆண்களும் பெண்களும், பச்சிளங்குழந்தை களும் ஆ...ஓ... என்று ஓலமிட்டு பதறித் துடித்து உயிர் துறக்கும் பெருநாள்! நாளைய நான் ஒரு நன்னுள்!! ஆங் கிலேயரின் சரித்திரத்திலேயே பிரசித்தி பெற்ற ஒரு பொன்னுள்!!! தமிழனுக்கும் வெள்ளையனுக்கும் உரிமைப் போர் நடக்கும் முதல் நாள்!!!! இதுவரை யாரும் கண்டும், கேட்டுமிராத உயிர்வதை, உடல் வதை. கோட்டை வாயிலிலே தானுபதியின் தலை சித்ரவதை! (கோரச்சிரிப்பு) என் திறனை மதியாதானே, நாளை நீ சித்ரவதை! சித்ரவதை!!

காட்சி 13

இடம்: போர்க்கள மேடை.

உறுப்பினர்: கட்டபொம்மன், கெடிவெட் டூர் நாயக்கர், படைவீரர்கள், சேவகன், சிவத்தையா.

நிலைமை: படைவீரர்கள் சூழ அரசர் அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருக்கிறார். அப்பொழுது சேவகன் ஒருவன் ஓடி வருகிறான்.

சேவ: மகாராஜா! தூதுபோன வன்னியனாரைப் பிடித்து சிறையில் அடைத்து விட்டார்கள். அதோடு நம்மீது படையெடுத்து ஒரு பெரும் படை...ஊருக்கு ஐந்தாவது மைலில் வளைத்துக்கொண்டது மகாராஜா!

கட்ட: ஆ! அப்படியா?

சேவ: ஆம். இவ்வளவுக்கும் காரணம் எட்டப்ப நாயக்கர்தான். அவர் படைதான் முன்னால் நிற்கிறது.

கட்ட: எட்டப்பா, உன் புத்தி என்ன கெட்டுவிட்டதா? உன்னால் நாட்டை வளப்படுத்த முடியாவிட்டாலும், என் இப்படி அலங்கோலமாக்குகிறாய்? மானமிழந்து அவனிடத்தில் மண்டியிட்டு வாழும் உன் வாழ்வும் ஒரு வாழ்வா? இதைவிட இரந்துண்பது மேலாயிற்றே! எட்டப்பா! உன் கொட்டத்தை அடக்குகிறேன், பார்! தமிழ் உறவால் ஒன்றுபட்ட நம்மிடையேயா உனது சாகசத்தைக் காட்டுகிறாய்? ஒன்று நீயும், உன் கொட்டமும் ஒழியவேண்டும். இன்றேல் நான் சுவர்க்கம் போகவேண்டும். (கோபமாக) வெள்ளையத்தேவரே! திரட்டும் இருக்கின்ற படைகளை! நீர் வடக்கு வாயிலிலும், ஆதனூர் ரணசிங்க நாயக்கரை தெற்கு வாயிலிலும், கொல்லங்கிணறு நாகண்ண நாயக்கரை கிழக்கு வாயிலிலும், முள்ளுப்பட்டி முத்தையா நாயக்கரை மேற்கு வாயிலிலும் அனுப்பி உரிமைப் போராக நடத்தி ஜெயக்கொடி நாட்டுங்

கள்! வில்லாலர்களை ஏவி, வெள்ளையர்களின் தலை தெறிக்க ஓடச்செய்யுங்கள். தமிழ்த்தாய் வயிற்றில் பிறந்த வீரப் பெரு மக்களே! வீறுகொண்டெழுங்கள்! வீணர்களை வெட்டுங் கள்! அன்னியர்களை அடக்குங்கள்! சுய உரிமையைப் பறிக்க வந்த இந்த சுதந்திர எதிரிகளின் தலைகளைச் சுக்கு நூருக்கி காக்கைகளுக்கும், கழுகுகளுக்கும் இரையாகக் கொடுங்கள். இன்று நடக்கும் போர், சுதந்திரப் போர்! தமிழ்நாட்டின் தாய் மானத்தைக்காக்கும் தனி உரிமைப்போர்! தமிழனுகப் பிறந்த ஒவ்வொருவனும் இதில் தவருமல் கலந்துகொள்ளுங்கள். வீரர்களே! உண்மையாக உங்கள் தாயை ஒருவன் அடமாகக் கவர்ந்து செல்ல, திடமாக முன் வந்து கை நீட்டி எட்டிப் பிடித்துக்கட்டி அணைக்கும் காட்சியை நீங்கள் கண்டால், உங்கள் மனம் படும்பாட்டை நீங்கள் நன்கு உணர்வீர்கள். குணங்கெட்ட செயலில் ஈடு பட்டவனை ஒழித்துக்கட்டுவதற்காக இன்றே புறப்படுங்கள்.

[கெடிவெட்டூர் நாயக்கர் பதட்டத்துடன் ஓடி வந்து]

கெடி: மாப்பிள்ளை!

கட்ட: என்ன மாமா! எதிரிகளால் தங்களுக்கு ஏதாவது இடையூரு?

கெடி: இல்லை மாப்பிள்ளை!

கட்ட: பின்? என்ன மாமா, தாங்கள் நடுங்குவதற்கு காரணம்?

கெடி: மாப்பிள்ளை! இல்லை...மகாராஜா! நான் சொல்லுவதை தயவு செய்து கேட்கவேண்டும்.

கட்ட: அப்படி என்ன மாமா, நீங்கள் சொல்லப்போகிறீர்கள்? தைரியமாகச் சொல்லுங்கள்.

கெடி: மகாராஜா! உங்களுக்கு ஒரு ஆபத்து என்றால் அது எனக்கும்தானே?

கட்ட: ஆமாம். அதற்கென்ன?

கெடி: உங்களுக்கு தாய் மாமனாக நான் இருந்தும் தக்க சமயத்தில் உதவி செய்யாவிட்டால் நாளை உலகம் என்னைத் தூற்றத் தானே செய்யும்.

கட்ட: ஆம். யார் இல்லையென்றார்கள்?

கெடி: தேச நலனைக் காப்பது உங்கள் கடனாக இருந்தாலும் உங்கள் நலனைப் பாதுகாப்பது என் கடன் அல்லவா?

கட்ட: ஆம். அது உங்கள் கடன்தான். அதற்கு இப்போது என்ன?

கெடி: மாப்பிள்ளை! நான் சொல்வதை நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும்.

கட்ட: சொல்லுங்கள் மாமா! பெரிய பீடிகை போடுகிறீர்களே!

கெடி: மகாராஜா! தம்பி ஊமைத்துரை திருச்செந்தூரிலிருந்து இன்னும் வரவில்லை. மந்திரி தானாபதிப்பிள்ளையோ தந்திரமாகத் தப்பி ஆத்தூர் போய்விட்டார். தாங்கள் இப்போது தனிமையாக இருக்கிறீர்கள். நமது படைகளோ, பல பக்கங்களிலும் சிதறிக்கிடக்கிறது. கோட்டைக்குள் இருக்கும் நமது படையைப் போல பல மடங்கு அதிகமாக, பீரங்கிப் படைகளுடன் எதிரி பானர்மென் கோட்டையைச் சுற்றிக்கொண்டான். இந்நிலையில் நாம் போர் செய்தால், வெற்றி அவன் பக்கம் என்பதற்கு சந்தேகமில்லை! நம்மைப் பொறுத்த நல்ல

காலம் தானே என்னவோ, ஜெனரல் பானர்மென் என்னை வரவழைத்து "தானுபதியைச் சிறைப்பிடித்துக் கொடுத்து, வரிப்பணத்தையும் கட்டிவிட்டால் யுத்தத்தை நிறுத்திக்கொள் கிறேன். நீர் போய் இரண்டரை நாழிகைக்குள் திரும்ப வேண்டும்" என்று என்னை இங்கு அனுப்பி வைத்தார். தயவு செய்து நீங்கள் யுத்தத்தை நிறுத்திக்கொண்டு சமாதான மாகப்போனால் அது எவ்வளவோ நல்லது. என் வார்த் தையைக் கேளுங்கள். தங்கள் வருகைக்காக துரைகள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். வாருங்கள், போய் சமாதானம் செய்து கொள்ளலாம்.

கட்ட: மாமா! உங்களுக்கென்ன மதி மயங்கி விட்டதா? அல்லது எதிரியின் படையைக்கண்டு ஒடுங்கிவிட்டீர்களா? உங்களுக்கு ஒரு ஆபத்தும் வராமல் நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் போய் சுகமாகத் தூங்குங்கள்.

கெடி: மாப்பிள்ளை! அப்படிச் சொல்லக்கூடாது. நிலைமையைக் கொஞ்சம் நினைத்துப்பார்க்கவேண்டும்.

கட்ட: நினைத்துப் பார்த்துத்தான் சொல்லுகிறேன். தூது சென்ற வன்னியனாரை தூதனென்றுகூடப் பாராமல் கைது செய்தான். தம்பியும், படையும் கோட்டையில் இல்லையென்பதை அறிந்தும், அறிவிப்பின்றி இரவோடு இரவாகப் படையெடுத் திருக்கிறான். இப்படியெல்லாம் செய்தால் பயந்து வந்து அவன் பாதத்தைப் பணிவேன் என்று எண்ணுகிறான். அது பலிக்காமல் போகவே, இப்போது தங்களைக்கொண்டு பய முறுத்தி காரியத்தைச் சாதித்துக்கொள்ள திட்டமிட்டிருக் கின்றான். தங்களை தூதனைப்போல் பாவனைக்குத்தான் அனுப்பியிருக்கிறானே தவிர, உண்மையில் என்னைக்

கொல்ல வந்த காலனாகவே உங்களை அவன் கருதியிருக்கிறான். இத்தனைக்கும் காரணம் யார் தெரியுமா, மாமா! அவன்தான், தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்தானே துரோகி, அந்தத் தன்மானமற்ற எட்டப்பன் தான்! அவனைப் பார்த்துமா நீங்கள் சமாதானம் செய்ய வேண்டுமென்கிறீர்கள்? முதலில் அவன் ஒழியவேண்டும்.

கெடி: மகாராஜா! நீங்கள் ஒரே நோக்கமாய் இருப்பது சரியல்ல. எல்லோரையும் போல நாமும் நடந்து கொள்வது தான் நல்லது. அவர்களுக்கு இல்லாத குறையா நமக்கு மட்டும் வந்து விடப்போகிறது. நான் சொல்வதை......

கட்ட: என்ன நீர் சொல்வது? பேடியைப்போல அவன் காலடியிலே போய் விழச் சொல்வது தானே! முன் வைத்த காலை நான் ஒருக்காலும் பின் வைக்கமாட்டேன். தானாபதி பிள்ளையைச் சிறைப் பிடித்துக் கொடுக்கவும் முடியாது. இங்கு இருக்கும் இச் சிறு படைகளும், என் உள்ளத்தில் இருக்கும் சுதந்திர வீர உணர்ச்சியுமே எனக்குப் போதுமானவை. பாண்டியன் பரம்பரையை, வீரப்பாண்டிய கட்ட பொம்மனை யார் என்று நாளை எனது வாள் அவனுக்குக் கூறும். **(கெடி வெட்டூர் நாயக்கர் போகிறார், கட்ட பொம்மன் படை வீரர்களைப் பார்த்து)** போர் முரசு முழங்கட்டும்! சுதந்திர வீரர்களின் தாகத்தை நாளை அவன் காணட்டும். தமிழ் நாட்டில் பிறந்தவரின் உரிமையைக் காக்கும் போர்! போர்!! போர்!!!

மதமதத்த கைகளுக்கு நல்ல வேட்டை—தினவெடுக்கும் தோட்களுக்குத் தரும் ஒரு சிறந்த பயிற்சி—கணகணக்கும் வில்லுக்கும், உறையிலிருக்கும் வாளுக்கும் தக்க விருந்து—

வையகத்தை ஓர் குடையின்கீழ் ஆளக் கனவு காணும் ஆங்கிலேயனுக்கும், தமிழகத்தைக் காத்து நிற்கும் தன்மானமுள்ள நமக்கும் நாளைப் போர்! உலகச்சரித்திரத்திலேயே உன்னதமான இடம்பெறும் உரிமைப்போர்!! இன்றும் என்றும், கண்டும் கேட்டுமிராத கடும்போர்!!! பீரங்கிக் குண்டுகளை எதிர்த்து பாராங்கற்களை வீசி பலரைப்பதை பதைக்க வைக்கும் போர்! போரிலே வெற்றி இன்றேல் வீர சொர்க்கம். மார்பிலே குண்டேந்தி மாள்வோம் அல்லது வெற்றிமுரசு கொட்டி வாழ்வோம்! அன்னியன் ஆட்சியை கையாலும் வாயாலும், தலையாலும் தூக்கிச் சுமக்கும் இந்தத் தான்தோன்றிகளைத் தரைமட்டமாக்கி விடுவோம்! தியாக உணர்ச்சிமிக்க திலகங்களே! பாண்டிய வம்சத்து பரம்பரைகளே! பாஞ்சாலங்குறிச்சி பெற்றெடுத்த வீரர்களே! நீங்கள் இந்தப் பாரத பூமியில் பிறந்து, வளர்ந்து பெருமிதப்பட்ட பெருமைக்காகவாவது, நான் ஒரு ஆங்கிலேயனையாவது கொல்லாமல் உயிர்துறக்கமாட்டேன் என்று திடசங்கல்பம் செய்து கொள்ளுங்கள். நம் உடலும், உள்ளமும், ரத்தமும் கொதிக்கும் கொதிப்பிலே அவர்களுடைய கொடுமைகளைப் போட்டு வதக்குங்கள். அவர்கள் தவிக்கத் தவிக்க இனி உன் தாய் நாட்டைத் தலையெடுத்தும் பாரேன் எனச் சொல்லும் படியாக சுதந்திர வெப்பத்தில் போட்டு வாட்டுங்கள்!

படைவீரன்: வீரபாண்டிய கட்டபொம்மு மகாராஜாவுக்கு...

எல்லோரும்: ஜே!......

ப. வீரன்: வீரபாண்டிய கட்டபொம்மு மகாராஜாவுக்கு...

எல்: ஜே!......

ப. வீரன்: பாரதநாடு......

எல்: வாழ்க !

ப. வீரன்: அன்னியன் ஆட்சி ... ...

எல்: ஒழிக !

ப. வீரன்: ஆங்கிலேயன் ஆட்சி ... ...

எல்: ஒழிக !

ப. வீரன்: வீரபாண்டிய கட்டபொம்மு மகாராஜாவுக்கு......

எல்: ஜே !... ...

காட்சி 14

இடம்: போர்க்களம்.

உறுப்பினர் : கட்டபொம்மு படைகள், பானர்மென் படைகள், கட்டபொம்மு, பானர்மென், காலன் துரை.

நிலைமை: யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. கோட்டைமீது துப்பாக்கிக் குண்டுகள், பீரங்கிக்குண்டுகள் சரமாரி பொழிகின்றது. பலத்த சண்டைக்குப் பின் கோட்டையின் வடக்கு வாயில் தகர்க்கப்படுகிறது. . அந்தக் கோட்டையின் உள் வாயிலில் இருந்த வெள்ளையத் தேவர், வெள்ளைப்படை தளபதி ஆலன் துரையை தனது ஈட்டியால் நெஞ்சில் குத்திவிடுகிருர். அது முதுகுக்கு ஊடுருவி வந்த அந்த இடத்திலேயே ஆலன் மரணமடைகிருன்.

வெள்ளையத்தேவர்: *தொலைந்தான் ஆலன்!*

[மறுகணம் வெள்ளையத்தேவர் மீது குண்டு ஒன்று விழுந்து அவரும் கோட்டை வாயிலிலே இறக்கிறார். கட்டபொம்மு படைகள் மும்முரமாக முனைந்து சண்டை செய்கிறார்கள். வெள்ளைப் படைகள் வெருண்டு ஓடுகிறார்கள். சண்டை முடிகிறது]

காட்சி 15

இடம்: *வெள்ளையன் அரண்மனை.*

உறுப்பினர்: *பானர்மென், துரைகள், சிப்பாய், நடனமாது.*

நிலைமை: *நடனம் நடந்து கொண்டிருக்கிறது. அப்பொழுது சிப்பாய் ஒருவன் நடன சபையில் வேகமாக வந்து விழுகிறான். பாதியோடு நடனம் நின்று விடுகிறது. பானர்மென் ஓடிவந்து அவனைத் தூக்கி வைத்துக்கொண்டு, தனது ரிவால்வரையும் எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு விபரம் கேட்கிறான்.*

சிப்பாய்: *(தயக்கத்துடன்) ஆலன் துரையைக் கட்டபொம்மன் கொன்றுவிட்டான். நமது படை தோல்வியடைந்துவிட்டது.*

பானர்: *என்ன? ஆலன் கொல்லப்பட்டாரா? கட்டபொம்மனுக்கு வெற்றி! நமக்குத் தோல்வி! சே, வெட்கம்! சாதாரண ஒரு பாளையப்பட்டுக்காரனை ஜெயிக்க நம்மால் முடியவில்லை.*

கம்பும் கல்லும்கொண்டு போர் செய்யும் கம்பளத்தானை ஜெயிக்க, குண்டும் துப்பாக்கியும் கொண்ட நமக்கு முடியவில்லை. தோற்றுவிட்டோம் என்று சொல்ல உனக்கு வெட்கமில்லை. போ! ஆலன் போனவழியே நீயும் போ! (கைத் துப்பாக்கியால் சிப்பாயைச் சுட்டு விடுகிறான்) எதிரியின் கோட்டையை எட்டிப் பிடிக்காத நீங்கள் காலனின் வீட்டையாவது எட்டிப் பிடியுங்கள். இவர்களுக்கு பீரங்கி, துப்பாக்கி, குதிரைப்படை வேறு, பாதுகாப்புக்கு!

பக்கட்: (மெதுவாக பானர்மெனின் இடதுபக்கம் வந்து நின்று கொண்டு) ஒரு விஷயம்! ... ...

பானர்: போதும். (இடது கையால் கன்னத்தில் ஓங்கிஅடித்து விட்டு) போகலாம்! எல்லோரும் வெளியே போகலாம்.

(எல்லோரும் திருதிருவென்று முழிக்கிறார்கள்)

பானர்: (அதிக கோபமாக) சீக்கிரம்.

(எல்லோரும் போய் விடுகிறார்கள்)

பானர்: அட, பரதேசிப் பாஞ்சாலங்குறிச்சி! இரு, உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்!

காட்சி 16

இடம்: கட்டபொம்மு அரண்மனையில் மந்திராலோசனை சபை.

உறுப்பினர்: கட்டபொம்மு, தானாபதி, ஊமைத்துரை.

நிலைமை: கட்டபொம்மு மந்திராலோசனை சபையில் அங்குமிங்கும் யோசனை செய்து உலாவிக் கொண்டிருக்கும் போது தானுபதிப் பிள்ளை ஓடிவந்து வணங்குதல்.)

தானு: மகாராஜா ! வணக்கம் !

கட்ட: வாரும் தானுபதியாரே ! உமக்கு ஒன்றும் ஆபத்து இல்லையே ?

தானு: உங்கள் கிருபையால் எனக்கொன்றும் ஆபத்தில்லை மகாராஜா ! ஆனல் ... ...

கட்ட: ஆனல் என்ன ?

தானு: என்னைப் பிடிப்பதற்காக ஆத்தூருக்கு நேற்று இருநூறு படை வீரர்கள் வந்து என் வீட்டை வட்டமிட்டுக் கொண்டார்கள். நல்லவேளையாக நான் தந்திரமாகத் தப்பிவந்து விட்டேன். ஆனல் வீட்டிலிருந்த என் பெண்டு பிள்ளைகளை எல்லாம் சிறை செய்து கொண்டு போய்விட்டார்கள் மகாராஜா !

கட்ட: ஆ ! அப்படியா செய்தார்கள் ? அயோக்கியர்கள் ! நீர் தான் என்ன பிள்ளை, பேடியா ? எதிரிகள் வந்து உம் மனைவியைச் சிறைபிடித்துச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருக்க உம் மனம் எப்படித் துணிந்தது ?

தானு: அந்நிலையில் நான் அவர்கள் முன்னிலையில் பட்டிருந்தால் என்னைச் சித்ரவதை செய்திருப்பார்கள் பிரபு!

கட்ட: ஆம் ; சித்ரவதை மட்டுமா செய்வார்கள். பாபிகள், வெள்ளையத்தேவரையல்லவா போர்க்களத்தில் கொன்று விட்டார்கள்.

தாளு: வெள்ளையத் தேவர் இறந்து விட்டாரா? அவரே இக் கதிக்குள்ளாகி விட்டார் என்றால் நான் எம்மாத்திரம் அரசே! எனக்கு அவமானமாக இருக்கிறதே! இதை நான் எப்படித் தீர்ப்பேன்? மனைவியைப் பறிகொடுத்து மானமற்று நிற்கும் மரக்கட்டை என்று தூற்றுவார்களே பிரபு! அவர்களை அந்தச் சண்டாளர்கள் என்ன பாடு படுத்துகிறார்களோ தெரியவில்லையே! என் மானம், மரியாதை போயிற்றே!

கட்ட: பிள்ளையே! ஏன் இப்படி நிலை தடுமாறுகிறீர்? நீர் பயப்படாதேயும். நான் சென்று உம் மனைவி மக்களை மீட்டு வருகிறேன்.

[தம்பி ஊமைத்துரை வேகமாக ஓடி வந்து 'அண்ணா' என்று கட்டியணைத்துக் கொள்கிறான்.]

கட்ட: யார்? தம்பி ஊமைத்துரையா? (இரண்டுபேரும் கட்டியணைக்கிறார்கள்)

ஊமை: அண்ணா!

கட்ட: தம்பி! (இருவரும் விடுவித்துக்கொள்ளல்) தம்பி, முருகனுக்கு எல்லாம் சரிவரச் செய்துவிட்டாயல்லவா?

ஊமை: ஆம், அண்ணா! அண்ணா, என்னை மன்னித்துவிடுங்கள். என்னைத் தம்பி என்றழைக்காதீர்கள்—தன்னலக்காரன் என்றழையுங்கள்—சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்ளுகிறேன். நான் உங்களுக்கு தம்பியாகப் பிறக்கத்தான் பாக்கியம் செய்தேனே தவிர, உங்கள் சுகத்தில் பங்கெடுக்கத்தான் ஓடி வந்தேனே தவிர, உங்கள் ஆபத்துக்கு உதவி செய்ய முடியாமல் போன உலோபி, உளுத்தன், உடன் பிறந்தவனாயிருந்தும் உற்ற சண்டையில் உடன் இருந்து உதவிபுரிய முடியாமல் போன ஊனன்; இந்தப் பாபியினால் உங்களுக்கு ஏதாவது

பயனுண்டா? நான் உடன் பிறந்தும் உதவாதவன்; ஊக்க மிருந்தும் ஆக்கமிழந்தவன்; கை கால் இருந்தும் முடவன்; கண்ணிருந்தும் குருடன்; உயிர் இருந்தும் இறந்தவன்; இனி என்னை ஒவ்வொருவரும் உயிரற்ற ஊமைத்துரை என்றழைக் கட்டும்.

கட்ட: தம்பி! ஏன் வீணாக மனதைப் போட்டு குழப்புகிறாய். யுத்தத்திற்கு பயந்து ஓடி ஒளிந்து கொள்ளவில்லையே நீ! நான்தானே உன்னை திருச்செந்தூருக்கு அனுப்பி வைத் தேன். இப்படியெல்லாம் வருமென்று யார் நினைத்தது? நடந்தது நடந்து விட்டது. நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே! எல்லாம் செந்திலாதிபன் திருவருள்போல் நடக்கும். வா! நீ இன்னும் சாப்பிடவில்லையே! தானுபதியாரே, வாரும் போகலாம்.

காட்சி 17

இடம்: படுக்கை அறை.

உறுப்பினர்: சக்கம்மாள், மூன்று உருவங்கள்.

நிலைமை: சக்கம்மாள் கட்டிலில் படுத்துக் கொண்டிருக்கிறாள். தனது கணவனை இரண்டு வீரர்கள் பிடித்துக்கொண்டு போய் தூக்கிலிட்டு கொல்வது போல் கனவு காண்கிறாள்.

சக்கம்மாள்: ஆ! வேண்டாம்; கொல்ல வேண்டாம்; என் சுவாமியைக் கொல்ல வேண்டாம். சுவாமி! சுவாமி!!

[திடீரென எழுந்து பார்க்கிருள்]

சக்க: ஆ! என் சுவாமிக்கா ஆபத்து! தேவி! என்னைக் காப்பாற்று தாயே! தாயே தயாநிதி! நான் கண்ட கனவு பலித்துவிட்டால்...என் கதி...ஆ, அம்மா! (எக்கம்) எனக்கு அடைக்கலம் கொடு தாயே! உன் பாதார விந்தமே கதியென் றெண்ணியிருக்கும் என்னைக் காப்பதுன் பாரமல்லவா! என் நாதன் அப்படியென்ன தவறு செய்துவிட்டார்—இப்படி அகால மரண மடைவதற்கு தாயே? நினைத்தால் என் உள்ளம் நடுங்குகிறதே. பாராண்ட வேந்தர் இப்படி பதை பதைத்துச் சாவதா? தங்கக் கயிற்றில் ஊஞ்சலாடிய அவர் உடல் இப்போது தூக்குக் கயிற்றில் ஊஞ்சலாடவா? வான் மதி போன்ற அவாது முகம் இப்போது வாடி வதங்க வேண்டுமா? தேன் மொழி போன்ற அவரது கீதத்தை இனி யாரிடம் கேட்பேன் தாயே? ஆண்களிலே அசகாயசூரர் என்று பேர் வாங்கிய அவர் இப்போது பகைவர் கைகளினுல் படுகுழியில் வீழ்வதா? தாய்நாட்டுக்குச் சேவை செய்த என் சுவாமியின் உடல் இப்போது உருவழிந்தா போகவேண்டும்? முடிதரித்து அரசாண்ட எம் மன்னர் இப்போது முடி துறந்தா மாளவேண்டும்? நாகரெத்தினத்தால் ஜொலித்த என் நாதன் தலை, இப்போது நாதியற்று அழியவேண்டும். தாயே! என் நாதன் போன பின்பு நான் உயிரோடிருக்க முடியுமா? தருமம்தான் தழைக்குமா? சதி செய்யும் சதிகார சண்டாளர் களாகிய தாய் நாட்டு துரோகிகளுக்கு, அயல் நாட்டு அடிமை களுக்கல்லவா இக்கதி வரவேண்டும். இதுவும் உன் சோதனையா?

காட்சி 18

இடம்: தாணுபதி பிள்ளை வீடு.

உறுப்பினா: தாணுபதி, சேவகன்.

நிலைமை: தாணுபதி பிள்ளை அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருக்கிறார். அவருக்குப்பின் சேவகனும் போய்க்கொண்டிருத்தல்.

தாணு: அட கடவுளே! கடைசியா, பெண்டாட்டியைப் பறிகொடுத்த பேடியாவா நான் திரியவேண்டும் ஹூம். (யோசனை) நேரில் சென்று வந்தால் என்ன? (யோசித்தல்) ஆம். அது தான் சரி. உடனே மகாராஜாவிடம் சென்று விஷயத்தை விளக்கி, விபரத்தைக் காட்டி ... ... !

டர்னிங்

இடம்: அரண்மனை.

நிலைமை: அரசரும், தாணுபதியும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

கட்ட: காட்டவும் வேண்டாம், போகவும் வேண்டாம். உமக்கு இப்போது மூளை சரியாய் இல்லை. நீர் போய்க் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொள்ளும்.

தாணு: மகாராஜா! நான் சொல்வதில் அர்த்தம் இருக்கிறது.

கட்ட: என்ன அர்த்தமிருக்கிறது? அங்கு சென்றால், நமக்கு அனர்த்தம் தான் விளையும்.

தாணு: நான் சொல்ல வந்தது ... ...

கட்ட: என்ன பிள்ளேயே! பெரிய தொல்லேயாய் இருக்கிறது, என்ன சொல்லப் போகிறீர்?

தாஞ: மகாராஜா! கொஞ்சம் நிதானமாகக் கேட்கவேண்டும்.

கட்ட: சொல்லும்.

தாஞ: அரசே! நேற்று தோல்வியடைந்த கும்பினி படைகள், திரும்பவும் பெரும் படைகளேத் திரட்டிக்கொண்டு, கூடிய சீக்கிரத்தில் வந்து நம்மை எதிர்க்கப் போவதாக வதந்தி உலவுகிறது. நம்மிடமோ போதிய பலம் இல்லே. இருந்த படைகளும் பாதிக்குமேல் காலியாகி விட்டது. ஆகையினல் அவர்களே இனி எதிர்க்க முடியாது.

கட்ட: அதற்காக?

தாஞ: அரசே! அதற்காகத்தான் நாம் சற்றும் தாமதியாமல் திருச்சிக்கு போய் மேல் அதிகாரிகளேக் கண்டு பேசினல் நமக்கு ஒரு நல்ல முடிவு கிடைக்கும். தாங்கள் தட்டாது வரவேண்டும்.

கட்ட: மந்திரியாரே! உமக்கு மனேவியை இழந்த துயரத்தால், மதிமயங்கி விட்டது. நீர் கூறும் யோசனே சரியானது தாஞ என்று யோசித்து முடிவு சொல்லும்.

தாஞ: நான் தீர யோசித்துத்தான் முடிவு செய்திருக்கிறேன் மகாராஜா! அதிலும் முன்னர் ஒரு தடவை நாம் அங்கு சென்றபோது நமக்களித்த அன்பை மறக்க முடியுமா? நாம் அங்கு போனல் நமக்கு நிச்சயமாக நன்மை கிட்டும். தாங்கள் தடை யேதுமின்றி வரவேண்டும்.

கட்ட: பிள்ளேயே! முன்னர் போனது வேறு முறை; இப் போது இரு தரத்தாருக்கும் பலத்த போர்! இருவருக்கும் எத்தனேயோ உயிர் சேதம், உடல் சேதம், பொருள் சேதம்.

இப்படி இருக்கும் இந்த நேரத்தில் நாம் அங்கு சென்றால் நம்மை அவன் கண்டிப்பாக சிறை செய்துவிடுவான். அத்தோடு கோட்டையையும் எளிதில் பிடித்துக்கொள்வான் பிள்ளையே !

தானு: அரசே! எதிரிகள் நம் கோட்டையை எட்டிப் பிடிப்பதற்குள் நாம் திருச்சிக்குப் போய், அதிகாரிகளைக் கண்டுபேசிவிடலாம். இதில் நமக்கு இழுக்கு ஒன்றும் வந்துவிடாது. என் பேச்சைத் தட்டாமல் வாருங்கள் பிரபு!

கட்ட: நன்றாகயிருக்கிறது பிள்ளையே! முன்னர் நெல்லை கொள்ளை செய்து கொடும் பகையை மூட்டிவிட்டு, இப்போது அவர்களிடம் போய் உறவுமுறை கொள்ளவேண்டும் என்று சொல்வது என்ன மதி? இப்போது நாம் கோட்டையை விட்டு வெளியே போனால் உலகம் நம்மை என்ன சொல்லும் தெரியுமா? வெள்ளையரின் குண்டுகளுக்கு ஆற்றமாட்டாமல், வீறு பேசிய வீரபாண்டியன் கோட்டையை விட்டு வெளியே பயந்து போய்விட்டான் என்றுதானே உலகம் நம்மைத் தூற்றும்!

தானு: அரசே! நாம் யுத்தகளத்திலிருந்து பயந்து ஓடினால் தானே நம்மை உலகம் அப்படித்தூற்றும்? அதிலும் வீரப்போர் செய்து வெற்றியடைந்திருக்கும் நாமே நேரில் சென்று சமாதானத்தை விரும்புவதாக இருந்தால், அது நமக்கு பெருமைதானே தவிர, சிறுமை இல்லை.

கட்ட: பிள்ளையே! வானம் வருவதாயினும் சரி, மானமிழந்து நான் வாழ விரும்பவில்லை. ஆனவரையிலும் அமர்க்களத்திலே போரிட்டு மாண்டாலும் மாள்வேனேயன்றி, ஈனமாக எவனிடத்திலேனும் போய் இச்சகம் கேட்க நான் தயாரில்லை. இன்று வந்ததுபோல், இனி எத்தனை மடங்கு அதிகமான

படை வந்தபோதிலும் அவைகளைக்கொன்று குவிக்கும் திறமை என்னிடமுண்டு. நீர் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம்.

தானு: அரசே! அடியேனின் கடைசியான ஒரு வேண்டுகோள்...

கட்ட: என்ன ?

தானு: மகாராஜா, அபாயம் நம்மை அணுகிக்கொண்டிருக்கிறது. தக்க உபாயத்தோடு நாமிப்போது தப்பித்துக்கொண்டால் தான் நல்லது. முதலில் நான் சொல்வது உங்களுக்கு சரியென்று படவில்லையானாலும், முடிவில் நன்மையாகவே முடியும். ஆகையால் தாங்கள் கிருபை செய்து, என்மீது நம்பிக்கை வைத்து என்னோடு வாருங்கள். (மன்னர் காலில் விழுந்து பிடித்துக்கொண்டு) மகாராஜா ! என் வார்த்தையைத் தட்டாதீர்கள்.

கட்ட: (பிள்ளையை கைதூக்கி நிறுத்தி) எழுந்திரும் பிள்ளையே! (அங்குமிங்கும் உலாவிக்கொண்டு) (தனக்குள்) நமக்கும் சரியான படை பலம் இப்போது இல்லை. ஒரு வேளை மேலதிகாரிகள் நம்மீது கொண்டுள்ள அன்பு காரணமாக நமக்கு நன்மை செய்தாலும் செய்யலாம். பிள்ளையையும் நன்றாகத் தெரிந்தவர்களை நானும் போய்ப் பார்த்தால்தான் என்ன குற்றம் ? ஆம், அதுதான் சரி. (தானுபதியை நோக்கி) சரி பிள்ளையே ! உம் இஷ்டப்படியே போவோம். பிரயாணத்திற்கு வேண்டிய வசதிகளைச் செய்யும்.

தானு: உத்தரவு பிரபு ! (தானுபதி போகிறார்)

[அரசர் உலாவிக்கொண்டிருக்கையில் ஊமைத்துரை வருகிறார்]

ஊமை: அண்ணா, பலமான யோசனையா ?

கட்ட: தம்பி வா—உன்னைத்தான் எதிர்பார்த்திருந்தேன்.

ஊமை: அப்படி என்ன விஷயம், அண்ணு?

கட்ட: தம்பி! நான் திருச்சிராப்பள்ளியில் உள்ள மேலதிகாரிகளைக்கண்டு பேசி, பானர்மென் செய்துள்ள தீங்குகளை எடுத் சொல்லி பிள்ளையின் மனைவி, மக்களையும் அழைத்து வருகிறேன். நீ கோட்டையை பத்திரமாகக் காத்துக்கொள்.

ஊமை: அண்ணு, இது என்ன மதியீனம்! உங்களுக்கும் மதி மயங்கி விட்டதா என்ன? இடர்ப்பட்ட வேதனை தாங்காது தாஞபதி சொல்கிருர் என்ருல், அதைத் தாங்களுமா கேட்க வேண்டும்? தாங்கள் இப்போது அங்கு போனுல் இங்கு இருப்பவர்களின் கதி என்னவாகும் என்று யோசித்தீர்களா?

கட்ட: தம்பி! நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். எல்லாவற்றையும் நான் சிந்தனை செய்து தான் சொல்கிறேன். நீ மறுக்காமல் விடைகொடு.

ஊமை: அண்ணு, ஏதோ அது என் மனதிற்கு சரியென்று படவில்லை. பிறகு உங்களிஷ்டம். ஆனுல் நீங்கள் போவதாக இருந்தால் நானும் கண்டிப்பாக உங்களுடன் வருவேன்.

கட்ட: பின்பு கோட்டைக்காவலுக்கு பொறுப்பு...?

ஊமை: சிவத்தையாவும், அண்ணன் வீரகஞ்சயரும் இருக்கிருர்கள்.

கட்ட: ஆம்; அப்படியே செய்வோம். நான் போய் சக்கம்மாளிடம் சொல்லி வருகிறேன். நீ தயாராய் இரு.

காட்சி 19

இடம்: பூஜை அறை.

உறுப்பினர்: கட்டபொம்மு, சக்கம்மாள்.

நிலைமை : (சக்கம்மாள் முருகப்பெருமான் முன் முழங்காலிட்டு பாடிக்கொண்டு முடிக்கிருள்)

சக்: ஆறுமுகா! உன் அருளால் எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க அருள் புரியவேண்டும். என் சுவாமிக்கு ஒரு ஆபத்தும் வராமல் பாதுகாக்கவேண்டும், தேவா !

கட்ட: (பூஜை அறையை நோக்கிவந்து) தேவி!

சக்: சுவாமி, வாருங்கள். இப்போதுதான் வருகிறீர்களா ?

கட்ட: ஆம், பூஜை எல்லாம் முடிந்ததா ?

சக்: ஆம் சுவாமி, நீங்களும் பெருமானைப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள்.

(சூடத்தட்டு காட்டுகிருள். அப்போது கால் இடறி கையில் வைத்திருக்கும் சூடத்தட்டானது தவறி விழுகிறது.)

சக்: ஆ ! ... ... அபசகுனம் சுவாமி ! நமக்கு ஏதோ ஆபத்து நேர இருக்கிறது.

கட்ட: தவறுதலாகக கைதவறி கீழே விழுந்துவிட்டால் அது அபசகுனமாகுமா கண்ணே !

சக்: சுவாமி! எனக்கென்னவோ பயமாயிருக்கிறது.

கட்ட: கண்மணி! நமக்கு ஒரு குறைவும் வாராது. நீ ஒன்றுக்கும் பயப்படாதே.

சக்: சுவாமி! நேற்றுப் போரில் தோற்றுச் சென்ற வீரர்கள் திரும்பவும் வந்து விடுவார்களோ என்று தான் பயமாயிருக்கிறது.

கட்ட: கண்ணே! அவன் இனி இங்கு எங்கே வரப்போகிறான். பட்டது போதாதா அவனுக்கு! அதைப் பற்றிதான் நானும் உன்னிடம் சொல்ல வந்தேன்.

சக்: என்ன அது?

கட்ட: தேவி! வெள்ளை அதிகாரி பானர்மேன் என்பவன் அநியாயமாக நம்மீது போர் தொடுத்து அநேக கஷ்டங்களை விளைவித்திருக்கிற படியால் அதைப்பற்றி திருச்சியிலுள்ள மேல் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி சமரசம் செய்துகொள்வதற்காக நான் திருச்சிவரை சென்று வரவேண்டும். ஒரு வாரத்தில் திரும்பிவிடுவேன். உனது அன்புகலந்த இன்ப மொழியால் எனக்கு விடைகொடு.

சக்: சுவாமி! தாங்கள் இந்த நிலையிலா கோட்டையை விட்டு வெளியேறுவது? வேண்டாம், எனக்கு பயமாயிருக்கிறது, சுவாமி.

கட்ட: துணைக்கு நிறையப் படைகள் இருக்கிறது தேவி. நீ ஒன்றுக்கும் கலங்காதே. எனக்கு விரைவில் விடைகொடு; நான் சென்று வருகிறேன்.

சக்: சுவாமி என் வார்த்தையைக் கேளுங்கள். வாழ்ந்தால் எல்லோருமாக வாழ்வோம். மடிந்தால் எல்லோருமாக மடிவோம்.

கட்ட: கண்மணி! நீ சொல்வது உண்மைதான். ஆனல் நான் அங்கு செல்ல நினைப்பது எனது ஒருவனின் நலத்திற்காக மட்டுமல்ல, நம்நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழவேண்டும்—அந்நியன் ஆட்சிக்கு அடிபணியக் கூடாது—சுதந்திர வாழ்வு வாழவெண்டுமென்பதை நிலை நாட்டத்தான் நானே நேரில் சென்று வாழ்வு பெறவிரும்புகிறேன். அவன் சம்மதிக்கவில்லையானல் நாளையே போர்.

சக்: பிடிவாதம் செய்யாதீர்கள். நான் நேற்று ஒரு கெட்ட கனவு கண்டேன். அதைக்கண்ட நேரத்திலிருந்து எனக்கு இன்னமும் உடல் சிலிர்க்கிறது. (உடல் சிலிர்த்தல்) சுவாமி! பெரிய வீரன் ஒருவனை பலர்சேர்ந்து பிடித்துக் கொள்வது போலவும் முத்துமாலை அறுந்து விழவும், முன் கை வளையல் நொறுங்கி விழவும், முத்துச் சரப்பளி குலையவும் கண்டேன். அத்துடன் நமது தேவி கோவிலிலிருந்து ஒருவாலைப்பெண் பழைய சேலை கட்டிக்கொண்டு பரிதாபமான கோலத்தோடு வெளியேறி நம் திருநகரைப் பார்த்து பார்த்து தேம்பித் தேம்பி அழுது இறுதியில் ஒருமுகமாய் வடதிசையை நோக்கி போகவும் கண்டேன். இன்று தாங்கள் கண் எதிரிலேயே தீபத்தட்டு தவறிக் கீழே விழவும் கண்டீர்கள். முருகப்பெருமான் நமக்கு ஆபத்து என்று சொல்லவே இந்த அறிகுறிகளைக் காட்டியிருக்கிறார். நாம் புத்தியோடு நடந்து கொள்வதுதான் நல்லது சுவாமி. என் வார்த்தையைக் கேட்காவிட்டாலும், இது நம் குலதேவதை சக்கம்மாளின் ஆணை என்றாவது கருதுங்கள்.

கட்ட: (கோபமாக) சக்கம்மா! ஏன் வீணாக மனதை அலட்டிக் கொள்கிறாய்? நான் போவதாக முடிவு செய்து விட்டேன். இனி அதை மாற்ற முடியாது. (அன்பாக அவள் கன்னத்தை பிடித்துக்கொண்டு) கண்ணே, கனவைக் கண்டா கலங்குவது? கண்ணீரைத் துடைத்துக்கொள். (கண்ணீரைத் துடைத்தல்) என் கண் அல்லவா, விடை கொடு, நான்போய்வருகிறேன்.

சக்: சுவாமி! தாங்கள் எதிரிகளிடம் சிக்கிக் கொள்வீர்களோ என்று தான் ... ...

கட்ட: கண்ணே! நானா, எதிரியின் கைகளிலே சிக்கிக்கொள்பவன். (சிரிப்பு) சக்கம்மா, நீ கலங்காதே. அரண்டு உருண்டோடியிருக்கும் எதிரிகள் திரண்டு ஒரு முகமாக வந்தாலும்

அவர்களை உன் திருமுகத்தின் நினைவால் எழுந்த வீரத்தால் சின்னாபின்னம் செய்துவிடுவேன். உன் பூவிதழிலே காவியப் புதுமைகளைக் கண்ட நான் எதிரிகளை புறங்காட்டி ஓடச் செய்வேன். பளிங்கு போன்ற உன் கண்ணாடிக் கன்னத்தை கிள்ளி விளையாடி நான் அதிலே என்னைக்கொல்ல வரும் பகைவனைக் காண்பேன். நாதா என்றழைக்கும் உனது ஒவ்வொரு இன்பக்குரலும் என்னை வாவா என்றழைக்கும். வர வழி மறுக்கும் வஞ்சகரை எனை நீ நெஞ்சத்துள் வைத்திருக்கும் பாசத்தைக்கொண்டு கொன்று குவித்து விடுவேன். எனக்கு எற்படும் ஒவ்வொரு ஆபத்திலும் நீ இடும் ஒவ்வொரு அபயக்குரலும் என்னை ஆயிரம் கட்டபொம்மன்களாக மாற்றும். உன் கண்களிலிருந்து பெருகிவரும் கண்ணீரெல்லாம் எதிரிகளின் செந்நீரை உறிஞ்சும் விஷ நீராக மாறும். நான் உன் கண்ணீரை நோக்கினால் என் வாள் எதிரியின் வாழ் நாளின் எல்லையை நோக்கும். என்னைக் காண நினைக்கும் உனது ஒவ்வொரு இன்பத்துடிப்பும் எதிரிகளை வானலோகத்திற்கு இழுத்துச் செல்லும் எனது இதயத் துடிப்பாகமாறும். எங்கே உன் சிரித்த முகத்துடன் எனக்கு சீக்கிரம் விடை கொடு!

சக்: சுவாமி! நான் சொல்வது உங்களுக்குத் தெரியவில்லையா? நமக்கு இருந்த நல்லகாலம் நம்மைவிட்டுப் போய்விட்டது. உடன் இருந்த தேவியும் ஊரைவிட்டு போய்விட்டாள். இந்நிலையில் நீங்களும் என்னைவிட்டு போய்விட்டால் நான் எப்படி உயிர் வாழமுடியும்? உங்கள் பிரிவை என்னால் எப்படி சகிக்க முடியும்? பட்டு நொந்து வெந்து கொண்டிருக்கும் என் உள்ளம் எரிந்து சாம்பலாக வேண்டியதுதானா? பிள்ளை மொழி பேசிக் கிள்ளி விளையாடிய நீங்கள் இப்போது அப்பிள்ளை மொழி

கேட்டும் அதை புறக்கணிக்கவா வேண்டும்? (ஏக்கத்துடன்) சுவாமி! என்னைத் தனியே தவிக்க விட்டுவிட்டு நீங்கள் எங்கே போகிறீர்கள். சுவாமி வாருங்கள் வாருங்கள் என்று கூவி மஞ்சத்தில் உட்கார வைத்த நான் போங்கள் என்று சொல்லி எப்படி புறக்கணிப்பேன். (மன்னர் காலில் விழுந்து அழுதல்)

கட்ட: (சக்கம்மாளைத் தூக்கிவிட்டு) கண்ணே, நான் உனக்கு இன்னும் சொல்ல என்ன இருக்கிறது? நீ என்ன சின்னக் குழந்தையா? கண்ணீரைத் துடைத்து கொள். எங்கே சிரி பார்க்கலாம். நான் வரட்டுமா? (அரசர் போகிறார்)

சக்: சுவாமி (என்று கீழே விழுகிறாள். ஓடிப்போய் முருகன் சிலை முன் விழுந்து) முருகா! முருகா!! முருகா!!! என்நாதனைக் காப்பாற்று!

காட்சி 20

இடம்: எட்டயாபுரம் எட்டப்ப நாயக்கர் அரண்மனை.

உறுப்பினர்: எட்டப்பர், சேவகன்.

நிலைமை: எட்டப்பர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு கடிதம் எழுதுகிறார்.

எட்ட: யாரங்கே?

சேவகன்: எஜமான்! (வந்து வணங்குதல்)

எட்: இந்தக் கடிதத்தைக் கொண்டுபோய், பாளையங்கோட்டையில் இருக்கின்ற கும்பினிபடை தளபதி, ஜெனரல் "பானர் மெ"னிடம் "எட்டயாபுரத்து ஜமீன்தார் எட்டப்ப நாயக்கர்" கொடுத்ததாகக் கொடுத்துவிட்டு வா. (கடிதம் கொடுத்தல்)

சேவ: அப்படியே அரசே! (வணங்கிப் போகிறுன்)

எட்: (தனிமையில் உலாவிக்கொண்டு) நமது திறமையே திறமை! (சிரிப்பு) உரிமைப்போர் நடத்துகிறுனும் — திறமைகெட்ட மடையன். இந்த எட்டப்பருடைய கடிதம் துரைக்கு கிடைக்கும்; அங்கு கட்டபொம்மனுடைய கோட்டை கம்பெனிக்கு கிடைக்கும். (சிரிப்பு) பீரங்கி குண்டுகளும் தாக்கிப் பிடிக்க முடியாத அந்த கட்டபொம்மனுடைய கோட்டை, நாளை எந்தத் தளவாடமும் இல்லாமல் பிடிபடப் போவதைக் குறித்து கம்பெனியார் நம்மீது எவ்வளவு பெருமைப்படுவார்கள். அவர்களால் நம்மை மறக்கத்தான் முடியுமா! "கட்டபொம்மன்"! தொலைந்தான் கட்ட பொம்மன்!! இனிமேல் நான்தான் பாளையங்களின் பட்டத் தரசன். இனி நான் வைத்ததுதான் சட்டம். தேச பக்தன், பெரிய வீரன், அசகாய சூரன் என்றெல்லாம் பேர்பெற்ற அந்த தீரனையும் பிடித்துக்கொடுத்து விட்டோமானுல், நான் தான் வெள்ளையன்; வெள்ளையன்தான் நான். நான் அவர் களுக்கு செலுத்திவரும் கிஸ்தியைக்கூட வேண்டாம் என்று சொல்லி விடுவார்கள். இனி எவர் பயமின்றியும் அரியாசனத் தில் சுகமாக வீற்றிருக்கலாம். முதல் வேலை கோட்டையைப் பிடித்துக்கொடுக்க வேண்டும்; இரண்டாவது கட்டபொம்மனை காட்டி கொடுக்கவேண்டும்; மூன்றுவது ஆங்கிலேயரின் அபிமானம் பெற்ற சிற்றரசனுக, அரசு செலுத்த வேண்டியது. வெள்ளையருக்கு உகந்த நண்பன் ஒருவன் இருக்கின்றுன் என்றுல், அது இந்த எட்டப்பன்தான் என்பதை நிலைநிறுத்த வேண்டும். மறக்க முடியுமா இந்த எட்டப்பரை!

காட்சி 21

இடம்: *பானர்மென் அறை.*

உறுப்பினர்: *பானர்மென், பக்கட், இராமலிங்க முதலியார்.*

நிலைமை: *பானர்மென் கையில் உள்ள கடிதத்தை பார்க்கிருர்.*

பானர்: *மறக்க முடியுமா எப்டப்பரை! ஒருக்காலும் முடியாது!!*

பக்கட்: *(வந்துகொண்டு) என்ன செய்தியோ அப்படி?*

பானர்: *இந்தக் கடிதம் பதில் சொல்லும்!*

[கடிதத்தைக் கொடுக்கிருர். வாங்கிப் பார்த்து, பக்கத்தில் வந்துகொண்டிருக்கும் இராமலிங்க முதலியாரிடம் படிக்கச் சொல்லுதல்]

எட்டயாபுரம்
8—9—1799

மேன்மை தங்கிய கும்பினி அதிகாரி, ஜெனரல் பானர்மென் அவர்களுக்கு, தங்கள் அடிமை எட்டயாபுரத்தான் எழுதிக்கொண்ட கடிதம். நமஸ்காரம்! 7—9—1799ல் இரவு பத்தரை மணிக்கு கட்டபொம்மனும், அவனது தம்பி, தாஞபதி உள்பட கோட்டையை விட்டு வெளியேறிவிட்டார்கள் என்று என் ஒற்றர்கள் மூலம் அறிந்தேன். எனவே சமுகம் இது சமயம் உடனேபுறப்பட்டு பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்தால், எளிதில் கோட்டையைப் பிடித்துக்கொள்ளலாம். எனது படைகளை நான் முன்னமே அனுப்பியிருக்

கிறேன். அத்துடன், கட்டபொம்மன் இப்பொழுது கோலார்பட்டியில் இருப்பதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது. எனவே தாங்கள் படையை என்னுடன் அனுப்பி வைத்தால், கட்டபொம்மனையும் பிடித்துத்தர சித்தமாயிருக்கிறேன்.

இப்படிக்கு
தங்கள் ஊழியன்,
எட்டப்ப நாயக்கர்,
எட்டயாபுரம்.

பானர்: *பக்கட்! சிறிதும் தாமதம் செய்யாமல், நம் படையை இரண்டாகப் பிரித்து, ஒன்றை கோட்டையைப் பிடிப்பதற்கும், மற்றொன்றை கோலார்பட்டியில் இருக்கும் அவனைப் பிடிப்பதற்கும் அனுப்பி அந்த கட்டுக்கடங்காத கட்டபொம்மனைக் கைது செய்யும்.*

பக்கட்: *அப்படியே!*

காட்சி 22

இடம்: கோலார் பட்டி ஜமீன் அரண்மனை.

உறுப்பினர்: இராஜகோபால நாயக்கர், கட்டபொம்மன், ஊமைத்துரை, தானுபதி பிள்ளை, சேவகன்.

நிலைமை: எல்லோரும் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இராஜ: *தாங்கள் மேல் அதிகாரிகளைக் கண்டு பேச வேண்டியது அவசியந்தானா?*

கட்ட: அவசியம் என்று தான் படுகிறது.

இராஜ: அரியாசனத்தில் வீற்றிருக்க வேண்டிய தாங்கள் இப்படி அலையவேண்டியது தங்கள் பிராப்தம் தான். ஹூம்......! என்ன செய்வது?

ஊமை: எல்லாம் அந்த அயோக்கியக் எட்டப்பனால் வந்த வினை தான். காட்டிக் கொடுத்ததோடுமல்லாமல், போருக்கு படைகளையும் அல்லவா திரட்டிக்கொண்டு வந்திருந்தான்! என் கையில் மட்டும் அவன் கிடைத்தால், அவனை கசக்கிப் பிழிந்து நெற்றியில் பொட்டிட்டிருப்பேன்.

இராஜ: அரசே! தாங்கள் வந்த விஷயம் பானர்மென் தெரிந்து கொண்டால்......

கட்ட: தெரிந்து கொண்டால்?

சேவகன்: (ஓடிவந்து) மகாராஜா! தாங்கள் இங்கிருப்பது எப்படியோ கும்பினியாருக்கு தெரிந்துவிட்டது. பெரிய படைகளோடு தங்களைப் பிடிப்பதற்கு உள்ளே புகுந்து விட்டார்கள்.

கட்ட: ஆம்! நான் எதிர்பார்த்ததுதான். பிள்ளையே, நானும் தம்பியும், எதிரிகளை வெட்டி வீழ்த்திக்கொண்டு முன்னால் போகிறோம். நீரும் எங்களைப் பின் தொடர்ந்து வந்துவிடும். தம்பி! ஹூம்......

(வாளை உருவிக் கொள்கிறார்கள். வெள்ளைப் படைகளும் உள்ளே வந்து விடுகிறது. இரு தரப்பிற்கும் சண்டை நடக்கிறது. கட்டபொம்மனும் ஊமைத்துரையும் குதிரையில் ஏறித் தப்பி ஓடுகிறார்கள். தானாபதி பிள்ளை மட்டும் சிறைப்படுகிறார். சேவகர்கள் அவரைப்பிடித்து பானர்மென் முன்பு நிறுத்துகிறார்கள்.)

பானர்: (தானுபதியைப் பார்த்து) ஏ தானுபதி, இப்போது எங்கே உன் மன்னன்? இவ்வளவுதானு உன் மன்னனின் வீரம்? உடன் வந்த உன்னை விட்டுவிட்டு தன் உயிரைப் பாது காத்துக் கொண்டானே, அவனு வீரன்?

தானு: நீ மகா வீரன் தான். தனியே இருக்கும் எம் அரசரைப் பிடிப்பதற்கு இவ்வளவு பெரிய சேனையை திரட்டிக் கொண்டு வந்திருக்கிறுயே, நீ தான் மகாவீரன்! வாய்ப்பேச்சு பேசும் நீ எம் அரசர் முன் பட்டால் தெரியும் அவர் வீரமும் தீரமும் உனக்கு. உன்னைச் சொல்லி என்ன பயன். எல்லாம் இதோ இருக்கிறுனே, குலத்தைக் கெடுக்க வந்த கோடலிக் காம் பன்—எட்டப்பன், இவனுல் வந்த விளைவுதான்.

எட்: பிள்ளைவாள், கவனமாகப்பேசும்—தவறினுல் மரணம் வரக் காத்திருக்கும் என்பது நினைவிலிருக்கட்டும்.

தானு: உனக்கு காலம் நெருங்கிவிட்டது.

எட்: ஆம்! எனக்கு நல்லகாலம் நெருங்கிவிட்டது. ஆனுல் உன்னை காலான் நெருங்கிவிட்டான் போ.

பானர்: இழுத்து வாருங்கள் நியாய சபைக்கு.

(இரண்டு சிப்பாய்கள் இழுத்துப் போகிறுர்கள்)

காட்சி 23

இடம்: நீதி மன்றம்.

உறுப்பினர்: ஜெனரல் பானர்மென், துரைகள், எட்டப்பர்.

நிலைமை: பானர்மென் நீதிபதியாக அமர்ந் திருக்க ஏனையோர் சபையில் கூடி யிருக்கிறுர்கள்.

பானர்: கொண்டு வாருங்கள் தானுபதியை!

(சேவகர்கள் இருவர் பிள்ளையை இழுத்து வருகிறார்கள்.)

பானர்: உமது பெயர்?

தானு: சிவசுப்பிரமணியபிள்ளை.

பானர்: நீதி சபை என்பதை மறந்து, நெஞ்சஞ்சாமல் பொய் வேறு சொல்லுகிறீர். உமது பெயர் என்ன? உண்மையைச் சொல்லும்.

தானு: சிவசுப்பிரமணிய பிள்ளை தான்.

பானர்: தானுபதிபிள்ளை என்பது உமது பெயர் இல்லையா?

தானு: இல்லை. அது என் பெயர் இல்லை.

பானர்: (எட்டப்பரைப் பார்த்து கோபமாக) எட்டப்பரே!

எட்: பிரபு! தானுபதி என்பது அவர் செய்துவரும் மந்திரி வேலைக்குச் சொல்லும் மாற்றுப் பெயர்.

பானர்: பிள்ளை என்பது?

தானு: நான் தான்.

பானர்: (சிரிப்பு) நீர் தானு? உமது ஒருவருக்குத்தான் மூன்று பெயர்களோ! இன்னும் வேறு ஏதாவது பெயர்களும் உமக்கு இருக்கிறதா?

தானு: இல்லை.

பானர்: நீர் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்?

தானு: உன்னை ஒழித்துக்கட்ட செயல்பட்டிருக்கும் வகுப்பைச் சேர்ந்தவன்.

பானர்: முட்டாள்! கேட்ட வார்த்தைக்கு மட்டும் பதில்! நீர் பிறந்த குலம்?

தானு: சைவப்பிள்ளை குலம்.

பானர்: வேலை பார்ப்பது?

தானு: அன்னியனுன, உன் அடக்குமுறை ஆட்சியை ஒழித்துக் கட்ட கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் வீரபாண்டிய கட்ட பொம்மு மகாராஜாவின் பிரதம மந்திரியாக.

பானர்: அனுவசியமாக உளறுதே. கேட்கப்படும் கேள்வி களுக்கு மட்டும் பதில் தந்தால் போதும்.

தானு: உண்மையை விபரமாகச் சொன்னேன்; அவ்வளவுதான்.

பானர்: (கோபமாக) இந்த மூர்க்கன் இனி வாய் திறந்தால் குத் திக் கொன்றுவிடுங்கள்.

தானு: ஆ! இது என்ன அநியாயம்? நியாய சபையிலே என் வழக்கை எடுத்துக் கூறக்கூட எனக்கு உரிமை கிடையாதா? என் பேச்சுரிமையைப் பறிக்க உனக்கு என்ன உரிமை இருக் கிறது?

பானர்: (கோபமாக) சிப்பாய்!

(சிப்பாய் இருவர் தானுபதியை துப்பாக்கி முனையால் குத்துகிருர்கள். தானுபதி வலி பொறுக்கமாட்டாமல் கதறி கீழே விழு கிருர்.)

பான: கழுதையை தூக்கி நிறுத்துங்கள். (அவரைத் தூக்கி நிறுத்து கிருர்கள்.)

பான: பிள்ளையே! இல்லை, மந்திரியாரே, உம்மீது சுமத்தப்பட் டிருக்கும் குற்றங்களைத் தெரிந்து கொள்ளும். கும்பினியின் நெல்லைக் கொள்ளை செய்தீர், கொலை செய்தீர், எல்லை மீறி என் குடிகளுக்கு இடர் விளைவித்தீர், கம்பெனிக்கு வரி கொடாமல் உம் அரசனையும் தடுத்து வைத்தீர். இதை உண்மையென்று ஒப்பக் கொள்கின்றீரா? அல்லது மறுக் கப் போகிறீரா?

தாளு: நான் ஏன் மறுக்க வேண்டும்! மறுப்பதால் கிடைக்கப் போகும் பலன்?

பான: அப்படியானல் நீர் செய்ததை குற்றமென்று ஒப்புக்கொள்கின்றீரா?

தாளு: ஒப்புக் கொள்கின்றேன், குற்றமாக அல்ல; அது என் கடமையாக ... ...

பான: எது உன் கடமை? கொள்ளை அடிப்பதும், கொலை செய்வதும் தான் உன் கடமையோ? நீ... !

தாளு: இல்லை; ஆனல் கொலைக்கும், கொள்ளைக்கும் தகுந்த காரணம் இருக்கிறது.

பான: ருசுப்படுத்த முடியுமா?

தாளு: முடியும்.

பான: சரி போகட்டும். கம்பெனிக்கு வரி தரவிடாமல் தடுத்த குற்றத்திற்கு நீர் என்ன சொல்லப் போகிறீர்?

தாளு: ஆம்; வரி கொடுக்க தடுத்தது உண்மைதான். உனக்கேன் நாங்கள் வரி கொடுக்கவேண்டும்? உனக்குச் சொந்தமான இங்கிலாந்தில் வந்து நாங்கள் இருக்க இடம் கேட்டோமா? அல்லது உன்னைப் போல வியாபாரம் செய்ய வந்த வணிகனைப் போல் இருந்து பின் வையகம் ஆளும் உரிமையைப் பறிக்கப் பார்த்தோமா? நாற்பத்தேழு தலைமுறையாக எண்ணூறு வருஷங்களாக நாங்கள் இந்நாட்டை ஆண்டுவருகிறோம். இன்று அடியெடுத்து வைத்த நீ தான் எங்களுக்கு வரி கொடுக்கவேண்டிய கடமை இருக்கின்றதே தவிர நாங்கள் ஏன் உனக்கு வரி கொடுக்கவேண்டும்?

பான: பிள்ளைவாள்! உம்மை இங்கே பிரசங்கம் செய்வதற்காக அழைத்து வரவில்லை. நீதி விசாரிப்பதற்காக... நினைவிருக்கட்டும்.

தானு: நீதி விசாரணையா? நீ எனக்கு நியாயம் வழங்கப் போகிருயாக்கும்! (சிரிப்பு) மன்னனைப் பிடிக்க வலுவில்லாமல், என் மனைவியைப் பிடித்து ஒரு பெண் என்றும் பாராமல், அவளைச் சிறையிலடைத்து வைத்திருக்கும் நீயா எனக்கு நியாயம் வழங்கப் போகிருய்! நேருக்கு நேர் இருந்து போர் செய்ய முடியாது பேடியைப் போல யாருக்கும் தெரியாது நள்ளிரவிலே வந்து கோட்டையை வளைத்துக் கொண்ட நீயா, எனக்கு நியாயம் கூறப்போகிருய்? நீ இவ்வித சூழ்ச்சிக்காரன் என்று முன்னமே தெரிந்திருந்தால் உன்னை சூரையாடியிருப்யார், எம் மன்னர்.

பானு; சீ, மானங்கெட்ட மடையனே! பெண்டாட்டியைப் பறிகொடுத்துவிட்டு திண்டாடித் துடிக்கும் பேடியே, உனக்கு மானமில்லை?

தானு: ஆட்சி பீடத்தில் ஏறி உட்கார்ந்திருக்கிறேம் 'என்ற இறுமாப்பால் எதுவும் பேசலாமென்று நினைத்துப் பேசாதே! நீ ஆள நினைப்பவன்; நான் மாளத்துணிந்தவன். எனக்கு என்ன தண்டனையைக் கொடுக்க வேண்டுமென்று நீ நினைக்கிருயோ, அதைச் சீக்கிரம் நிறைவேற்றிக் கொள். மீண்டும் மீண்டும் கேள்விகளைக் கேட்டு என் கோபத்தைக் கிளராதே!

பானு: என்னடா செய்துவிடும் உன் கோபம்?

தானு: சமயம் வரும்பொது கூறுகிறேன்.

பானு: (கோபமாக எழுந்து) இந்தத் தடியனைக் கொண்டுபோய் தூக்கிலிட்டு, தலையை வெட்டி, பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டையில் கொண்டுபோய் மாட்டி விடுங்கள். இனி இந்த ஆங்கிலேயரை எதிர்த்து போராடும் எந்தத் தமிழனுக்கும், இந்த கதிதான் என்பதை ஒவ்வொரு தமிழனும் உணரட்டும்.

தானு: *ஆ! ரத்த வெறி கொண்ட பேயே! முதலில் நீ ஒழிந்து போ!*

[ஓடிப்போய் பானர்மெனேப் பிடித்து கழுத்தை நெறிக்கிருர். பானர்மென் சப்தம்போட்டுக் கொண்டு 'சிப்பாய் சிப்பாய்' என்று கதறுகிருர். சிப்பாய் ஓடி வந்து பின்னுலிருந்து தானுபதியின் மண்டையிலடிக்க அம்மா வென்று கீழே விழுகிருர். பிறகு சிப்பாய்கள் இழுத்துக்கொண்டு போகிருர்கள்.]

பானர்: *நல்லவேளை! தொலேந்தது ஒன்று. அடுத்தபடியாக கம்பெனிக்கு எதிரிடையாகவும், கட்டபொம்மனுக்கு ஒத்தாசையாகவும் இருந்து இடையூறு செய்து வந்ததால் விசாரணையின்றி கம்பெனியின் எதிரிகளாகக்கருதி தானுபதியின் தம்பி வீரபுத்திர பிள்ளை, நாகலாபுரம் ஜமீன்தார் தம்பி சௌந்திர பாண்டிய நாயக்கர் ஆகிய இருவருக்கும் தூக்குத்தண்டனையும், நாகலாபுரம் ஜமீன் மந்திரி சாத்தூரப்ப பிள்ளை, கோலார் ஜமீன்தார் மைத்துனர் சௌந்திரலிங்க நாயக்கர், குளத்தூர் ஜமீன்தார் ஆறுமுகம் பிள்ளை, எழாயிரம்பண்ணை ஜமீன் தர்மப்பெருமாள் பிள்ளை ஆகிய நால்வருக்கும் ஆயுள் தண்டனையும் விதித்திருக்கிறேன்.*

[பானர்மென் எழுந்து போகிருன்]

காட்சி 24

இடம்: *தூக்குமேடை.*

உறுப்பினர்: *தானுபதி, கொலையாளி, பொது மக்கள், சிப்பாய், வீரபுத்திர*

பிள்ளை, சௌந்திரபாண்டிய நாயக்கர், பானர்மென், எட்டப்பன்.

நிலைமை: படைவீரர்கள் சூழ மூன்று கைதிகளையும் விலங்கிட்டுப் பூட்டி தூக்கு மேடைக்கு கொண்டு வருகிறார்கள். பானர்மென், எட்டப்பன், மற்ற துரைகள் உட்கார்ந்திருக்கிறார்கள். பொதுமக்களும் கூட்டமாக மூவரையும் பரிதாபமான பார்வையில் பார்க்கிறார்கள். பொதுமக்களில் ஒருவன் முகம் வாடுகிறது. மற்றவன் உள்ளம் குமுறுகிறது. இன்னொருவன் கண்களில் நீர் ததும்புகிறது. மூவரும் தயாராயிருக்கும் மூன்று தூக்கு கயிறுகளுக்கு முன்னால் நின்றுகொண்டு கைகூப்பி கண்ணை மூடிக்கொண்டு மனதிற்குள் பிரார்த்திக்கிறார்கள். அது சமயம் அவர்களுடைய மனச்சாட்சி பேசுகிறது.

(நிழற் காட்சியில் மூன்று பேர்களுடைய உருவத்தையும் காட்டி முதலாவது தானாபதி முகம் பேசுகிறது.)

தானா: தாயே! என்னைப் பெற்று வளர்த்த தாயகமே! உன் வயிற்றில் எத்தனையோ மக்கள் தோன்றி மறைந்திருக்கிறார்கள். அவர்களில் நானும் ஒருவன். மகிழ்ச்சியால் உன்

மடியிலே தவழ்ந்து விளையாடிய நான் இப்போது உன் மடியிலேயே மடியப்போகிறேன். எம் மன்னர் இந்நிலையை அறிவாரா? என் மனத் துடிப்பை இப்போது அவர்களுக்கு எப்படி உரைப்பேன்? எனது மனமார அவரிடத்தில் மண்டியிட்டு மன்னிப்பு கேட்கக்கூட கொடுத்து வைக்காத பாவி நான். நான் கெட்டதுமல்லாமல் எம்மன்னரையும் கெடுத்து, பாஞ்சாலத்தைப் பரதேசியாக்கிய பாதகன் நான். வர மறுத்த தங்களை வழிமறித்து இழுத்து வந்த மகா பாவி நான். அரசே! அரசே! என்னை மன்னிப்பீர்களா? (தலையில் ஓங்கி அறைந்து கொள்ளுதல்) கோட்டையிலே இருந்திருந்தால் வெற்றியாவது, வீரசுவர்க்கமாவது கிடைத்திருக்கும்.

(அடுத்தாற் போல் வீரபுத்திரபிள்ளை மனச் சாட்சி பேசுகிறது.)

வீர: ஆம். அனுபவிக்கத்தான் வேண்டும். நாடிவந்த வெள்ளையனை கால் கடுக்கத் தேடிச்சென்று கைகூப்பி பாடிநிற்கும் பேடிகளுக்குத்தான் இப்போது காலம் மோடி வாசிக்கிறதே தவிர நம்மை நினைத்து வருந்தும் வாய்ப்பு எங்கிருக்கிறது? நானும் அந்த எட்டப்பனைப்போல் கெடு புத்தியோடு வாழ்ந்திருந்தால் அவனை விடப் பத்துமடங்கு மேன்மையாகத்தான் வாழலாம். சுதந்திரமில்லாத வாழ்வு, ஒரு வாழ்வா? எட்டப்பா! என்னைக் காட்டிக்கொடுத்தாய்; எட்டி உதைத்தாய்; இப்போது கொட்டி நகைக்கிறாய். ஆனால் உன்னைப் பார்த்து ஊரே திட்டி நகைக்கிறது என்பதை மறந்து விட்டாய்! பிறந்தவன் இறப்பது திண்ணம். மானாபிமானமற்ற மனிதனாய் வாழ்வதைவிட வீதியிலே பிச்சை யெடுப்பதே மேல்! பலனற்றுத் தவித்து நலம் கெட்டு தலம் விட்டு அல்லல் பட்டாலும் அன்னியன் கைபட்டு உயிர் துறப்பது கூடாது.

அதிலும் அன்னியனுடனிருந்து தன்னவனைக் காட்டிக் கொடுக்கும் தமிழனும் ஒரு தமிழனா?

(சௌந்திரபாண்டிய பிள்ளையின் மனச்சாட்சி பேசுகிறது)

சௌ: ஆம்! நானும் ஒரு தமிழன்—நீயும் ஒரு தமிழன். நாட்டுக்காக பாடுபட்டவன் நான்—காட்டிக்கொடுக்க திட்டமிட்டவன் நீ! நீ இன்று அடைந்த பலன் தான் என்ன? என்றாவது ஒரு நாளாவது மண்ணோடு மண்ணாவது மட்டும் திண்ணம். அப்போது உன்னைச்சுற்றி பேய்களும், நாய்களும் தான் வருமே தவிர உனக்காக கண்ணீர் வடிக்க ஒரு தமிழன் கூட வரமாட்டான். என்னருமைத் தாய்நாட்டு பக்தர்களே! தேசத் தொண்டர்களே! இந்நாட்டில் அலங்கார உடை உடுத்தித்திரியும் அனுமதேயப் பேர் வழிகளின் மீது, நாட்டுக்கு துரோகம் விளைவிக்கும் நாசகாரர்கள் மீது உங்களுக்கு எப்போதும் ஒரு கண் இருக்கட்டும். அவர்கள் இருக்கும் வரை நம் நாட்டிற்கு விமோசனமே கிடையாது.

தானு: அயராது உழைத்து, உருக்குலைந்த என் அருமைப் பாஞ்சைப் பிரஜைகளே! கடைசியாக நான் உங்களிடம் கேட்டுக் கொள்வது என்னவென்றால், என் தாய் நாட்டுக்காக நான் ஏதாவது தவறு செய்திருந்தால் என்னை மன்னித்து விடுங்கள். நாட்டுக்காக தியாகம் செய்த என் ஆவி, மறுபடியும் இந்த நாடு விடுதலை பெறும் வரையும் உங்கள் வீட்டிலே ஊசலாடிக் கொண்டிருக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்.

வீர: இதோ தொங்கும் இந்த சுருக்குக் கயிற்றை மறந்து விடாதீர்கள்!

சௌ: இந்த நிகழ்ச்சியை மறந்து விடாதீர்கள்!

தானு: இந்த நாடு விடுதலை அடைந்ததும்—பாரதநாடு விடுதலை அடைந்ததும் எந்தக் குற்றத்திற்காக நான் தூக்கிலிடப் பட்டேனே, எவன் உதவியால் தூக்கிலிடப்பட்டேனே, அந் தக் கயவனை, (கோபமாக) காட்டிக்கொடுக்கும் கயவனை...!

வீர: (கோபமாக) தேசத் துரோகியை...!

சௌ: (கோபமாக) அன்னியன் அடிவருடியை!

தானு: உள்ளிருந்து உலை வைக்கும் உலோபியை!

வீர: முடிவாக தான் பிறந்த நாட்டைக் குறைகூறி மேல் நாட்டை அறை கூவி அழைக்கும் அயோக்கியனை...!

சௌ: தாய் நாட்டை சரிக்கச் சதி செய்யும் ஒவ்வொரு சதிகாரக் கூட்டத்தினரையும் இதே கயிற்றில் ஏற்றுங்கள்.

தானு: என் உயிர் பதை பதைப்பது போல், பதை பதைத்துச் சாவதைப் போல் அவர்கள் உயிரும் பதை பதைத்துச் சாக வேண்டும். அத்துடன் நீங்கவேண்டும் — தாய்நாட்டின் மீதுள்ள சாபம்.

(மூவரையும் ஒன்று போல் கழுத்தில் கயிற்றை மாட்டுகிறார்கள் கொலையாளிகள். அத்துடன் மூன்று உருவங்களும் கயிற்றிலே தொங்கிக் கொண்டிருக்கிறது. அவற்றில் தானுபதியின் தலையைத் துண்டித்து ஈட்டியால் குத்தி கோட்டையில் நட்டு விடுகிறார்கள்)

காட்சி 25

இடம்: காடு.

உறுப்பினர்: கட்டபொம்மன், ஊமைத்துரை, வீரகஞ்சயன்.

நிலைமை: கட்டபொம்மன் காட்டில் பாறை ஒன்றில் உட்கார்ந்துகொண்டு சோகமாகப் பாடிக்கொண்டிருக்கிறார். ஊமைத்துரை ஏதோ கிழங்குகளை தீ மூட்டி எடுத்துக் கொண்டிருக்கிறார்.

ஊமை: அண்ணா! நாம் கோட்டையை விட்டுப் புறப்பட்டு இன்றோடு ஏழு நாட்கள் ஆகின்றன. இனியும் தாமதித்தால் எதிரிகள் நம்மை சிறைப்பிடித்து விடுவார்கள். வாருங்களண்ணா, நாம் சீக்கிரமாக திருச்சிப்போய் சேருவோம்.

கட்ட: தம்பி! எனக்கு இரண்டு நாட்களாக மனம் ஒரு நிலையில் இல்லை. ஏதோ ஒரு பெரிய ஆபத்தை எதிர் பார்ப்பது போல் இருக்கிறது. கோட்டையிலே விட்டு வந்த நமது குடும்பமும் கோலார்பட்டியில் பிடிபட்ட தானுபதியாரும் என்னவானார்களோ?

ஊமை: அண்ணா! நீங்களா, இப்படி மனங்கலங்குவது! கேவலம், இந்த வெள்ளை மூஞ்சிகளால், உங்களை என்ன செய்துவிட முடியும்? அன்று ராமலிங்க விலாசத்திலே ஐயாயிரம் வீரர்கள் சேர்ந்திருந்து பிடிக்க முடியாத பேடிகளால், போர்க்கோலம் பூண்டு, பெரும் படையுடன் திரண்டு வந்து, பீரங்கிக் குண்டுகளையும் கொண்டு வெற்றிகாண முடியாத வீணர்களால் தங்களை என்ன செய்துவிட முடியும், அண்ணா? அண்ணா, நேரே திருச்சிக்குச் சென்று நியாயம் கேட்போம்; கொடுத்தால் ஆட்சி. இல்லையென்றால் அவனது சூழ்ச்சியையும், புரட்சியால் வென்று விடுவோம்.

கட்ட: தம்பி! நீ நினைப்பது முடியாத காரியம். காலம் கடந்து விட்டது. நாமொன்று நினைக்க, தெய்வமொன்று நினைத்து

விட்டது. அவர்களை அன்று அந்த இடத்திலேயே கொன்றிருக்கவேண்டும்; தவறிவிட்டோம். ஆனால் இன்று நாடிழந்து, நலமிழந்து ஏறிவந்த குதிரையின் குடலறுந்து கால் கடுக்க வெயிலடிக்க நடை நடந்து உண்ண உணவிழந்து திரியும் நம்மால் இப்போது என்ன செய்ய முடியும்?

(வீர கஞ்சயன் அண்ணா என்று ஓடி வரவும், கட்டபொம்மன் தம்பி என்றழைத்து ஓடி வரவும், ஊமைத்துரை அண்ணா என்றழைத்து ஓடி வரவும், வீரகஞ்சயன் ஊமைத்துரையைப் பார்த்து தம்பி என்றழைத்து ஏக காலத்தில் மூவரும் கட்டித் தழுவிக் கொள்கிறார்கள்,

கட்ட: வீர கஞ்சயா, நீ எப்படி இங்கு வந்தாய்? நாங்கள் இங்கிருப்பது உனக்கு எப்படித்தெரியும்? தானாபதியைப்பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?

ஊமை: அண்ணா, கோட்டையில் எல்லோரும் சௌக்கியந்தானா?

வீர: தம்பி, எல்லோரும் சௌக்கியந்தான். ஆனால்...

கட்ட: ஆனால் என்ன?

வீர: அட கடவுளே!

கட்ட: என்ன தம்பி விஷயம், சொல் சீக்கிரம்.

வீர: அண்ணா! உங்களை நான் இந்நிலையிலா காணவேண்டும், அண்ணா! (ஊமைத்துரையைப் பார்த்து) தம்பி! என்னை மன்னித்து விடு. நான் பாபி (அழுதல்)

கட்ட: தம்பி! ஏன் அழுகிறாய்? வரும் விதி வந்து தானே தீரும். எல்லாம் நம் விதிப்பயன். அதிருக்கட்டும். சிறைப்பட்ட பிள்ளை என்னவானார்?

வீர: அண்ணா, இதை சொல்லவா நான் இங்கு வரவேண்டும்?

என்னையும் அவருடன் சேர்த்து தூக்கிலேற்றியிருக்கக் கூடாதா?

கட்ட & ஊமை: ஆ!...

கட்ட: என்ன சொன்னாய்? தானுபதியை தூக்கிலிட்டுவிட்டார்களா?

வீர: ஆம்.

கட்ட: (பெரிய சத்தத்தில்) ஆ! முருகா! (என்று தலையிலடித்துக்கொண்டு) பிள்ளாயே! என் சொல்லைக் கேட்டு கோட்டையிலே இருந்திருந்தால் உமக்கு இந்தக் கேடு வந்திருக்குமோ? நீர் துடி துடித்து இறக்கும்போது எதை நினைத்துக்கொண்டு என்ன சொல்லி இறந்தீரோ!

ஊமை: (வீர கஞ்சயனைப்பார்த்து) அண்ணா! நடந்ததை விபரமாகச் சொல்லுங்கள்.

வீர: நீங்கள் கோலார் பட்டியிலிருந்து தப்பி வந்ததும், தானுபதி பிள்ளை மட்டும் சிறைப்பட்டு விட்டார். கம்பெனியார் அவரை மறுநாள் விசாரித்து, தூக்கிலிட்டுக்கொன்று, அவர் தலையை வெட்டி நமது கோட்டையின் வாசலில் நட்டு விட்டார்கள்.

ஊமை: அப்படியா செய்தார்கள்?

கட்ட: அட, பாபிகள்!

ஊமை: நமது கோட்டையில் எப்படி நட்டுவைக்க முடிந்தது?

வீர: நீங்கள் கோட்டையை விட்டு வந்த விஷயம் எட்டப்பனுக்குத் தெரிந்து, அவன் போய் பானர்மெனிடம் சொல்லி பெரும் படையுடன் வந்து கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டான்.

ஊமை: கோட்டையில் இருந்தவர்களின் கதி?

வீர: அந்தப்புரம் ஒன்றுக்கும் போகவில்லை.

கட்ட: தம்பி! உடனே சென்று தானுபதியைக் கொன்ற அந்த அரக்கனைப் பழிக்குப் பழி வாங்கவேண்டும். இவ்வளவுக்கும் காரணமாய் இருந்த, அந்த எட்டப்பனைக்கொன்று அவன் ரத்தத்தை உறிஞ்சி என் தாகத்தைத் தீர்க்கவேண்டும். வா போகலாம். (ஓடுகிறார்)

ஊமை: (ஊமைத்துரை தடுத்து நிறுத்தி) அண்ணு! நாமிப் போது அங்கு செல்லலாகாது. கோட்டையும் பிடிபட்டு விட்டது. வீரர்களும் சிறைபட்டிருப்பார்கள். நாம் நேரே திருச்சிக்குத்தான் செல்லவேண்டும். வாருங்கள் அண்ணு, போய் வருவோம்.

வீர: ஆம், அண்ணு! அது தான் சரி. முதலில் வந்த காரியத்தைக் கவனியுங்கள்.

கட்ட: சரி வாருங்கள் போவோம்.

காட்சி 26

இடம்: ரஸ்தா.

உறுப்பினர்: சேவகன், பொதுமக்கள்.

நிலைமை: சேவகன் ஒருவன் தம்பட்டம் அடிக்கிறுன். ஜனங்கள் கூடுகிறுர்கள்.

சேவ: இதனுல் சகலமான ஜனங்களுக்கும் தெரிவிப்பது என்னவெனறுல், பாஞ்சாலங்குறிச்சி மன்னன் வீரபாண்டிய கட்டபொம்மனைப் பிடித்துக்கொடுப்பவர்களுக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசளிக்கப்படும். இது கிழக்கிந்திய கம்பெனியின் உத்தரவு.

[தம்பட்டத்தை அடித்துக்கொண்டு போய் விடுகிறுன்,]

காட்சி 27

இடம்: *கம்பெனியின் அரண்மனே.*

உறுப்பினர்: *பானர்மென், பக்கட், துரை கள், சேவகன்.*

நிலைமை: *நடனம் நடந்து கொண்டிருக்கும் போது சேவகன் ஒருவன் வந்து லெட்டர் ஒன்றை பானர்மெனிடம் கொடுத்துப் போகிருன். பானர்மென் வாங்கிப் படிக்கிருன்.*

பானர்: *சபாஷ்! பக்கட், இதோ இந்தக் கடிதத்தைப் படியும்.*

புதுக்கோட்டை,
24—9—1799

மேன்மை தங்கிய தளபதி ஜெனரல் பானர்மென் அவர்களுக்கு, தொண்டைமான் புதுக்கோட்டை விஜய ரகுநாதன் எழுதியது.

வணக்கம். உங்கள் உத்தரவுக்கு கீழ்ப் பணிந்து பாஞ்சாலங்குறிச்சியானே, மிகவும் கஷ்டப்பட்டு பிடிக்க ஏற்பாடு செய்திருக்கிறேன்.

பாஞ்சாலங்குறிச்சியான் திருச்சிக்குச் செல்லும் வழியில், என்னேக் கண்டு பேசவேண்டுமென்று சொல்லி அழைத்துவரும்படி தூதர்களே அனுப்பியிருக் கிறேன். வந்ததும் அவர்களேத் தந்திரமாக, நிராயுத பாணிகளாக்கி விடுகிறேன். தாங்கள் பெரும் படை யுடன் வந்து சிறைபிடித்துச் செல்லும் நேரத்தை நான்

உங்களுக்கு தெரியப்படுத்துகிறேன். அப்போது வந்து உங்கள் காரியத்தைப் பூர்த்தி செய்து கொள்ளவும்.

இப்படிக்கு,
தங்கள் ஊழியன்,
விஜயரகுநாதன்,
தொண்டைமான்.

பானர்: *சரி! இனி கட்டபொம்மன் நம்மிடம் கிடைத்தமாதிரி தான். கேப்டன் பக்கட்! உடனே ஒரு பெரும்படையுடன் புதுக்கோட்டைக்குப் போய் மறைந்துகொள்ளுங்கள். சமயம் வந்ததும், தந்திரமாக தாவிப்பிடித்து கட்டபொம்மனைக் கட்டியுருட்டி என் காலடியில் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். இம்முறையும் ஏமாந்து விடாதீர்கள். ஜாக்கிரதை!*

காட்சி 28

இடம்: *சாலை.*

உறுப்பினர்: *ஊமைத்துரை, அரசர், சேவகன்.*

நிலைமை: *வீதியில் அரசனும், தம்பியும் போகின்றனர். அப்போது சேவகன் அரசரை வணங்குகிறான்.*

சேவ: *மகாராஜா! தங்களைத் தொண்டமான் புதுக்கோட்டை மகாராஜா கையோடு அழைத்துவரச் சொன்னார்கள்.*

கட்ட: *யார்! புதுக்கோட்டை மகாராஜாவா?*

சேவ: *ஆம், அரசே! தாங்கள் அவருக்குச் செய்த உதவிக்குப் பதிலாக இந்த நேரத்தில்தான் தங்களுக்கு உதவ வேண்டுமென்று உங்கள் வருகையை மிகவும் ஆவலோடு எதிர்பார்க்கிறார் பிரபு!*

கட்ட: ஆகா! அப்படியா? எவ்வளவு அன்பு! என்ன உரிமை!!

ஊமை: அண்ணு! இது தீமையை விளைவித்தாலும் விளைவிக்கும். நன்மை கிடைக்குமென்று எண்ணுவதற்கில்லை.

சேவ: நான் சொல்வது உண்மை.

கட்ட: எனக்குத் தெரியும் தம்பி, அவர் தன்மை.

ஊமை: வன்மையோடு இருந்த காலத்தில் அவர் நாடியிருக்கலாம் நம்மை. ஆனுல்......

கட்ட: ஆனுல் என்ன தம்பி? நீ ஒன்றுக்கும் கலங்காதே, வா போகலாம்.

ஊமை: சரியண்ணு! விதி வழிதானே மதி செல்லும்.

காட்சி 29

இடம்: விஜய ரகுநாதனின் அரண்மனை.

உறுப்பினர்: கட்டபொம்மு, ஊமைத்துரை, ரகுநாதன்.

நிலைமை: விஜய ரகுநாதன் நாற்காலியில் அமர்ந்து புத்தகம் படித்துக்கொண்டிருக்கிருர். கட்டபொம்மு, ஊமைத்துரை, சேவகன் முதலியோர் வருகின்றனர். அதைக் கவனிக்காதது போல் படிக்கிருர். சேவகன் பக்கத்தில் வந்து வணங்குகிருன்.

சேவ: மகாராஜா!

விஜ: (தலையைக் குனிந்து கொண்டே) என்ன? யாரது?

சேவ: மகாராஜா! வந்து......

விஜ: என்ன வந்து?

சே: இல்லை, நமது பாஞ்சாலங்குறிச்சி ராஜா......

விஜ: யார்? (நிமிர்ந்து பார்த்து) ஆ, நீங்களா! மன்னிக்க வேண்டும்.

கட்ட: பரவாயில்லை.

விஜ: நானே நேரில் வந்து தங்களை அழைத்திருப்பேன். ஆனால் காலம் இடம் கொடுக்கவில்லை. தாங்கள் வரமறுத்து விடுவீர்களோ என்று எண்ணினேன். நல்ல வேளை, வந்து சேர்ந்து விட்டீர்கள். இனி என் குறை தீர்ந்துவிட்டது. அடடா! உங்களுக்குமா இக்கதி வரவேண்டும்? சிவிகை ஏறி சிறப்பாக வந்த தாங்கள் இப்போது ஒரு குதிரைகூட இல்லாமல் கால் நடையாகவா நடந்து வரவேண்டும்? உங்களது பூப் போன்ற பாதத்தில் பொத்திருக்கும் காயங்கள் என் மார்பகத்தில் கொப்பளிக்கும் இரத்தமாகவன்றோ இருக்கிறது! உங்கள் நிதானம் முடிவில் யயானத்தில் தான் கொண்டுவந்து விட்டது. நீங்கள் என்ன செய்வீர்கள்? எல்லாம் அந்தத் தானபதியின் தனி ஆலோசனையில் வந்த வினைதான்.

ஊமை: ரகுநாதரே, உமது போக்கு முரணானது.

விஜ: தப்பர்த்தம் எடுத்துக் கொண்டீர்கள். என் அன்பு இராமன் மீது கொண்ட குகன் அன்பு அரசே! நீங்கள் ஒன்றுக்கும்

கவலைப்படாதீர்கள். எதிரிகளுக்கு உங்களைப்பற்றிய நினைவே இல்லாமல் செய்து விடுகிறேன்.

கட்ட: அதெப்படி?

விஜ: இன்னும் ஒரு வாரத்தில் பெரும் படைதிரட்டி வெள்ளைத் தலை ஒன்றுகூட இல்லாமல் எல்லோரையும் ஒரேயடியாகப் பொசுக்கி விடுவோம்.

கட்ட: அதற்குத்தக்க ஆற்றல் உம்மிடம் இருக்கிறதா?

விஜ: இல்லையென்றால் உங்களை இங்கு வரவழைத்திருப்பேனா?

கட்ட: ரகுநாதா, என்மேல் உனக்கு அவ்வளவு அன்பிருந்தால் போதும். நமது போராட்டத்தை நான் திருச்சிக்குப் போய் வந்ததும் வைத்துக் கொள்வோம்.

விஜ: மகாராஜா, தாங்கள் வந்ததும் வராததுமாக இப்படிப்பேசு வது என் அந்தஸ்துக்குக் குறைவு. அதிலும் என் எண் ணத்தை நிறைவேற்றுமுன் போவதென்றால்......

கட்ட: என்ன உமது எண்ணம்?

விஜ: பிரமாதமாக ஒன்றுமில்லை. என் அந்தஸ்துக்குத்தக்க தாங் கள் இங்கு குறைந்தது ஒருவாரமாவது தங்கித்தான் போக வேண்டும். என்னை உலகம் மறக்காமல் இருக்கும் வகையில் உங்களுக்கு நான் உபசாரம் செய்யத்திட்டமிட்டிருக்கிறேன். அதிலும் தாங்கள் சரியாக உண்டு களித்து பல நாட்கள் ஆகி யிருப்பது போலவும் தெரிகிறது.

கட்ட: ஆம்! எனது வாழ்க்கையிலேயே நான் இது வரையும் அடைந்திராத அவ்வளவு பெரிய கஷ்டங்களை அனுபவித் திருக்கிறேன். கடந்த பல நாட்களில், குளித்து பூசை புரிந்து, உண்டு, உறங்கி பதினைந்து நாட்கள் ஆகின்றன.

விஜ: *அப்படியா! அரசே, மன்னிக்கவேண்டும். உங்கள் நிலை தெரியாது ஏதேதோ பேசிக்கொண்டிருந்துவிட்டேன். தாங்கள் சென்று எண்ணெய் ஸ்நானம் செய்து, வேறு ஆடையணிந்து, ஆண்டவனை தியானித்துவிட்டு, உணவருந்திய பின் மேல் மாடியில் தூங்குங்கள். யாரங்கே? (சேவகன் ஒருவன் வந்து வணங்குதல்) மன்னரை அழைத்துச் சென்று மாற்றுடை கொடுத்து, மஞ்சத்தை விரித்து படுப்பதற்கு வேண்டிய வசதியைச் செய்துகொடு. அ...அந்த உடை வாளைத் தவறிவிடாமல் பத்திரமாய் வாங்கி வை.*

சேவ: *உத்தரவு மகாராஜா!*

(கட்டபொம்மனும், தம்பியும் வாளைக் கழற்றிக் கொடுக்க சேவகன் வாங்குகிறான்,)

விஜ: *மகாராஜா! நீங்கள் போய் ஸ்நானம் செய்துவிட்டு உடம்பு வலி தீர நன்றாய் தூங்குங்கள்.*

கட்ட: *நல்லது. (மூவரும் போகிறார்கள்)*

விஜ: *(தனிமையில்) என் ஆருயிர் நண்பரே, என்னை மன்னித்துவிடும். நண்பனான நானே உம்மை உறவு கொண்டாடி, காட்டிக் கொடுக்கத் திட்டமிட்டேனென்றால் அது உமது ஊழ்வினைப் பயன்தான். நீர் யாரையும் நொந்துகொள்வதில் பயனில்லை. உங்கள் பலம் பல்லில்லாத பாம்பு. நிலையோ பருந்தின் விருந்தாக வளர்ந்துவரும் எலி. இந்த நிலையில் நான் உங்களைக் காட்டிக்கொடுக்காவிட்டாலும் நீங்கள் அவர்கள் கையில் சிக்குவது மட்டும் திண்ணம். எனவே தங்களைக் கொண்டு கம்பெனியின் செல்வாக்கைத் தேடிக்கொள்ள இந்த வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் உங்களுக்கு நன்றி செலுத்திக் கொள்கிறேன்.*

காட்சி 30

இடம்: படுக்கை அறை

உறுப்பினர்: கட்டபொம்மன், ஊமைத் துரை, படைகள்.

நிலைமை: கட்டபொம்மனும் ஊமைத்துரையும் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். படைகள் நீட்டிய கத்தியோடு வந்து அவர்கள் நெஞ்சில் வைத்துக்கொண்டு எழுப்புகிறார்கள்.

கட்ட: (கோபமாக) உடலிலே உயிர் இல்லா உலுத்தர்களே! உங்களில் ஒருவனுக்காவது உடம்பிலே உரமில்லையா? அயர்ந்து தூங்கும் ஒருவனை ஆயுதங்களோடு வந்து பிடிப்பது தான் இந்நாட்டு வழக்கம் போலும்?

ஊமை: அண்ணா! சாவதானாலும் சரி, வாழ்வதானாலும் சரி, உத்தரவு கொடுங்கள்—ஒரு நொடியில் முடித்துவிடுகிறேன்.

கட்ட: தம்பி! கொடும்புலியானாலும் கூர்மையான நகம் இல்லாவிட்டால் அதன் சக்தி கொஞ்சம் குறைவுதான். நிராயுதபாணிகளாக இருக்கும் நம்மால் இப்போது என்ன செய்துவிடமுடியும்? நடப்பது நடக்கட்டும். சிப்பாய்களே, நீங்கள் எங்களைத் தாராளமாகக் கைது செய்து போகலாம். ஏன் பயப்படுகிறீர்கள்? உங்களை நாங்கள் ஒன்றும் செய்ய மாட்டோம். தைரியமாகக் கைதிசெய்து கொள்ளுங்கள்.

காட்சி 31

இடம்: *சாலை.*

உறுப்பினர்: *சேவகன், பொதுமக்கள்.*

நிலைமை: *சேவகன் தம்பட்டம் அடிக்கிறான்.*

சேவகன்: *இதனால் சகலமான ஜனங்களுக்கும், பாளையப்பட்டு ஜமீன்களுக்கும் தெரியப்படுத்துவது என்னவென்றால்,*

இன்றுமுதல் கட்டபொம்மனுடைய வரலாற்றை யாராவது சொன்னாலும், சொல்லக் கேட்டாலும், சொன்னவர்களையும், கேட்டவர்களையும் விசாரணையின்றி தூக்கிலிடப்படும். அத்துடன் இந்த உத்தரவு கண்ட ஏழு நாட்களுக்குள் மற்றைய பாளையப்பட்டுக்காரர்கள் தங்களிடம் உள்ள ஆயுதங்களை கம்பெனியார் வசம் ஒப்புவித்து விட்டு, தங்கள் கோட்டை கொத்தளங்களை இடித்து தரை மட்டமாக்கி விடவேண்டும். தவறினால் அவர்களையும் கடுமையாகத் தண்டிக்கப்படும். இது கிழக்கிந்திய கம்பெனியின் உத்தரவு.

(தம்பட்டத்தை அடித்துக்கொண்டு போகிறான்.)

காட்சி 32

இடம்: *நீதி சபை*

உறுப்பினர்: *கட்டபொம்மன், பானர்மென், ஜூரிகள், எட்டப்பன், விஜய ரகுநாதன், சிப்பாய்கள்.*

நிலைமை: எல்லோரும் நீதி சபையில் உட்கார்ந்திருக்கிறார்கள். நீதிபதியாக பானர்மென் உட்கார்ந்திருக்கிறார்.

பான: குற்றவாளியைக் கொண்டு வாருங்கள்!

(நான்கு சிப்பாய்கள் கட்டபொம்மனை சங்கிலியால் கட்டி இழுத்து வருதல்)

வீரபாண்டிய கட்டபொம்மு என்பவர் நீர் தானே?

கட்ட: ஆம், தமிழ் நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு இன்று படுகுழியில் வீழ்த்தப்பட்டிருக்கும் வீரபாண்டிய கட்டபொம்மன் நான் தான்.

பான: உம்மீது குற்றங்கள் குவிந்திருக்கின்றன. அதை விசாரிக்கவே உம்மை இங்கு கொண்டு வந்தோம். கேட்கப்படும் கேள்விகளுக்கு நியாயமான முறையில் பதில் கூறவேண்டும்.

கட்ட: நியாயம்! அது உன் பகுத்தறிவுப் பாசறைகள் யாதும் பார்த்திருக்கவே முடியாதே! என் உரிமை, பெருமைகளைச் சீர்குலைத்து சித்ரவதை செய்ய, என்னை வந்து நித்திரையில் சிறை பிடித்த நீ தான் நியாயாதிபதியோ? அநீதியே உருவான உன்னிடத்தில் இருந்துவரும் தனி நீதிகளை மனுநீதி என்று நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டுமோ? நீ மகா நியாயாதிபதி! இதற்கு ஒரு நியாயசபை! ஹும்! அதர்மமே தலை விரித்தாடும் தளபதி ஓர் அக்கிராசனாதிபதி! அக்கிராசனாதிபதியின் அன்புக்கேற்ற பண்பே தெரியாத கலெக்டர்! அவருக்கேற்ற உறுப்பினர்! அவருக்கேற்ற ஒரு சபை! இந்த வம்பர் சபையிலா நான் நியாயத்தை எதிர்பார்ப்பது?

பானர்: நிறுத்தும். நீர் ஒரு குற்றவாளி என்பதை மறந்துவிட வேண்டாம்.

கட்ட: நான் செய்த குற்றங்கள்?

பானர்: உம்மை சமரசம் பேச அழைத்தபோது நீர் அரியாசனம் வீற்றிருந்து எம்மை அவமதித்து, முடிவில் எனது படைகளை அநியாயமாக அழித்தது மாபெரும் குற்றம். இந்த குற்றங்களைச் செய்துவிட்டு இப்போது என்ன குற்றம் செய்தேனென்று கேட்கும் உன்னை என்ன செய்தாலும் தகும்.

கட்ட: இவ்வளவு தானு, இன்னும் ஏதாவது இருக்கிறதா?

பானர்: நீர் வரி கொடுக்காததை குற்றமென்று ஒப்புக்கொள்கிருயா? இல்லையா?

கட்ட: ஏன் ஒப்புக்கொள்ளவேண்டும்? நான் ஏன் உனக்கு வரிகொடுக்க வேண்டும்? நான் வந்து உன்னிடத்தில் பூமி கேட்டேனு? இல்லையென்ருல் ஆற்காட்டு நவாபைப் போல நலமிழந்தேனு? கடன் கேட்டேனு? உனக்கு வரி கொடுக்க வகையானவர்கள் தொண்டைமானும், எட்டப்பனுமே தவிர, இந்த கட்டபொம்மன் அல்ல. அவர்கள் வேண்டுமானுல் எஜமானைக்கண்ட நாயைப்போல ஓடி வந்து வாலாட்டலாம்; ஆனுல் உன்னைக்கண்டதும் என் உறையிலிருக்கும் வாள் பாயும்; தோள் துடிக்கும்.

பானர்: சரிதான் நிறுத்தும்! உ ம் மை சமாதானத்துக்கு அழைத்த என்னை நீர் சண்டைக்கு இழுத்து என் படையை ஒழித்ததைக் குற்றமென்று ஒப்புக் கொள்கின்றீரா? அல்லது அதையும் ஏதாவது சாக்கு சொல்லி மழுப்பப் போகின்றீரா?

கட்ட: ஏ, துரையே! இது தெய்வம் பொறுக்காது. இது நியாயசபையா? அல்லது அநியாயக்காரர்கள் நிறைந்த அரக்கர்

சபையா? என்னை வஞ்சித்து, என் கோட்டையைக் கைப்பிடித்து, கிஞ்சித்தும் மனமிரங்காமல் நான் அனுப்பிய தூதனைச் சிறை பிடித்தடைத்து, இரவோடு இரவே யாருக்கும் தெரியாமல் படையெடுத்து வந்து புறமுதுகைக் காட்டி ஓடிவிட்டு, இப்போது என்னைக் குறை கூறுகிறாய்! சமாதானம் செய்யவந்த உனக்கு ஏன் படையும், பலமும், பீரங்கியும்? சமாதானம்! யார் விரும்பியது சமாதானம்? சமாதானமென்னும் புனிதமான வார்த்தையைக் கூற உனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? ஒரு பக்கம் என்னை சமாதானப் படுத்துவதாக நிதானப்படுத்திவிட்டு மறுபக்கம் என்னை மயானத்திற்கு அனுப்பும் மார்க்கத்தை கடைப்பிடிப்பது தான் சமாதானமோ? அவனியை ஆள ஆசைகொண்டு நாசகார சதி செய்வதொரு பக்கம், பவனி வந்து பலர் பார்க்க பரஸ்பரம் என பதம் போடுவது மற்றொரு பக்கம். இது தான் உனது சமாதான மாநாட்டின் ஷரத்து; உன் சமாதானத்தை நம்பி நாசமானவன் நானல்ல. ஆனால் இன்று நான் உன் முன் கட்டுண்டு கைதியாக இருக்கிறேன் என்றால் அது உன் ஊனுக்கு என் நாட்டில் பிறந்த ஊதாரிகளின் விபரீதத்தின் விளைவு தான்!

பானர்: உமக்கு என்ன தண்டனை கிடைக்கும் தெரியுமா?

கட்ட: நீ எனக்கு என்ன தண்டனை கொடுக்கப் போகிறாய், கொடுக்க முடியும் என்று எனக்குத் தெரியும். இந்த ஒரு கட்டபொம்மனை உலகிலிருந்தே மறைத்து விட்டால் உன் இச்சையெல்லாம் பூர்த்தியாகிவிடுமென்று மனப்பால் குடிக்காதே! நான் இறந்தாலும் என் உருக்குலைந்தாலும், என்னைப் பற்றிய நினைவு மாத்திரம் ஊற்றெடுத்துக்கொண்டே இருக்கும் என்பதை மறந்து விடாதே! நான் இப்போது

விட்டுச்செல்லும் ஒவ்வொரு மூச்சும் உன்னை இந்நாட்டிலிருந்து வெளியேற்றும் வரை ஒவ்வொரு உருவாக நேருக்கு நேர் போர் செய்யும் வீரனாகவும், போருக்கு படை திரட்டும் சூரராகவும், நாட்டுக் கவி இயற்றும் அமரராகவும், ஆயுதமின்றி உன் வீரியத்தை சூறையாடும் அஹிம்சா மூர்த்தியாகவும் அவதரித்து, முடிவில் ஆயுதமின்றி மக்களை காகிதம் கொண்டு உருவேற்றி, உன் ஆட்சியை ஒழித்துக்கட்ட, 'வெள்ளையனே வெளியே போ!' என்ற கோஷத்தினாலேயே உன்னை இந்நாட்டிலிருந்து விரட்டி திரும்பவும் சுதந்திர நாடாக மாற்றி அமைத்து விட்டுத்தான் என் ஆவி இந்நாட்டை விட்டு அகலும் என்பதைத் தெரிந்து கொள்.

பானர்: முடிந்ததா உன் பிரசங்கம்?

கட்ட: ஆம், எனது பிரசங்கம் முடிந்துவிட்டது—உனது பிரசங்கம் தான் இன்று முதல் ஆரம்பமாகிறது.

பானர்: அது ஆரம்பமாகட்டும். அதற்குள் நீ ஆயத்தமாகிக் கொள். நீ செய்த குற்றங்களுக்குத் தண்டனையாக உனக்கு நியாயத்தின் பேரில் தூக்கு தண்டனை விதித்திருக்கிறேன்.

கடட: துரையே! இது நான் எதிர்பார்த்தது தான். இது போல் நீயும் உன் முடிவை எதிர்பார்த்து நில். நாளை நான் என்றால் சில நாட்களுக்குப் பின் நீயும் தான் என்பதை மறந்து விடாதே!

பானர்: கொண்டு போங்கள். (கொண்டு போகிறார்கள்.)

காட்சி 33

இடம்: கயத்தாறு புளியமரத்தின் தூக்கு மேடை.

உறுப்பினர்: கட்டபொம்மன், கொலையாளி, பொதுமக்கள், துரைகள்.

நிலைமை: கட்டப்பொம்மு, புளியமரத்தில் போடப்பட்டிருந்த தூக்குக் கயற்றின் முன் நின்று கொண்டிருக்கிறார்.

கட்ட: பாருங்கள் கூடியிருப்போரே, பாருங்கள்! எனை வா, வா என்றழைத்து வட்டமிட்டுக்கொண்டு இந்த புளியமரத்திலே தொங்கும் சுருக்கு கயிற்றைப் பாருங்கள்! தாய் மானத்தை தன்மானமாகப் பேணி, மக்களின் அஞ்ஞானத்தை நீக்கி, அரசியல் மெய்ஞானத்தை வளர்த்த எனக்குக் கிடைத்திருக்கும் இந்த சன்மானத்தைப் பாருங்கள்! நான் குற்றவாளியா? நான் துரோகியா? எனக்குத் தண்டனையா? தனக்கன்றி தாய் நாட்டுக்காகப் பாடுபட்ட எனக்குத் தூக்குத்தண்டனையா? இது அநியாயம்! கொடுங்கோல் ஆட்சியைத் தொலைக்க கடும் சமர் புரிந்த நான் இக்கதிக்குள்ளாக வேண்டியதற்கு காரணம்? மதுபானத்தைக் கொடுத்து தமிழ் மானத்தைக் கெடுத்து அன்னிய அணங்குகளை அணைத்துத் தவழும் சதிகாரக் கூட்டத்தை தரை மட்டமாக்க பாடுபட்ட நான் இக்கதிக்குள்ளாக வேண்டிய காரணம்? தாய்நாட்டு மக்களான தென்னாட்டு மக்கள் மேம்பாட்டுடன் வாழ மேல் நாட்டானை எதிர்த்துப் போராடிய நான் இக்கதிக்குள்ளாக வேண்டிய காரணம்? ஆம் இந்நாட்டிலே பிறந்து தாய்நாட்டு செய்தியை மேல் நாட்டுக்கனுப்பி உள்நாட்டுக் குழப்பம் செய்து உடனிருந்து கெடுத்த உளுத்தன் விஜயாகுநாதனும், எட்டப்பனும்தான் காரணம். எட்டப்பன்! ஏ, துரோகி! உன் வாழ்வு ஒரு வாழ்வா? அன்னியனை அண்டினாய்; அவனை அடிபணிந்தாய்; அவன்

ஆளுகையை ஆதரித்தாய்; என்னைக் காட்டிக் கொடுத்தாய்; நாட்டைப் பிரித்து வைத்தாய்; ஆட்சியை அடகு வைத்தாய்; முடிவில் என்னை இக்கதிக்குள்ளாக்கி வைத்தாய். மனைவியின் துயிலை மாற்றான் உரிய, உடனிருந்து அகமகிழ்ந்து, ஊக்க மளித்து, நோக்கம் தீர்க்க, சோரம் புரிய கோரம் சேர்க்கும் கோணங்கியே, போ! ஓடி வந்தழைத்த உன் வீட்டில் ஆடிப் பாடி அக மகிழ்ந்திருந்த என்னை இந்நிலைக்குள்ளாக்கி வைத்த இனத்துரோகியே, போ! உன் நாசம் கலந்த பாச வார்த்தை யால் என்னை மோசம் செய்தாய்; உறவு கொண்டாடி உணவளித்து உறங்க வைத்தாய்; ஊசி பாய வாசலிலே இட மில்லாமல் உலுத்தர்களை நிறுத்தி வைத்தாய்! காட்டிக் கொடுத்து கைகட்டி எட்டி நின்றாய்! நேசம் கொண்டு நாசம் செய்த நயவஞ்சகனே போ! நாடோடியே போ! நாட்டின் துரோகியே போ! நீ என்னைக் காட்டிக்கொடுத்த தால் கண்ட பலன்? நான் உனக்கு என்ன தீங்கு செய் தேன்? எந்நாடு, நகரம், பெண்டு, பிள்ளைகள் அத்தனையு மிழந்து நான் இந்தக் கதிக்குள்ளாகி உயிர் துறக்க நீ அடைந்த பலன் தான் என்ன? நீ ஒரு மனிதனா? நீ ஒரு தமிழனா? நீ பிறந்த நாட்டிற்கு உன்னால் சேவை செய்ய முடியவில்லை யென்றாலும், அதைக் காட்டிக் கொடுக்காமலாவது இருக்க முடியவில்லையா? அன்னியனுக்கு இருக்கும் அவன் நாட்டுப் பற்றுப்போல் ஏன் உனக்கு உன் நாட்டுப்பற்று அற்றுப் போய்விட்டது? பொற்கைப் பாண்டியன் அவதரித்து அர சாண்ட இந்நாட்டிலே ஏன் உன் போன்று கருத்தைப் பறி கொடுக்கும் கயவர்களை நான் காணவேண்டும்? முதலில் நீ தொலையவேண்டும். போ! ஒழிந்து போ!

ஆ! என் பஞ்சைப் பதிகளே! கேளுங்கள். நான் குற்றவாளியாம்! உங்கள் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டது

என் குற்றமாம்! உங்கள் வயிற்றில் மண்ணைத்தூவி வந்தவனுக்கு வரியை வாரிக்கொடுக்காமல் இருந்ததற்காக எனக்குத் தண்டனையாம்! அதிலும் தூக்குத் தண்டனையாம்! ஆம்! இத்தனை நாளும் நீங்கள் வாழ்ந்த வாழ்வும் மகிழ்ந்த மகிழ்வும் தாழ்ந்து தவிடு பொடியாய்விடும். என் ஆத்திரமாக இருக்கிறதா, உங்களுக்கு? ஆத்திரப்பட்டு ஆகப்போவது என்ன? வஞ்சகர்களின் சூழ்ச்சியை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். ஆ! எனக்குப் பின் உங்கள் வாழ்வு வளம் பெருகி இருக்குமா? நல்வாழ்வு நடக்குமா? நடக்காது! நடக்காது!! ஒருக்காலும் நடக்காது!!! (சிரிப்பு) ஆ! நான் சாகக்கூடாது... நான் வாழவேண்டும் ... ... வாழவேண்டும். என்னைக் காப்பாற்றுவார் யாருமில்லையா? நாட்டிற்கு சுதந்திரமில்லையா? இந்நாட்டைக் காக்கும் காவலனில்லையா? (கோபமாக சிரிப்பு)

என் இல்லை? நான் இறந்தால் எனது ஆவி இருக்கிறது; நான் புரிந்த தியாகம் இருக்கிறது; மக்களுக்கு எடுத்துக்காட்டாக என்றைக்கும் மறைக்க முடியாத மாபெரும் இந்த சம்பவம் இருக்கிறது. எந்நாட்டிலே பிறநாட்டானல் நான் இன்று தூக்கிலிடப் படப்போகும் இந்நேரத்திலே என் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையையும் கேட்டுக்கொண்டிருக்கும் உங்கள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு தியாக உணர்ச்சி நிறைந்த திலகங்களாக மாற்றி அமைக்கும் திறன் இருக்கிறது. ஆம், என்னைத் தூக்கிலிடுவதைக் காண கண்டு பதைக்கும் உங்களது ஒவ்வொரு இதயக் கொதிப்பும் நாளை வெள்ளையனை வெருண்டோடச் செய்த வேல் அம்புகளாக அவன் மீது பாய்ந்து,சடலத்தைத் துளைத்து,ரத்தத்தை உறிஞ்சி அவன் ஆணவத்தை அடக்கி ஆட்சியைக் கவரும் நல்ல யுத்தங்களாக மாறட்டும். அன்னியன் கொடிக்கு அடிவணங்கி தன்னவன் கொடிக்கு வலை விரிக்கும் வேடர்கள்

கூட்டம் நலியட்டும். இந் நாட்டின் துரோகிகள் ஒழியட்டும். நான் தூக்கிலிடப்படுவதை பார்த்தாவது அவர்கள் உள்ளம் உருகட்டும் ... ... பிறகாவது திருந்தட்டும்.

ஏ, தேசத் துரோகிகளே! முடிவாக உங்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் பிறந்தநாடு — இந்தப் பாரதநாடு வாழ வேண்டுமென்று உண்மையிலேயே உங்களுக்கு எண்ணமிருக்குமானால் தாய் நாட்டைக் காக்கும் வகைக்காக எது வேண்டுமானாலும், செய்யத் தயங்க மாட்டேனென்று உறுதி கொள்ளுங்கள். உங்களால் சேவைசெய்ய முடிய வில்லையென்றாலும் சேவை செய்வோரை, செம்மையற்றவர், வன்மையற்றவர் என்று கூறி அவர்களின் உறுதியைக் கலைத்து விடாதீர்கள்! செய்யும் காரியங்களில் குற்றமிருந்தால் குறை கூறாதே! அன்னியனை அறைகூவி அழைக்காதே! ஆக்க வேலையை எடுத்துக்கூறு! நமக்குள் பிளவு உண்டாக் காதே! உளவு கூறாதே! நம்மவர் மகிழ்வுகாண நாளெல் லாம் பாடுபடு! தமிழ் நாட்டில் பிறந்த வகைக்காகாவது நீ இதைச் செய்வாயா? நண்பனே! நீ இதைச் செய்வாயா? அன்னியனுக்கு அடங்கி வாழ்வதை வெட்கம் என்று உணர் வாயா? என் ஆத்மாவுக்கு சாந்தி அளிப்பாயா தமிழா?

முருகா! உன்னை நான் பூஜித்துவந்த பலனுக்காக வாவது, நானடைந்த இந்த அவமானத்தை நீக்க எனக்கருள் புரிவாயா?

(தன் கைகளினாலேயே தூக்குக் கயிற்றைக் கழுத்தில் மாட்டிக்கொண்டு, நின்றுகொண்டிருந்த நாற் காலியை கால்களினால் எகிறிவிடுகிறார். உயிர் நீத்த கட்டபொம்மன் ஆவி புகழுலகிற்குச் செல்கிறது.)

வாழ்க தாய்த்திருநாடு!

தமிழ்நாடு பிரஸ், 4, கீழ பட்டமார்தெரு, **மதுரை :—54.**